24 SEP 1998

සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**ஆசனமகிமை!**

சித்தெறும்புத் தோலுரித்துச் சிறுநண்டின் ஓடெடுத்து
வத்தக் கடலிறைக்கும் வண்மையினர் — செத்ததையும்
மீழுவிப்பார் சங்கரியார் மெய்யன்பர்: பார்
ஆளுமன்ற ஆசனத்தினால்!

— ஈழமோகம்

இதழ் 154 செப்.03 — செப்.01, 1998 விலை ரூபா 10.00

## வவுனியா: விலங்குடன் தப்பிய இளைஞன்!

## லிங்கநகர்: எரிந்து கொண்டிருக்கும் நேரம்!

## மட்டு:
## கள்வனும் அவனே,
## விதானையும் அவனே!

## கிழக்கு: மண் எங்களுடையது,
## முதல் உங்களுடையது!

## முல்லைக் கடலில்
## கடற்படைக்குத் தலையிடி!

## யாழ்.: மீட்பர்கள் செய்த கொலை!



## தொடரும் தணிக்கை 91 வது நாள்

# சம்பூர் சமா!

மூதூரைச் சேர்ந்த சம்பூர் கிராமத்தில் ஒகஸ்ட் 19ம்திகதி அதிகாலை முதல் பிற்பகல் வரையிலான இராணுவ நடவடிக்கை ஒன்று நடந்து முடிந்திருக்கிறது.

விடுதலைப் புலிகளைச் சுற்றி வளைக்க முயன்ற இராணுவத்தினர் பலத்த இழப்புகளிடையே மூன்று விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர். மல்லிகைத் தீவைச் சேர்ந்த சேகர், சம்பூரைச் சேர்ந்த தீப்பொறி, வன்னியைச் சேர்ந்த மதிவாணன் ஆகியோரே உயிரிழந்த விடுதலைப் புலிகளாவர். இராணுவத் தரப்பில் இழப்பு இரண்டே தான் என்று அரச செய்தி ஊடகங்கள் கூறிக் கொண்டாலும் உண்மையான தொகை அதிகம் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினர் ஏறத்தாழ இராணுவ நடவடிக்கையை முடித்துக் கொண்டு திரும்பிய வேளையில் எதிர்ப்பட்ட மூன்று குடும்பஸ்தர்களைச் சுட்டுக் கொன்றதுடன் அவர்களது ஆணுறுப்புக்களையும் வெட்டியிருக்கிறார்கள். இராணுவச் சுற்றிவளைப்புக்குப் பயந்து பற்றைக் காடுகளுக்குள் மறைந்திருந்தவர்களே இவ்வாறு கொல்லப் பட்டவர்கள்.

இவர்களில் இருவர் சகோதரர்கள். சித்திரவேல் குணராசா (41), சித்திரவேல் மாணிக்கராசா (35) இருவரும் நான்கு பிள்ளைகளின் தகப்பன் மாருமாவர். மற்றையவர் தாமோதரம் சிவகுமார். மூன்று குழந்தைகளின் தந்தையான இவருக்கு வயது30. வயிரமுத்து நல்லம்மா என்ற பெண்மணியும் ஷெல் வீச்சுக்குப் பலியாகியுள்ளார்.

ஷெல் வீச்சு இராணுவம் வெளியேறிய பின்னர் நிகழ்ந்திருக்கிறது. பேச்சிமுத்து துரைரத்தினம், சி.சிறிதரன் சின்னத்தம்பி சந்திரசேகரம், சித்திரவேல் அழகேந்திரன், பத்மகாந்தன் தேவகாந்தன் ஆகியோர் ஷெல் வீச்சினால் காயமடைந்துள்ளனர். மாரிமுத்து மயில்வாகனம் என்பவரது வீடு தரைமட்டமாகியுள்ளது.

இது ஒருபுறமிருக்க திருகோணமலைக் கடலில் ஒகஸ்ட் 22ம் திகதியன்று காலையில் படகு ஒன்று தகர்க்கப்பட்ட சம்பவமும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் இடம்பெற்றிருக்கிறது. சல்லியைச் சேர்ந்த மீனவர்களின் படகே இவ்வாறு தகர்க்கப்பட்டிருக்கிறது. நிதானமாகக் கடலில் வைத்து இவர்களைச் சோதனையிட்ட படையினர் சாதாரண மீனவர்களே என்று உறுதிப்படுத்திய பிறகு இருவரையும் தாக்கி பின் இன்னொரு படகை அழைத்து அவர்களை அதில் ஏற்றி அனுப்பி விட்டுப் படகைத் தகர்த்திருக்கிறார்கள்.

இச்சம்பவம் நகரை அண்மித்த கடற்பரப்பில் இடம் பெற்றிருக்கிறது. இந்த இடத்திலிருந்து சுமார் 15 மைல்களுக்கப்பால் மூன்று மீனவர்கள் சுடப்பட்டிருக்கின்றனர். அலஸ் தோட்டத்திலுள்ள அகதிமுகாமைச் சேர்ந்த பரமானந்தன், கணேஸ், பரந்தாமன் ஆகியோரே சலப்பையாற்றுக்கு அருகில் கடலில் வைத்துக் சுட்டுக் காயப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். ஆனால், அரச செய்தி ஊடகமோ இரண்டுக்கும் முடிச்சுப் போட்டு யுத்தமொன்று இடம்பெற்ற மாயையைத் தோற்றுவித்து விட்டன.

இதேபோல் 28ம்திகதி சல்லியைச் சேர்ந்த பிறிதொரு படகு கடற்படை வள்ளத்தினால் மோதித் தகர்க்கப் பட்டிருக்கிறது. படகு இரண்டாகப் பிளந்து உபகரணங்களுடன் அமிழ்ந்து விட்ட நிலையில் மீனவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர்த்தப்பி கரைக்கு நீந்தி வந்திருக்கின்றனர். தங்கவேலாயுதம் காந்தரூபன், நவரத்தினம் சசிகரன் ஆகியோரே தப்பி வந்தவர்களாவர். இந்தச் சம்பவம் அதிகாலை 1.30 மணியவில் இடம் பெற்றிருக்கிறது. பெற்றோல் மாக்ஸ் வெளிச்சத்துடனிருந்த படகு மேல் ஏன் கடற்படையினர் மோதினார்கள் என்பது புதிராக இருக்கிறது என்கின்ற மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவும் அஞ்சுகிறார்கள்.

கடலுக்குச் செல்லும் மீனவர்கள் அனைவரும் காவலரணில் தங்கள் விபரங்களைக் கொடுத்துவிட்டே தினமும் மாலை வேளைகளில் கடலுக்குச் செல்கிறார்கள். அதேபோல் மறுநாள் காலையில் கரைக்கு வந்ததும் தாங்கள் திரும்பிய செய்தியை அதே காவலரணுக்குச் சென்று அறிவிக்கிறார்கள். இவ்விதிகள் கண்டிப்பான முறையில் அமுல் நடத்தப்படுவதுடன், சூரியன் மறையு முன்னர் கடலுக்குச் சென்று சூரியன் உதித்தபிறகே கரைக்குத் திரும்ப வேண்டும் என்ற உத்தரவும் நடைமுறையிலிருக்கிறது.

இவற்றுக்கெல்லாம் அடிபணிந்து நடக்கின்ற மீனவர்கள் மேல்தான் கடற்படையினர் வீரம் காட்டுகிறார்கள் என்பது பெரிய சோகம் தான்!

**திரிபுரன்**

# மீட்பர்கள் செய்த கொலைகள்!

**"பதினான்கு வருட புலிகளின் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து பாதுகாப்புப் படையினர் யாழ்ப்பாண மக்களை மீட்டெடுத்து யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு நிம்மதியான கௌரவமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்"** இவை யாழ்ப்பாண - பருத்தித்துறை வீதியில் ஆங்காங்கே காணப்படும் வாசகங்கள்.

யாழ்ப்பாணத்தைப் படையினர் பாசிசப் புலிகளிடமிருந்து மீட்டெடுத்த பின்னர் இருநூறுக்கு மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். நான்கு பெண்கள் பாலியல் வல்லுறுவுக்குட்படுத்தப்பட்ட பின் கொல்லப் பட்டுள்ளனர். இரவு வேளை ஊரடங்கு நேரத்தில் போக்குவரத்து வசதியில்லாத காரணத்தால் மூன்று பெண்கள் மரணமடைந்துள்ளனர் [illegible]தை விட 637 பேர் காணாமல் போயுள்ளனர்.

1996ம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு யாழ்ப்பாணத்தில் படையினரால் கொல்லப்பட்டவர்களின் விபரங்கள் இங்கு தரப்பட்டுள்ளன. இவற்றில் ஊரடங்கு வேளையில் நடமாடிய போது கொல்லப் பட்டவர்களின் விபரமும் வன்னியிலிருந்து திரும்பிய போது கடலில் வைத்து சுட்டுக் கொல்லப் பட்டவர்களின் விபரமும் சேர்க்கப் படவில்லை.

| திகதி | பெயர் வயது முகவரி | சம்பவம் |
|---|---|---|
| 04.06.96 | டொக்டர் ஏபிரகாம் | ஸ்ரான்லி வீதி குண்டுவெடிப்பை அடுத்து மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்து கொழும்பில் மரணம். |
| 06.07.96 | கதிரன் கனகு, (53), மந்துவில். | துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் சடலம் மீட்பு. |
| 28.07.96 | எஸ். இராமநாதன், சுதுமலை. | காலை 6.30 மணிக்கு காக்கைதீவுக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற போது சூடுபட்டு மரணம். |
| 27.07.96 | எஸ். சிவானந்தம், (35), அச்சுவேலி. | வல்லைக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற போது சூடுபட்டு மரணம். |
| 28.07.96 | எஸ். கிருஷ்ணபிள்ளை, (55), மந்துவில். | வீடுபார்க்கச் சென்றபோது சூடுபட்டு மரணம். |
| 08.08.96 | கே. குலசிங்கம், (21), ஆனைக்கோட்டை. | கடலில் வைத்து சூடு. |
| 23.08.96 | எஸ். சசிகரன், (21), தெல்லிப்பழை. | புலிகளுடனான மோதலையடுத்து துப்பாக்கிப் பிரயோகம். |
| 04.09.96 | வி. தவச்செல்வன், (08), இருபாலை. | மிதிவெடியில் காயமடைந்து மரணம். |
| 04.09.96 | எஸ். சரவணபவான், (24), சரசாலை. | மிதிவெடியில் காயமடைந்து மரணம். |
| 21.09.96 | எம். ஆறுமுகம்,(55), எழுதுமட்டுவாள். | ஷெல் தாக்குதலில் மரணம் |
| | என். ஸ்ரீஸ்கந்தராசா, (49), புலோப்பளை. | ஷெல் தாக்குதலில் மரணம் |
| | எஸ். தயாபரன் ,(16), புலோப்பளை. | ஷெல் தாக்குதலில் மரணம் |
| | எஸ். கார்த்திகா, (13), புலோப்பளை. | ஷெல் தாக்குதலில் மரணம் |
| | எஸ். சுகுமார், (15), இயக்கச்சி. | ஷெல் தாக்குதலில் மரணம் |
| | சுமணன் ,(08), இயக்கச்சி. | ஷெல் தாக்குதலில் மரணம் |
| 23.09.96 | ஏ.அருளரனந்தம், (26), நெல்லியடி. | பஸ் கண்ணிவெடியில் சிக்கியது. சாரதியும் நடத்துநரும் பலி. |
| | எஸ். குணசிங்கம்,(40), நெல்லியடி | பஸ் கண்ணிவெடியில் சிக்கியது. சாரதியும் நடத்துநரும் பலி. |
| 24.09.96 | டி. முரளிதரன், (23), | வடமராட்சி இராணுவத்தால் அடித்துக் கொல்லப்பட்ட பின் புதைக்கப்பட்டார். |
| 31.09.96 | ஏ.பாலையா, (55), ஊர்காவற்துறை. | தட்டாதெருச் சந்தியில் இடம்பெற்ற மோதலையடுத்து துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டார். |
| | மேலும் இருவர் | |
| 02.10.96 | எஸ்.சிவநேசன், (27), வரணி. | புலிகள் படையினர் மோதலில் இடையில் சிக்கி மரணம். |
| 20.10.96 | யூ. பூரணரத்தினம், வல்வெட்டித்துறை. | வன்னியிலிருந்து வந்தபோது புங்குடுதீவுக் கடலில் வைத்துசூடு. |
| 25.10.96 | வி. அருண்குமார், (21), சுன்னாகம். | ஷெல் தாக்குதலில் மரணம். |
| 26.10.96 | கே. இராசமணி, (55) | வன்னியிலிருந்து படகில் வந்தபோது கடற்படையினர் சுட்டு மரணம். |
| | கே.செல்வரத்தினம், (33) | வன்னியிலிருந்து படகில் வந்தபோது கடற்படையினர் சுட்டு மரணம். |
| 01.11.96 | கல்வயல் சாவகச்சேரி | துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 3 சடலங்கள் மீட்பு. |
| 02.11.96 | பி.ரட்ணகுமார், (29), மானிப்பாய். | துப்பாக்கிச்சூடு. |
| 16.11.96 | சி.கணேசன், (58), மானிப்பாய். | துப்பாக்கிச்சூடு. |
| 17.11.96 | எழுதுமட்டுவாள். | புதைகுழியிலிருந்து 6 சடலங்கள் மீட்பு. |
| 16.12.96 | வி.சின்னத்தம்பி, (71), கல்வியங்காடு. | மிதிவெடியில் காயமடைந்து மரண்ம். |
| 18.12.96 | கே.விஜயானந்தன், (21), மீசாலை. | துப்பாக்கிச்சூடு. |
| 21.12.96 | தனங்கிளப்பு | வன்னிக்கு ரயர் ரியூப் கடத்தினர் என இருவர் சுட்டுக்கொலை. |
| 22.12.96 | எஸ். அரியதாஸ், (21), | சூட்டுக்காயத்துடன் சடலமாக மீட்பு. |
| | இன்னுமொருவர் | சூட்டுக்காயத்துடன் சடலமாக மீட்பு. |
| 29.12.96 | சி.தெய்வேந்திரம், (36), சங்குவேலி. | கோண்டாவில் இடம்பெற்ற கண்ணிவெடிப்படையடுத்து படையினர் சூடு. |
| | க.நாகராசா, (42), உடுவில். | படையினர் சூடு. |

1997 விபரங்கள் அடுத்த இதழில்

# என்னைக் காப்பாற்றுங்கள் சுவாமி!

வவுனியா இறம்பைக்குளம் கத்தோலிக்க ஆலயம். காலைப் பூசை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நவரட்ணம் அடிகளார் வழிபாடியற்றிக் கொண்டிருக்கிறார். ஏறத்தாழ இருநூறு பேரளவில் வழிபாட்டில் பங்குபற்றிக் கொண்டிருக்கின்றனர்.

தங்களைச் சூழ்ந்திருக்கும் துன்பத்திலிருந்தும் பாவங்களிலிருந்தும் தம்மை விடுவிக்குமாறு வேண்டுதல்கள்.

சிலுவையில் அறையப்பட்ட யேசுவின் திருவுருவத்திலிருந்து வடிகிறது இரத்தம்.

திடீரென எங்கிருந்தோ ஓடி வந்த ஒரு இளைஞன் நவரட்ணம் அடிகளாரின் கால்களைப் பற்றிக் கொண்டு கதறுகிறான். "என்னைக் காப்பாற்றுங்கோ, என்னைக் காப்பாற்றுங்கோ"வென. அவன் சாறம் மட்டுமே அணிந்திருந்தான். சேர்ட் இல்லை. கால்களில் விலங்கு முகத்தில் தாடி.

அவனுடைய குரலும் உயிருக்காய்க் கெஞ்சுகிறது. அடிகளார் அவனைத் தூக்கி நிறுத்த முனைகிறார்.

அவன் அவரின் கால்களை இறுகப் பற்றியபடி கதறுகிறான்.

அந்தச் சில நிமிடங்களுள் அவனைத் துரத்தி வந்த இருவர் தாங்கள் "புளொட்" இயக்கத்தவர்கள் என்றும், அவன் தமது ஆள் என்றும், அவனைத் தம்முடன் அனுப்புமாறும் கேட்கின்றனர். அவனோ அடிகளாரின் கால்களை விட்டபாடில்லை. அடிகளாருக்கோ திரிசங்கு சொர்க்க நிலை.

இந்த இழுபறியால் ஏற்பட்ட அல்லோல கல்லோலத்தில் அருகில் இருந்த பொலிஸ் காவலரணில் இருந்த பொலிஸார் ஆலயத்தைச் சுற்றி வளைக்க, அந்த இளைஞனைக் கலைத்து வந்த புளொட்டினர் நிலைமை சிக்கலடையவே பின் புறத்தால் பாய்ந்து ஓடிவிட்டனர்.

அந்த இளைஞன் இப்போது வவுனியா பொலிசில் இருக்கிறான். இது தொடர்பாகச் சரிநிகர் திரட்டிய தகவல்கள் இவை,

கிளிநொச்சி, இல.117 ஸ்கந்தபுரம் என்ற விலாசத்தைக் கொண்ட பரராஜசிங்கம் குகநாதன் (25) என்ற இளைஞனே அவன். ஜயசிக்குறுய் இடம்பெயர்ந்து வவுனியா பூந்தோட்டத்தில் உள்ள 5ஆம் யுனிட் அகதி முகாமில் வசித்து வந்திருக்கிறான். இந்த ஆண்டு ஜனவரி 17ஆம் திக[illegible] புளொட்டில். சேர்ந்திருக்கிறான். சிறிது காலத்திலேயே அதிலிருந்து விலகி விட்டான். திரும்பவும் முகாம் வாழ்க்கை.

ஜூன் 13ஆம் திகதி புளொட்டினர் இவரைக் கைது செய்து கொண்டு சென்றனர். புளொட்டின் சித்திரவதை முகாமொன்றில் கால்களுக்கு விலங்கிடப்பட்ட நிலையில் வைத்திருக்கப்பட்டார்.

விலங்கை உடைத்துக் கொண்டு அவர் வெளியே தப்பி வந்து நவரட்ணம் அடிகளாரின் கால்களில் விழுந்திருக்கிறான்.

ஏற்கெனவே மலர் மாளிகை என்ற பெயருடன் ஒன்றும், வேறும் பலவுமாக பளொட் சித்திரவதை முகாம்கள் வவுனியா எங்கும் பரந்து கிடக்கிறது என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டு சித்திவரவதை செய்யப்படும் இளைஞர்கள் எத்தனை பேர் என்று யாருக்குத் தெரியும்?

காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர் கணேசமூர்த்தி சுஜிதாஸ், விசாரணை என்ற பெயரில் சித்திரவதைகளுக்கென புளொட்டினால் அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் போன கதையும் சில மாதங்களுக்கு முன்பு தான் நடந்தது. இந்த வருடம் மட்டும் வவுனியாவில் 21 பேர் காணாமல் போனதாக இன்னொரு தகவல் கூறுகிறது.

அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறியப் புறப்பட்ட கழக வீரர்கள், சிறீலங்கா அரசின் சித்திரவதை முகாம்களை ஒத்த முகாம்களில் கால்களில் விலங்குகள் பூட்டி அடைத்து வைத்து சித்திரவதை செய்வதை என்னவென்பது?

## ஒலிப்பேழை வெளியீடு

கனடாவில் இயங்கி வரும் அருவி வெளியீட்டகத்தினால் கவிஞர்கள் மஹாகவி, சண்முகம் சிவலிங்கம், வ.ஐ.ச.ஜெயபாலன், சேரன் ஆகியோரின் கவிதைகள் பாடல்களாக்கப்பட்டு வீ.திவ்வியராஜனின் மெட்டமைபபில், எஸ்.வீ.வர்மனின் இன்னிசையில், 'புலரும் வேளையில்' எனும் பெயரில் வெளியிடப்பட்ட இசைத்தட்டு/இசைப் பேழைக்கான அறிமுக அரங்கு எதிர்வரும் 04—09—1998 மாலை 5.30க்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் திரு.இ.சிவகுருநாதன் தலைமையில் நடைபெறும். இவ் விழாவில் மஹாகவியின் துணைவியாரான திருமதி பத்மாசினி உருத்திராமூர்த்தி அவர்களை கௌரவிக்கும் வைபவமும் இடம்பெறும் என அருவி வெளியீட்டகத்தினர் அறிவித்துள்ளனர்.

## திருத்தம்

சென்ற இதழில் வெளியான "மனநோய் என்றால் என்ன?" என்ற பெயரில் வெளியான கட்டுரையை தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் ஹெல்த் எனும் சஞ்சிகையிலிருந்து மறுபிரகரம் செய்யப்பட்ட கட்டுரையாகும்

# மட்டு : வாழைச்சேனையில் ஒரு கணக்கெடுப்பு !

மனிதாபிமானம மரணித்துப்போக இந்த நாட்டில் துப்பாக்கிகளும், எறிகணை வீச்சும், சுற்றிவளைப்பும், காணாமல் போதல்களும் மரத்துப் போய் விட்டது எம்மக்களுக்கு. இதற்கு விதிவிலக்கல்ல எமது வாழைச்சேனை மக்களும். அரச பயங்கரவாதத்தில் ஆடிப்போயிருக்கும் இப்பகுதி மக்களுக்கு துப்பாக்கி வேட்டும், எறிகணை வீச்சுச் சத்தமும் கேட்காத நாள் ஏதுமில்லை. இவர்களில் எத்தனை குடும்பங்கள் இராப்பகலாய் இரத்தக்கண்ணீர் வடிக்கின்றனர்? வறுமையில் வாடுகின்றனர் என்பதை யாரறியப் போகிறார்கள்? தென்னிலங்கையில் மக்களுக்குப் பாதுகாப்பு என்று சொல்லிக் கொள்ளும் படையினர் இங்கு தங்களைப் பாதுகாக்க தீர்க்கின்ற வேட்டுக்களில் வீழும் மக்களின் தொகையை நாளுக்கு நாள் எண்ணிக் கொண்டே இம்மக்கள் வாழுகின்றனர்.

தென்னிலங்கையில் கிரிக்கெட் ஆட்ட ஓட்டங்களை எண்ணுகின்ற வேளையில் கிழக்கில் தினமும் துப்பாக்கி வேட்டினாலும், எறிகணை வீச்சினாலும் விழும் மனித சடலங்களையே எண்ணிக் கணக்கிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையே உள்ளது. இராணுவத்தினர் வீதிக்கடமையில் ஈடுபடுவதோ மக்களுக்கு மரணப் பொறியாக இருக்கிறது. அண்மைக் காலங்களில் துறைமுக இராணுவத்தினரால் இருபகுதி மக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துவருகின்றனர். இத்துறைமுக இராணுவ முகாமில் இருந்தே எறிகணைகள் கண்மூடித் தனமாக ஏவப்படுகிறது. இவை ஆற்றோரமாகவுள்ள வீடுகளிலேயே வீழ்ந்து வெடிக்கின்றன. இதனால் ஆற்றை அண்டிய பகுதிகளில் வாழும் மக்கள் தினமும் எறிகணையை எதிர் பார்த்தே வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதேவேளை காகிதஆலை முகாமில் இருந்து ஏவப்படும் எறிகணைகள் கல்மடு பண்டிமடு பகுதிகளில் உள்ள அகதி முகாம்களில் கூட வீழ்ந்து பலர் காயமடைந்தும், இறந்தும் உள்ளனர். ஏழு ஆண்டுகளாக அகதிகளாக வாழும் இவர்களுக்கு இந்த எறிகணை வீச்சு பெரும் தொல்லையாகி விட்டது. இவ்வருடம் ஜனவரி மாதம் 25ம்திகதி துறைமுக பேத்தாளை இராணுவத்தினரால் வாழைச்சேனை கண்ணகிபுரம், கண்ணன் கிராமம், புதுக்குடியிருப்பு கிராமங்கள் என்பன சுற்றிவளைக்கப் பட்டு 30க்கும் மேற்பட்டோரை இராணுவத்தினர் உழவு இயந்திரத்தில் ஏற்றி வேகமாகச் செல்லும்போது இயந்திரப் பெட்டிகுடை சாய்ந்து 19பேர் காயமடைந்தனர். இவர்களில் பலருக்கு முள்ளந்தண்டு முறிந்தும், இடுப்பு எலும்பு முறிந்தும் இன்னமும் பூரண குணமடையாதவர்களும் இருக்கின்றார்கள். இதில் கல்மடு அகதிமுகாமைச் சேர்ந்த மாரிமுத்து ஆண்டி (64) என்பவரும் இடுப்பு எலும்பு முறிந்து இன்னமும் பூரண குணமடையாது சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சுற்றிவளைப்பின்போது ஒரு பெண் உட்பட 18பேர் பேத்தாளை இராணுவத்தினரால் தாக்கப்பட்டு வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற சம்பவங்களும் உண்டு. துறைமுக பேத்தாளை இராணுவ முகாமுக்கு பொறுப்பதிகாரியாக இருந்த 'ஒபயசேகரா' என்பவரும் இவரது சகாக்களுமாகச் சேர்ந்து இப்பகுதி மக்களைப் பலவகையில் துன்புறுத்தியிருக்கின்றனர். இவர்களின் பாலியல் சேட்டைகளுக்கும் பல பெண்கள் உட்பட்டிருக்கின்றனர். இரவு வேளைகளில் சோதனை என்ற போர்வையில் வீடு வீடாக ஏறி இறங்குகிறார்கள். தனிப்பட்ட பழிவாங்கல்களுக்குப் பெயர்போனவர் ஒபயசேகர. இவரால் கைது செய்யப்பட்டு காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டு குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்ட ஓட்டமாவடிப் பிரதேச செயலாளரின் பதவி நிலை உதவியாளரான எஸ். சிவகுருநாதன் வீட்டுக்கு 22.6.98 அன்று இவரது சகாக்களால் கைக் குண்டு வீசப்பட்டது. தான் நினைத்ததைச் சாதிக்க முடியாததால் இவ்வாறான ஒரு திட்டத்தை மேற்கொண்டார்.

இவ்வருடம் ஜனவரி முதல் ஓகஸ்ட் வரை வாழைச்சேனை பிரதேச செயலகப்பிரிவில் துப்பாக்கிச் சூட்டினாலும், எறிகணை வீச்சினாலும் 24 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என பிரதேசச் செயலக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதில் பல சம்பவங்கள் இராணுவத்தினரால் வேண்டுமென்றே தனிப்பட்ட முறையில் செய்யப்பட்டவையாகத் தெரிகிறது.

வாழைச்சேனை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கந்தசாமி ஸ்ரீகாந்தன் (22) துறைமுக இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். சம்பவ தினம் அதிகாலை 5.15 மணியளவில் வீட்டினுள் நுழைந்த இராணுவத்தினர் நித்திரையில் இருந்த ஸ்ரீகாந்தனையும் அவருடைய அண்ணன் க. ஸ்ரீகரன் (26) எழுப்பிய படையினர் ஸ்ரீகரனின் வாயை துணியால் கட்டி வாசலுக்கு கொண்டு வந்து இரு இராணுவத்தினர் காவல் நிற்க ஏனையவர்கள் ஸ்ரீகாந்தனை அழைத்துக் கொண்டு வெளியில் சென்றனர்.

01.01.1998 முதல் 31.08.1998 வரை வாழைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் துப்பாக்கிச் சூட்டினாலும், எறி கணைகளாலும் ஏற்பட்ட சேத விபரங்கள்.

| திகதி | பெயர் | மரணத்துக்கான காரணம் | மரண விசாரணைத்தீர்ப்பு |
|---|---|---|---|
| 20.01.98 | த.திகராசா | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 26.01.98 | எஸ்.செல்வராசா | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 26.01.98 | எஸ்.சிவபாலன் | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 26.01.98 | எஸ்.பாக்கியவதி | எறிகணைவீச்சு | துப்பாக்கிச்சூடு |
| 06.02.98 | வி.தயாளகுமார் | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 11.03.98 | பீ.சுசிலா | குண்டுவீச்சு | துப்பாக்கிச்சூடு |
| 23.03.98 | மு.தியாகராசா | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 07.04.98 | ந.மகேஸ்வரி | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 19.04.98 | ந.அமிர்தலிங்கம் | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 11.05.98 | சா.சின்னத்தம்பி | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 21.06.98 | ப.பரிமலர் | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 25.06.98 | ந.பத்மநாதன் | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 09.07.98 | ந.லோகநாதன் | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 13.07.98 | த.காளிராசா | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 13.07.98 | பி.செல்லதுரை | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 13.07.98 | வை.தங்கவடிவேல் | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 13.07.98 | க.தவசீலன் | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 25.07.98 | க.ஸ்ரீகாந்தன் | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 27.07.98 | பூ.சோமநாதன் | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 18.07.98 | எஸ்.பாலசிங்கம் | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 11.8.98 | பி.வில்லியம் | துப்பாக்கிச்சூடு | கொலை |
| 14.8.98 | பொ.வசந்தகுமாரி | துப்பாக்கிச்சூடு | துப்பாக்கிச்சூடு |
| 21.8.98 | மோ.கோகுலரஜனி | துப்பாக்கிச்சூடு | கொலை |

| விபரம் | தொகை |
|---|---|
| எறிகணையினாலும் துப்பாக்கிச் சூட்டினாலும் சேதமடைந்த வீடுகள் | 53 |
| ஊனமுற்றோர் | 94 |
| மரணித்தோர் | 24 |

→ 12

# அவர் களுத்துறையில்; மணப்பெண் = குருநாகல் பொலிஸில் !

விடுதலைப் புலிகளுடைய பகுதிகளுக்கு மனிதாபிமான சேவையின் அடிப்படையிலான கடமைகளுக்காகச் சென்று வந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளையைச் சேர்ந்த சாரதியான துரைச்சாமி பத்மநாதன் புலிகளைக் கண்டது தொடர்பாக பொலிசாருக்குத் தகவல் தெரிவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டில்,தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் தற்போது களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ளார். அதுமட்டுமல்லாமல், இவருடைய மணப்பெண்ணான இளம் பெண்ணும், அண்மையில் குருணாகலை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் என்ன காரணத்திற்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறித்து அவருடைய பெற்றோருக்குத் தெரிவிக்கப்படவில்லை. இதன் காரணமாக அவர்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளதுடன் என்ன செய்வது என்று தெரியாதவர்களாக இருக்கின்றார்கள்.

இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள மன்னார், வவுனியா பகுதிகளுக்கும், இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பகுதிகளுக்கும் இடையே உயிலங்குளம் இராணுவ வீதிச் சோதனைச் சாவடியூடாக மக்கள் போக்குவரத்து செய்கின்றார்கள். இவர்களும், புலிகளை நாளாந்தம் சந்திக்கின்றார்கள். அவர்களுடைய நடைமுறைகளுக்கு அமைய வாழ்க்கை நடத்தி வருகின்றார்கள். அங்குள்ள அரசாங்க அதிகாரிகளும் அவ்வாறே. இவர்கள் எல்லோரும் புலிகள் பற்றிய தகவல்களைப் பொலிசாருக்குத் தெரிவிக்கவில்லை என்று குற்றம் சாட்டி பொலிசார் கூண்டுக்குள் ஏன் அடைக்கவில்லை?

கடந்த மே மாதம் 29 ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராகிய டாக்டர் ஜயலத் ஜயவர்தனவும், கிறிஸ்தவ மதகுருவாகிய வண.பிதா. அலெக்சாண்டர் அடிகளாரும், வன்னிப்பகுதியில் உள்ள மடு மாதா கோவிலுக்குச் சென்றார்கள். இவர்களது யாத்திரைக்குரிய பிரயாணத்திற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து முறையான விண்ணப்பத்தின் மூலம் பெற்றிருந்தார்கள்.

பாராளுமன்ற உறுப்பினராகிய ஜயலத் ஜயவர்தன இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராக இருப்பதனாலும், வவுனியாவில் இருந்து தனியார் வாகனங்கள் வன்னிப்பகுதிக்குள் அனுமதிக்கப்படாததனாலும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளையின் வாகனம் ஒன்றில் இவர்கள் இருவரும் வன்னிக்குப் பயணமானார்கள். இவர்களுடன், வவுனியா கிளையின் செயலாளரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்கு கிழக்கு மாகாண இணைப்பாளருமாகிய சிவநாதன் கிஷோர் வன்னிப் பகுதிக்கு செஞ்சிலுவைச் சங்க அலுவல்களுக்காகச் சென்ற வேளையில் இவர்களின் பயணமும் நடைபெற்றது.

இவர்கள் வவுனியாவில் இருந்து புறப்படுவதற்கு முன்னர், பாதுகாப்ப அமைச்சின் அனுமதி கடிதத்துடன் சென்று, வவுனியாவில் உள்ள பாதுகாப்பு இணைப்பதிகாரியாகிய பிரிகேடியர் சீவலி வணிகசேகரவையும் சந்தித்து அளவளாவிவிட்டு மடுக்கோவிலுக்கான தமது பயணத்தைத் தொடர்ந்தார்கள். இவர்கள் பாதுகாப்பு அமைச்சிடம் கோரியிருந்த அனுமதியின்படி, ஜீன்மாதம் முதலாம் திகதியன்று வவுனியாவுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

இவர்களுடைய பிரயாணம் இலங்கையின் பொதுவான சட்ட விதிகளுக்கு அமைவாகவும், தற்போதைய அவசரகாலச் சட்டத்திற்கமைய, யுத்தச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, விதிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடைமுறைகளுக்கு உரிய பிரமாணங்களுக்கு உட்பட்டதாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எந்த ஒரு கட்டத்திலும், அவர்களுடைய பிரயாணம் சட்ட விதிகளுக்கு முரணானதாக அமைந்திருக்கவில்லை. ஏனென்றால், அவர்களின் பிரயாணத்தின் போது எந்த ஒரு இராணுவ வீதிச் சோதனைச் சாவடியிலும் எந்த ஒரு இராணுவ அதிகாரியும் அவர்களது பிரயாணம் குறித்து கேள்வி எழுப்பவில்லை.

இந்த நிலையில், 5 நாட்களின் பின்னர், ஜீன் மாதம் 6 ஆம் திகதி, இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரியாகிய தன்னை பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அத்தியட்சகராகிய நந்தசேன முனசிங்க என்பவர், வவுனியா புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தில் வைத்து விசாரணை செய்து, வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொண்டதாக சிவநாதன் கிஷோர் தெரிவித்தார். அன்று காலை 11.30 மணிக்குத் தொடங்கிய விசாரணை பிற்பகல் 2 மணிவரையும் நீடித்துள்ளது. அதே தினம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளையின் சாரதியாகிய துரைச்சாமி பத்மநாதன் வவுனியாவில் இல்லாதிருந்ததனால், அவர் மறுநாளான 7 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டதாகவும் கிஷோர் தெரிவித்தார்.

அன்று காலை 8.30 மணியளவில், சாரதி பத்மநாதனைப் பொலிசாரின் வேண்டுகோளுக்கு இணங்க பொலிஸ் புலனாய்வுப் பிரிவில் கொண்டு சென்று விட்டதாகவும், விசாரணையின் பின்னர், காலை 11.30 மணியளவில் அவரைப் பொலிசார் மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்து தனது வீட்டின் முன்னால் இறக்கி விட்டுச் சென்றதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறு விடப்பட்ட பத்மநாதன் பிற்பகல் 2 மணியளவில் மீண்டும் விசாரணைக்குத் தேவைப்படுவதாகக் கூறப்பட்டு, மாலை 4 மணிக்கு அழைத்துச் சென்றுவிடப்பட்டார். அன்று இரவும் விசாரணை நடைபெற்று, புலனாய்வு பிரிவில் அவரைத் தங்க வைப்பதற்கு இடம் இல்லாத நிலையில், மறுநாள் காலை 10 மணிவரையும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அதே தினம் அவர் மேல் விசாரணைக்காகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டதாக, வவுனியா பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் லெஸ்லி சரத் எதிரிசூரிய செஞ்சலுவைச் சங்க அதிகாரியாகிய கிஷோருக்கு அறிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பொலிஸ் தலைமையகத்தின் 4 ஆம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பத்மநாதன் ஜீன் மாதம் 10 ஆம் திகதி மாலை 6 மணியளவில் கொழும்பில் நீதவான் ஒருவருடைய வீட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டு, அவருக்கு முன்னால் ஆஜர் செய்யப்பட்டு, மகர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டார். சுமார் 10 தினங்களுக்குப் பின்னர் அவர் களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகன சாரதியான பத்மநாதன் புலிகளின் பிரதேசங்களுக்கு அடிக்கடி போய் வந்துள்ளதனால், புலிகள் பற்றி தெரிந்திருந்தும், பொலிசாருக்குத் தகவல் கொடுக்கவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளதாம்.

துரைச்சாமி பத்மநாதன் சட்டத்திற்கு விரோதமான முறையில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், அவர் சட்டத்திற்கு விரோதமாகவே தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும், இதனால், அவருடைய கௌரவத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் ஜீன் மாதம் 29 ஆம் திகதி

→ 14

# "மண் எங்களுடையது, முதல் உங்களுடையது!"

-ஹஸீன்-

தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் உயிரும் பொருளாதாரமும் இருப்பும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதே உண்மை. கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இங்கு வாழும் முஸ்லிம்களின் பிரதான தொழில் விவசாயமே.

1985க்குப் பின் அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள தமிழ் - முஸ்லிம் மக்களின் பெருமளவான விவசாய நிலங்கள் செய்கை பண்ணப்படாமல் தரிசாகவே வீணடிக்கப்பட்டன. இந்நிலங்களில் விவசாயம் செய்யாது விட்டதற்கான பிரதான காரணம் பாதுகாப்புப் படையின் அனுமதி இல்லாமையே.

பாதுகாப்புப் படையின் அனுமதி இருந்தும் - விடுதலைப்புலிகளின் அனுமதியில்லாமல் அல்லது விடுதலைப் புலிகளின் எதேச் சதிகாரமான நடவடிக்கைகளால் பெருமளவு முஸ்லிம்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகள் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் செய்கை பண்ணப்படவேயில்லை. இதனால் இம் மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களின் பொருளாதாரம் மிகவும் பலவீனமடைந்துள்ளது. பொருளாதாரப் பலவீனமானது இம் மக்களின் கலாசார பண்பாட்டு சமூகக் காரணிகளில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை காணக் கூடியதாகவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் முஸ்லிம்களுக்கு சொந்தமான 35,000 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் செய்கைபண்ணப்படவில்லை. அம்பாறை மாவட்டத்தில் 22,000 ஏக்கர் விவசாய நிலங்கள் செய்கை பண்ணப்படவில்லை.

இந்நிலைமையானது 90 ஓகஸ்ட் மாதத்திலிருந்து இம்மாவட்டங்களில் நிலவுகிறது. விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுக்கெதிரான இனப் படுகொலையை கட்டவிழ்த்து விட்டு முஸ்லிம்களுக்கெதிராக கிழக்கில் பாரிய தாக்குதல்களை மேற்கொண்ட காலச்சூழலில் கிழக்கு மாகாணத்தின் பெருமளவிலான முஸ்லிம்கள் பொருளாதார இழப்புக்களுக்குள் சிக்கித் திணறினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி மக்களுக்குச் சொந்தமான படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள 15,000 ஏக்கர் நிலங்களும், ஏறாவூர் மக்களுக்குச் சொந்தமான செங்கலடி - பதுளை வீதியில் உள்ள இருபதாயிரம் ஏக்கர் நிலங்களும், ஓட்டமாவடி மக்களுக்குச் சொந்தமான கோரளைப் பற்று மேற்கு, பெண்டுகள் சேனை, பிரதேசங்களில் உள்ள நிலங்களும் செய்கை பண்ணப்படவில்லை.

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப் பற்று சாகம வீதியில் உள்ள 12,500 ஏக்கர் நிலங்களும், அக்கரைப்பற்று அம்பாறை வீதியில் அமைந்துள்ள 2500 ஏக்கர் நிலங்களும், மருதமுனை, நற்பிட்டிமுனை, சம்மாந்துறை முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலங்களும், பொத்துவில் பிரதேசத்தில் உள்ள 14,000 ஏக்கர் நிலங்களும் செய்கை பண்ணப்படாமல் விடுதலைப் புலிகளின் அனுமதி இல்லாமல் தரிசாகக் கிடக்கிறது.

90க்குப்பின் புலிகள் அம்பாறை, மட்டக்களப்பு முஸ்லிம் விவசாயிகளிடம் சொல்லும் கோட்பாடனது இம் மக்களின் விவசாயப் பயிர்ச்செய்கையின் எதிர்காலத்தை மிகவும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. ''மண் எங்களுடையது. முதல் உங்களுடையது'' என்பதே அக்கோட்பாடாகும்.

இக்கோட்பாட்டின் வெளிப்பாடானது இரு வழிகளில் வெளிப்பட்டிருக்கிறது. ஒன்று விடுதலைப் புலிகளின் அனுமதி இல்லாமல் இந் நிலங்களில் விவசாயம் செய்ய முடியாது என்பது, இரண்டு அனுமதியுடன் செய்யப்படும் விவசாயத்திற்கு கப்பம் வரி செலுத்தப்படல் வேண்டும் என்ற நிபந்தனை.

கடந்த போகத்தின் போது அம்பாறை மாவட்டத்தில் புலிகள் முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் நிலத்திற்கு வரியாக போகமொன்றுக்கு ஆயிரம் ரூபாவும், உழவு இயந்திரமொன்றுக்கு 50 ஆயிரம் தொடக்கம், [illegible] லட்சம் ரூபா வரையும் 1 மோட்டார் சைக்கிளுக்கு 25,000 ரூபாவும் கப்பமாக வசூலித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பெருமளவிலான பொன்விளையும் பூமிகள் விடுதலைப் புலிகளின் பொருளாதார வருவாய்க்காக விடுதலைப் புலிகளால் பயிர் செய்யப்படுகிறது. தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளின் விருப்பத்துடன் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளில் எதுவித குத்தகையுமில்லாமல் பயிர் செய்கின்றனர்.

85ற்குப் பின் பாதிப்படைந்த விவசாயத் தொழிலுடன் மிகவும் பலவீனமடைந்துள்ள முஸ்லிம் விவசாயிகள் தங்களுக்கு வாய்ப்பான பகுதிகளில் தங்கள் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். ஆனால், இன்று நெல்லின் விலை இறக்கம் காரணமாகவும் விவசாய இரசாயனப் பொருட்கள், ஊக்கிகளின் விலையேற்றம் காரணமாகவும் விவசாயத் தொழிலில் பெருமளவு இலாப மீட்ட முடியாத நிலை உள்ளது.

இந்த நிலையில் அக்கரைப்பற்று பகுதியில் புலிகள் முஸ்லிம் விவசாயிகளிடம் பெருமளவு கப்பம் கோருவதை அடுத்து அக்கரைப்பற்று விவசாய சங்கம் அக்கரைப்பற்று - சாகமவீதியில் உள்ள 12,500 ஏக்கர் நிலங்களில் விவசாயத்தில் ஈடுபடுவதில்லை எனப் பகிரங்கமாக முடிவெடுத்து அறிவித்துள்ளது.

ஏலவே பெருமளவு பாதிக்கப்பட்டிருந்த முஸ்லிம்கள், வாய்ப்பாகவுள்ள நிலங்களிலும் விடுதலைப் புலிகளின் கப்பம், வரி, வசூலிப்பால் விவசாயம் செய்ய முடியாதிருப்பது முஸ்லிம்களின் பொருளாதரத்தில் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் குண்டு வீசுவதை உணர்த்துகிறது.

விக்ரமபாகு எழுதுகிறார்...



# மூன்றாவது பண்டாரநாயக்காவினதும் கதி!

முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆரம்பத்திலும், பின்பு ஐ.தே.கவை விட்டு வெளியேறி ஸ்ரீ.ல.சு.க.வை ஸ்தாபித்தபோது கூட சிங்களமும், தமிழும் இந்த நாட்டின் அரசகருமமொழியாக இருத்தல் வேண்டும் எனும் நிலைப்பாட்டினையே கொண்டிருந்தார். ஆனால், பின்பு பதவி ஆசையால் உந்தப்பட்ட அவர் ''24 மணித்தியாலயத்தில் தனிச்சிங்களம் மட்டும்'' எனும் கோஷத்தை முன்வைத்து 1956ல் பிரதமர் பதவியை எட்டிப் பிடித்தார். இரவோடிரவாக தனிச் சிங்களச் சட்டத்தினையும் நிறைவேற்றினார். எவ்வாறாயினும் தமிழ் மகக்ளுக்கொரு சலுகை வழங்குவதற்காக பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தினை செய்தார். ஆனால், 1958ல் இனவாத சக்திகளின் கூக்குரலுக்கு அடிபணிந்து பின்வாங்கினார். ஒப்பந்தத்தை கிழித்தெறிந்தார்.

எனவே அந்த இனவாத சக்திகளை அவரால் கட்டுப்படுத்த முடியாமற் போய்விட்டது. நெற்காணிச்சட்டம் போன்ற சாதாரண முற்போக்கு நடவடிக்கைகளைத் தானும் அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. எனவே தான் அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டிருந்த இடதுசாரிகள் தூக்கி எறியப்பட்டனர். இறுதியில் ஒரு சில மாதங்களில் அவர் அந்த வலதுசாரி சக்திகளால் கொலை செய்யப்பட்டார்.

எந்தவொரு தலைவராவது வலதுசாரி பேரினவாத சக்திகளின் கைகளை மேலோங்க இடமளித்தால் அதே சக்திகள் அவரை தூக்கியெறிந்து விடும். இதுதான் முதலாவது பண்டாரநாயக்காவுக்கு நடந்தது. இன்றைய மூன்றாவது பண்டாரநாயக்கா ஆகிய சந்திரிகா அம்மையாருக்கும் அதே மாதிரி கதி ஏற்படக்கூடும். வரலாறு மீண்டும் நிகழ்வதுண்டு!

சந்திரிகாவும் அதே தவறுகளை இழைத்து வருவது கண்கூடு. தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அவர் பரந்துபட்ட அல்லது அதிக அளவிலான அரசியல் அதிகாரப்பரவலாக்கல் மற்றும் வேறு பல விடயங்களை அமுல் செய்யப்போவதாக உறுதியளித்திருந்தார். அவையெல்லாம் காற்றில் பறக்கவிடப்பட்டன. இன்று வடக்கிலும், தெற்கிலும் முழு அளவிலான படுபயங்கர செயல்களிலேயே அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

''பிரதி 'பாதுகாப்பு'அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தான் இன்றைய கதாநாயகன். நாட்டைக் காப்பாற்ற மறுபிறவி எடுத்த துட்டகைமுனு'' என சிங்கள பேரினவாதத்தின் நடமாடும் பொக்கிசமாகிய மாதுலுவாவே சோபித்த தேரர் அனுருத்தவை வாயாரப் புகழ்ந்து வருகிறார். சில மாதங்களுக்கு முன்பாக அரசாங்கத்தின் அதிகாரப்பரவலாக்கல் பொதிக்கு எதிராக அவரின் தலைமையில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அவர் எல்லாத் தெய்வங்களின் அனுக்கிரகத்தையும் நாடி நின்றார். எனவே தான் சுருங்கக் கூறின், சந்திரிகாவையும் அவரின் பொதியையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் அதே சக்திகளின் கதாநாயகனாகவே ரத்வத்தை விளங்கிக் கொண்டிருக்கின்றார்.

சந்திரிகா அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 4 வருடங்கள் கழிந்து விட்டன. யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.4வீதமாக உயர்ந்துள்ளது என மார்தட்டும் அதேவேளை தமிழர் தாயகத்தின் மீது வெற்றிவாகை சூடியுள்ளதாகவும், அதனையே மிக முக்கியமான சாதனையாகவும் சந்திரிகா எடை போட்டுள்ளார். ஆனால், உண்மை என்னவென்றால் யுத்தம் தென்னிலங்கைக்கும் பரப்பப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் இருக்கும் இடமெல்லாம் இலக்கு வைக்கப் படுகின்றனர். இதுதான் சந்திரிகாவின் ஒரேயொரு சாதனை எனலாம்.

இப்பொழுது அநுருத்த எழுப்பியுள்ள கேள்வியைப் பாருங்கள். ''மாகாண சபைகள் ஏதாவது உருப்படியானவற்றை நிறைவேற்றியுள்ளனவா? இவை செல்லாக் காசுகள் மட்டும் தான்'' இதனையே சிங்கள பௌத்த பேரினவாதிகள் அலட்டித் திரிகின்றனர். எனவே ரத்வத்தை தன் கையில் எடுத்துள்ளது யுத்தத்தை மட்டுமல்ல அதிகாரப் பரவலாக்கல் திட்டத்துக்கெதிரான போராட்டத்தையும் கூட, எனவே இவர்கள் சாதாரண அடிப்படை ஜனநாயகத்தையே துச்சமென மதிப்பவர்கள் என்பது வெள்ளிடைமலை. நாகரிகமே நாறிக்கொண்டிருக்கும் நிலையை உருவாக்கும் ''பெருமை'' இவர்களையே சாரும்.

மாகாண சபைத் திட்டமானது தென்னிலங்கை வாழ் சிறுபான்மையின மக்களுக்கும் உபயோகமானதாகும். அதாவது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, முஸ்லிம் மக்கள், பல்வேறு சாதிப்பிரிவு மக்கள் யாவருக்கும் அதில் பிரயோசனம் உண்டு. அத்தோடு சிறுகட்சிகளும், சிறுபான்மை கருத்துக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சக்திகளும் இதனால் நன்மை அடைந்துள்ளன. அவை மாகாண மட்டத்திலாவது பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன.

தென்னிலங்கையிலும் கூட மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானவையல்ல என்பது கண்கூடு. இதனையிட்டு கடந்த காலத்தில் பல முறையீடுகள் கிளம்பியிருந்தன. சில சந்தர்ப்பங்களில் தமக்கு எதுவித அதிகாரமும் இருப்பதாகத் தெரியவில்லையென அங்கலாய்ப்புகள் ஏற்பட்டதும் உண்டு. 1993ல் மேல்மாகாண முதலமைச்சராகப் பதவியேற்ற இன்றைய ஜனாதிபதி சந்திரிகா தன்கையில் எதுவித அதிகாரமும் இன்றி ஒரு நிர்வாக லிகிதர் தரத்திலுள்ளவர் போல் வீற்றிருக்க வேண்டியுள்ளதென அன்று கவலை தெரிவித்தார்.

அடுத்ததாக அதிகாரப்பகிர்வு தொடர்பாக தெளிந்த உறுதியான வரையறைகளையும் காண்பதற்கில்லை. எனவே ஒட்டுமொத்தமாக நோக்கின் தென்னிலங்கையைப் பொறுத்த வரை கூட, அதிகாரங்கள் வரையுறுதியாக வகுக்கப்படுவது அவசியமாகும்.

மாகாண சபைத் திட்டத்தையே வேண்டாப்பண்டமென்ற அநுருத்தவினால் முடுக்கி விடப்பட்டிருக்கும் விடயம் ஒன்றை மட்டும் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அதாவது அவர் வெளிப்படையான இனவெறியர்களை நேரடியாகப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்பதாகும். அவர் ஒரு இராணுவத்தீர்வை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கிறார். பாவம் அது நடைபெறப்போவதில்லை. 1997 சித்திரை வருடப்பிறப்புக்கு முன்பதாக யுத்தம் முடிவடைந்து விடும் என அன்று இறுதிக்காலக்கெடு விதித்த அவர் அதிலும் கோட்டை விட்டு விட்டார். 1997 வைகாசி 13ல் ''ஜயசிக்குறு'' நடவடிக்கையை ஆரம்பித்து வவுனியா - யாழ் பாதையை ''சூரியகதிர்'' வேகத்தில் திறந்து விடலாம் எனக் கனவு கண்ட அவர் ''என்றோ ஒரு நாள் அந்த பாதையைத் திறந்து வெற்றியீட்ட முடியும்'' என பிதற்றும் நிலையில் உள்ளார். இன்றைய நவீன உலகில் எந்தவொரு இனத்தையும் அழித்துவிட முடியாது. அழிக்க எண்ணுவது அநுருத்த போன்ற இராணுவவாதியின் கனவாகவே இருக்க முடியும். அவர் சந்திரிகாவை அழித்து இறுதியில் தன்னையும், அரசாங்கத்தையுமே அழித்து விடுவார். அது தான் அவர் படைக்கக்கூடிய ஒரேயொரு சாதனையாகும்!

# தலைவர்கட்கு நிந்தனை! மக்கள் முதுகில் குத்து!



''நாங்கள் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கமைய நடப்பவர்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் துன்ப துயரங்களை வெளிப்படுத்த உள்ள ஒரே ஒரு மேடை பாராளுமன்றம் மட்டுமே. அதைப் பகிஸ்கரிப்பதில் எந்தப்பயனும் இல்லை....

''1983ல் நாம் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறியது நாம் இழைத்த மாபெரும் தவறாகும். அதன் மூலம் அரசாங்கம் தான் நினைத்ததை எல்லாம் செயவதற்குரிய வாய்ப்பை அதற்கு வழங்கி விட்டோம்...

இந்தச் 'சுய விமர்சனத்தை' வெளியிட்டிருப்பவர் த.வி.கூவின் உபதலைவர் ஆனந்தசங்கரி அவர்கள்.

அதிர்ச்சியூட்டும் இந்தச் சுயவிமர்சனம் அவரது கட்சியான த.வி.கூவுக்கு 1977ல் வாக்களித்த தமிழ் முஸ்லிம் மக்களின் முதுகில் குத்துகிற ஒரு விமர்சனம் மட்டுமல்லாமல், அரசியற் படுகொலைகளுக்குள்ளான கூட்டணித் தலைவர்களுக்கு செய்கின்ற மாபெரும் நிந்தனையும் ஆகும் என்பதை யாரும் சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

1977ல் தமிழீழம் கேட்டு தேர்தலில் நின்ற த.வி.கூவுக்கு வடக்கு கிழக்கு வாழ் தமிழ் முஸ்லிம் மக்கள் வழங்கிய அங்கீகாரம் என்ன என்பது மட்டுமல்ல, அந்தத் தேர்தல் பிரச்சார மேடைகளில் த.வி.கூ தலைவர்கள் முழங்கிய வீர வசனங்கள் எவை என்பதுவும் ஆனந்தசங்கரி அவர்களுக்கு மறந்து விட்டது ஆச்சரியப்படுவதிற்கில்லை. த.வி.கூ தலைவர்களில் ஏறக்குறைய அனைவருக்குமே மறந்து போய்விட்ட விடயங்கள் தான் அவை.

ஆனால், 1983இல் த.வி.கூ பாராளுமன்றத்தை விட்டு வெளியேறியதற்கான காரணமும் மறந்து விட்டது என்பதை ஜீரணிப்பது கொஞ்சம் கஷ்டமான விடயம் தான்!

1977 தேர்தலின் போது பாராளுமன்ற ஆசனங்களுக்காக நாம் உங்கள் முன் நிற்கவில்லை; பட்டம் பதவிகட்காக நாம் உங்களைப் புள்ளடி போடுமாறு கோரவில்லை. எமது சொந்த மண்ணில் எமது சொந்த மக்களின்

> நான் அதை என் மனதில் ஏற்கனவே தொடங்கி விட்டேன். இப்போது அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

ஆட்சியதிகாரம் உருவாக்கப்படுவதற்கான அங்கீகாரத்தையே கோரி நிற்கிறோம். பாராளுமன்றம் எமக்கு வெறும் மேடை மட்டுமே. அது எமது போராட்டப் பாதையில் ஒரு களம் மட்டுமே. எமது போராட்டம் தேசம் முழுவதும் தொடரும். தமிழீழ விடுதலைக்காக நாம் பாராளுமன்றத்தையும் பயன்படுத்துவோம். ஆனால், அந்தக் கதிரைகளை நிரப்புவதல்ல எமது குறி... என்ற வீர வசனங்கள், அன்றைய தேர்தல் பிரச்சார கூட்டங்களில் முழங்கப்பட்டது இன்றும் எமது காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அன்று தேர்தலில் அதிகபட்ச ஆதரவைக் கொடுத்து வரலாற்றிலேயே முதற்தடவையாக இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியாக த.வி.கூ உருவாகும் அளவுக்கு அதற்கு வாக்களித்து அனுப்பினார்கள் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் முஸ்லிம் மக்கள். 4/5பெரும்பான்மையின் அசுர பலத்துடன் ஆட்சிக்கு வந்த அன்றைய ஜே.ஆர். அரசாங்கம் 1978இல் புதிய அரசியலமைப்பு சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது. அதுகாறும் இருந்து வந்த ஸ்ரீ.ல.சு.க.வின் 1972குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தை விடவும் அதிகமாகவும் நிறுவன ரீதியாகவும் இன ஒதுக்கலை செய்யக்கூடிய ஒன்றாக இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. ஜனாதிபதி முறையை அமுலுக்கு கொண்டு வந்தது. திட்டமிட்ட இனக்கலவரத்தை இரண்டாவது தடவையாகவும், நடாத்தவும் தமிழர்களை வடக்கு கிழக்கு நோக்கி நாய்களைப் போல விரட்டவும் வழிவகுத்த இந்தச்சட்டம், த.வி.கூ தலைவர்களையும் 1983ல் நாட்டை விட்டு ஓட வைத்தது. 1978ஆம் ஆண்டு அரசியற் சட்டத்திற்குத் திருத்தமாக 1983 ஓகஸ்ட்டில் கொண்டுவரப்பட்ட 6 வது திருத்தச் சட்டம் பிரிவினைக் கோரிக்கையை சட்டவிரோதமானதாக மாற்றியது மட்டுமல்லாமல் அந்தச்சட்டத்திற்கமைய முழு பாராளுமன்ற உறுப்பினர்களும் அரச நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களும் புதிய சத்தியப்பிரமாணம் ஒன்றைச் செய்ய வேண்டுமெனக் கோரியது. இந்தப் புதிய சத்தியப்பிரமாணம் நாட்டில் தனி நாட்டுக் கோரிக்கையை சட்டபூர்வ ஜனநாயக வழிகளின் கீழ் முன்வைத்துப் போராடும் உரிமையை மறுதலித்தது. பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்க வேண்டுமானால், இந்தப் புதிய சத்தியப் பிரமாணத்தைச் செய்தாக வேண்டும் என்று அனைத்து உறுப்பினர்களும் கோரப்பட்டனர்...!

த.வி.கூ. பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் சத்தியப் பிரமாணம் எடுப்பது தமிழ் முஸ்லிம் மக்கள் தமக்களித்த ஆணைக்கு விரோதமானது என்று கூறி எதிர்த்தனர். அதன்கீழ் சத்தியப்பிரமாணம் செய்ய முடியாது என்று மறுத்தனர். இதன் விளைவாக தமது பாராளுமன்ற ஆசனங்களை இழந்தனர். அன்றைய ஜே.ஆர். அரசாங்கத்திற்கு அறுதிப் பெரும்பான்மை இருந்தமையால் இந்தப் பாராளுமன்ற எம்.பி.க்களது விலகல் எந்த நெருக்கடியையும் அதற்குக் கொடுக்கவில்லை. 1983 முதல் அடுத்த ஐந்தாண்டுகட்கு எதிர்க் கட்சியற்ற ஒரு அரசாங்கமாக அது இயங்கி வந்தது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் த.வி.கூ இறங்கியது தான் உண்மையில் அன்றைய த.வி.கூ. பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்த - அவர்களது வரலாற்றுக் காலம் முழுக்கச் செய்த - ஒரு புரட்சிகர நடவடிக்கை என்று கொள்ளப் படுகிறது. இந்த நடவடிக்கை தான் வட- கிழக்கு தமிழ் - முஸ்லிம் மக்களது பிரதிநிதித்துவம் அற்ற முழுக்க முழுக்க சிங்கள மயப்படுத்தப்பட்ட ஒரு சிங்கள அரசு இலங்கை அரசு என்ற உண்மையை வெளிக் காட்டியது. ஜே.ஆர். ஜயவர்தன அரசாங்கம் இந்த நடவடிக்கை மூலமாக தனி நாட்டுரிமைக்கான போரைத் தவிர்க்க முடியாமல் ஆயுதப்போராட்ட வழிமுறையில் கையாளும் நிலைமையை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியது.

த.வி.கூவைப்பொறுத்தவரை அது இந்தியாவிற்குச் சென்று இந்திரா காந்தியுடன் பேசவும், ஒரு இந்திய தலையீட்டை வலியுறுத்தவும் உள்ள தார்மீக உரிமையை அதற்கு வழங்கியதும் இந்தச் சட்டமே. அன்றைய த.வி.கூ. பாராளுமன்ற குழுவின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமாக இருந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் இந்த முடிவில் உறுதியாக இருந்தமை பலராலும் பாராட்டப்பட்டது! (பின்னாளில் அமிரே அதைக் கைவிட்டு மாகாண சபைகள் இருப்பதாக சாக்குக்கூறி 6வது திருத்தத்திற்கேற்ப சத்தியப் பிரமாணம் செய்தார் என்பது வேறு விடயம்.)

ஆனால், எந்தச் சட்டம் இந்தநாட்டு மக்களின் அரசியலுரிமைக்கான ஆயுதமேந்திய போராட்டத்தை சர்வ தேச ரீதியில் நியாயப்படுத்தக் கூடிய ஒன்றாக இருந்ததோ, எந்தச்சட்டம் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்குள்ள அரசியல் உரிமை என்னவென்று முகத்தில் அறைந்தாற்போல் வெளிப் படுத்தியதோ அந்தச்சட்டத்தை எதிர்த்தமையை தவறு என்கிறார் த.வி.கூ வின் உபதலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் இன்று!

வரலாறு மறந்துவிட்டிருந்தால், ஆனந்தசங்கரி அவர்கள் ஒரு தடவை அவரது கட்சியின் மதிப்பிற்குரிய பேராசிரியர் வில்சன் எழுதிய 'The Break - up - of Sri Lanka' என்ற நூலை ஒரு தடவை படித்துப் பார்ப்பது நல்லது!

ஆனால், த.வி.கூ. தலைவர்களுக்கு உண்மையில் மறந்து விட்டது வரலாறு அல்ல. எதற்காக, எந்தக் கொள்கைகட்காக, எந்த மக்களுக்காகப் போராட இந்தக் கட்சி உருவாக்கப்பட்டது என்பது தான், அவர்களுக்கு மறந்து விட்டது. பேராசிரியர் வில்சன் அவர்கள் இந்த நூலில் எழுதுகிறார்.

''ஜெயவர்தனாவின் அரசாங்கத்தில் உள்ள ஒரு தீவிரவாதப் பிரிவினரால் 1977க்கும் 1983க்கும் இடைப்பட்ட காலத்தில் த.வி.கூவை வெளியேற்றுவதுடன் சேர்ந்ததாக ஒரு இராணுவ யுத்தத்தினை நடாத்துவதற்கான திட்டமும் தீட்டப்பட்டிருந்தது. 1982ல் ஜனாதிபதியிடம், த.வி.கூ.வை தடை செய்யும் பாதையை நீங்கள் தெரிவு செய்ய விரும்புகிறீர்களா என்று நான் கேட்டபோது அவர் சொன்னார்:

''நான் அதை என் மனதில் ஏற்கெனவே தொடங்கி விட்டேன். இப்போது அதன் விளைவுகள் எப்படி அமையும் என்பது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்'' என்று.

ஆக, பாராளுமன்றப் பதவியை துறந்ததாக இப்போது ஆனந்த சங்கரி சொன்னாலும் கூட, அது பறிக்கப் பட்டது என்பதே உண்மை.

ஒருவேளை அன்று அமிர்தலிங்கத்திற்குப் பதில் ஆனந்தசங்கரி தலைமையில் இருந்திருந்தால், சத்தியப்பிரமாணம் செய்திருப்பாரோ என்னவோ!

சத்தியப்பிரமாணம் செய்யாததால் தான் அன்றைய த.வி.கூவுக்கு இன்று வரை ஒரு பெயரும் வரலாற்றில் அதற்கு ஒரு கௌரவமும் இருக்கிறது பெருங்காயம் இருந்த டப்பா போல, அன்று அது எடுத்த அந்த முடிவு வரையான போராட்டங்கள் தான் இன்றுவரை கூட்டணிக்குக் கொஞ்சமாவது மதிப்பை யாராவது கொடுப்பதற்குக் காரணங்களாக இருக்கின்றன.

அந்த மதிப்பையும் தொலைத்துவிட கங்கணம் கட்டி நிற்கிறார் உபதலைவர் ஆனந்த சங்கரி அவர்கள்!

பெரிய பெருமையுடன், 'ஜனநாயக வழி நிற்கும் கட்சி' என்று பேசும் ஆனந்தசங்கரி ஐயாவுக்கு ஜனநாயகம் மறுக்கப்படும் போது பல்லை இழித்து அதற்குப் பணிந்து போவது தான் ஜனநாயகம் என்று தோன்றுகிறதோ என்னவோ. !

அரசியல் உரிமைக்காக சாத்வீக வழியில் போராடுவதை சட்டம் போட்டு தடைசெய்தால், சட்ட விரோத வழிகளில் போராட்டம் தொடர்வது தவிர்க்கப்பட முடியாதது என்பதை அவருக்கு விளங்கிக் கொள்ள முடியவில்லை.

ஆயுதம் ஏந்திய போராட்டத்தை 'ஜனநாயக வழியில்லாத' போராட்டம் என்று அவர் நமது 'இயக்கங்களை வைத்து' எடை போடுகிறார் போலும்!

ஆனால், தமது ஜனநாயக உரிமைக்காகப் பேராடும் மக்கள் எப்படிப் போராட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பவை ஜனநாயக மறுப்பாளர்களின் அடக்கு முறைகளே தான். ஆயுதப் போராட்டமும் கூட, 'வன்முறையின் மீது காதல் கொண்ட மனநோயால்' உருவாவதல்ல என்பதை ஆனந்த சங்கரி அவர்கள் புரிந்து கொள்வது நல்லது.

உண்மையில் இந்தப் பாராளுமன்ற பகிஷ்கரிப்புக் கதையை அவர் இப்போது சொன்னதற்குக் காரணம் வேறொன்றுமில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எப். தமிழ், முஸ்லிம் மக்கள் மீதான அரச அடக்கு முறைகளை கண்டிக்கும் நோக்குடன் அனைத்து வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் கட்சிகளும் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று கோரி அழைப்பு விடுத்ததற்கு அளித்த பதிலிலேயே ஆனந்த சங்கரி இதைக் கூறியுள்ளார். இதன் மூலம் அரசாங்கத்திற்கு அழுத்தம் தர முடியும் என்பது அதன் அபிப்பிராயம்.

தனக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்த போதெல்லாம் இப்படியொரு கண்டனத்தை அல்லது அழுத்தத்தைப் பிரயோகித்துப் பார்க்க விரும்பாத ஈ.பி.ஆர்.எல்.எப். இப்போது மட்டும் அதுவும் தனக்கு ஆசனம் எதுவும் இல்லாத நேரத்தில் போராட்டம் நடாத்தும்படி மற்றவர்களைக் கேட்கிறதே என்று தோன்றுவதைத் தவிர்க்க முடியவில்லை. ஆசனம் இருந்திருந்தால் கேட்டிருக்குமோ என்னவோ!

ஆனால், அதற்காக இப்படி தமிழ் மக்களதும், கட்சியினதும் முதுகில் குத்தும் பதிலை ஆனந்த சங்கரி அளித்திருக்கக் கூடாது!

எவ்வாறாயினும், ஈ.பி.ஆர்.எல்.எப் 'போராட வேண்டும்' என்று கோருவதில் நியாயம் இல்லாமல் இல்லை. அது கட்டாயம் செய்யப்பட வேண்டிய ஒன்று. ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்களையும் அவர்களது பதவிகளையும் மையமாக வைத்து அது கோருவது ஏன்

கோரிக்கை விடுக்கும் ஈ.பி.ஆர். எல்.எப். தான் செய்யப்போகும் போராட்ட நடவடிக்கை தான் என்ன?

அதன் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை ராஜினாமா செய்யுமாறு அது பணிக்குமா? அல்லது கட்சி நாடு பூராவும் போராட்டம் நடாத்தப் புறப்படுமா?

அல்லது த.வி.கூவையும், மற்றைய பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளையும் கோருவதுடன் அதன் போராட்ட ஆர்வம் நின்றுவிடுமா?

ஈ.பி.ஆர்.எல்.எப் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் தான் சொல்லவேண்டும்.

அது கோரிக்கை வைத்துள்ள போராட்டத்தை அதுவே முன்னின்று பல்வேறு வடிவங்களில் நடாத்தியபடி ஏனைய கட்சிகளிடம் அக்கோரிக்கையை முன்வைக்கலாம்.

அக்கட்சிகள் மறுத்தாலும் துன்பங்களை அனுபவிக்கும் மக்களாவது ஆதரவு தருவார்கள்.

அதற்கு சுரேஷ் தயாரா?

மக்கள் காத்திருக்கிறார்கள்!

# புலிகளின் கப்பல் கடத்தல்: படையினரால் தடுக்க முடியுமா?

லெப்டினன்ற் ஜெனரல் ரோகான் தளுவத்தை அவர்களை கூட்டுப் படைத் தளபதியாக கடந்த மூன்றாம் திகதியன்று ஜனாதிபதி நியமித்ததாக பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை தெரிவித்தது. புதிதாகப் பதவியேற்ற ஒரு வாரத்திற்குள்ளேயே லெப்டினன்ற் ஜெனரல் ரோகான் தளுவத்தைக்கு வந்தது பெரிய ஒரு தலையிடி. அதுதான் யாழ் நோக்கிச் செல்லும் சரக்குக் கப்பல்களையும், சரக்குகளையும் புலிகள் கடத்திச் செல்வதைத் தடுப்பது எவ்வாறு என்று தீர்மானிக்க வேண்டிய தலையிடி!

'எம்.வி.பிரின்சஸ் காஷ்' என்ற கப்பல் அண்மையில் புலிகளால் கடத்தப்பட்டது தெரிந்ததே. இக் கப்பல் இவ்வாறு புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட கப்பல்களில் மூன்றாவது கப்பலாகும். ஒரு கப்பல், முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினைக் கடக்கும் வரை அது கடத்தப்படுகிறதா இல்லையா என்று அறிந்து கொள்ள முடியாது. இதுதான் பாதுகாப்புப் படையினர் எதிர்நோக்குகின்ற ஒரு முக்கிய பிரச்சினையாகும். அதுவரையும் அதனைத் தாக்குவதற்கு அவர்கள் முயற்சி எடுக்க முடியாது. ஏனென்றால், அத்தகைய ஒரு முயற்சி, ஒரு சாதாரண. சரக்குக் கப்பலைத் தாக்கியது என்ற பெரும் பிரச்சினைக்கு அவர்களை முகம் கொடுக்க வைத்துவிடும்.

இவ்வாறு ஒரு கப்பல் அல்லது விமானம் சந்தேகத்திற்கிடமான முறையில் சஞ்சரிப்பதைக் காணும் பட்சத்தில் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வானொலி தொடர்பு சாதன அலைவரிசைகள் மூலம் அவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதே சர்வதேச ரீதியாக கடைப்பிடிக் கப்பட்டு வரும் நியமமாகும்.

ஆனால், கடத்தப்படும் எந்தக் கப்பலின் கப்டனுக்கும் தான் கடத்தப்பட்டிருக்கிறேனா இல்லையா என்பதைச் சொல்ல முடியாது. கடத்துகின்ற ஒரு புலியின் துப்பாக்கி அவரது கழுத்துக்கு அருகில் குறுக்காக நீட்டப்பட்டிருக்கையில் அவரால் அவர்கள் கூறும்படி கூறுவதைத் தவிர வேறெதைக் கூறமுடியும்? அவர்கள் தமக்குத் தேவையான நேரம் கிடைக்கும்வரை இவ்வாறு செய்யவே நிர்ப்பந்திப்பார்கள்.

அரசாங்கம் எந்த ஒரு கப்பலும் கடற்கரையிலிருந்து 50 மைல் தொலைவிலேயே செல்ல வேண்டும் என்ற ஒரு நிரந்தரக் கட்டளையை கப்பலோட்டிகளுக்கு வழங்கியிருக்கிறது. ஆனால், எத்தனை மைல் தூரத்தில் அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பது புலிகளுக்கு ஒன்றும் முக்கியமானதல்ல. ஒரு விரைவுப் படகில், கடலில் பரந்துள்ள கும்மிருட்டின் உதவியுடன் கண்காணிப்பிலீடுபட்டிருக்கும் கடற்படைப் படகுகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, ஒரு கப்பலை நோக்கிச் செல்ல புலிகளுக்கு ஒரு சில மணி நேரமே போதுமானது.

ஆக, கப்பல் கடத்தப்பட்டது. அத்துடன் இருட்டோடு இருட்டாக கப்பல் முல்லைத்தீவுக் கரைநோக்கி கொண்டு வரப்பட்டது. என்னதான் அது கடற்படைப் படகுகளால் எச்சரிக்கப்பட்டாலும் கூட, கப்பல் கப்டனை இயந்திரக் கோளாறு, அவரது கப்பற் தளத்தில் கசிவு ஏற்பட்டுள்ளது என்று ஒரு காரணத்தைக் கூறி தனது சக மாலுமிகளை காப்பதற்காக கப்பலைக் கைவிடுவதற்காக கிட்டவுள்ள கரையை நோக்கிச் செல்கிறேன் என்று ஒரு கதையைக் கூறுமாறு நிர்ப்பந்திப்பது ஒன்றும் புலிகளுக்குக் கடினமான விடயம் அல்லவே...!

உலகெங்குமுள்ள கப்பலோட்டிகளிடம் காலம் காலமாக இருந்து வரும் ஒரு பண்பு உண்டு. அதுதான் நெருக்கடியில் சிக்கியிருக்கும் ஒரு கப்பலுக்கு உதவுவது ஆகும். ஆகவே, ஒரு கடற்படைப் படகு உண்மையாகவே, நெருக்கடியில் இருக்கும் ஒரு கப்பல் மீது தவறாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமானால் அது மிகவும் மோசமான ஒரு குற்றமாகிவிடும்.

புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் மிகவும் தேர்ந்த படகோட்டிகள் என்பது நிரூபிக்கப்பட்ட ஒரு விடயமாகும். ஒரு கடத்தப்பட்ட கப்பலை ஆயுதப்படைகள் சுற்றிவளைப்பார்கள் என்று தெரிந்தால் அவர்கள் பெரும்பாலும் கடற்படை உத்தரவுகட்குப் பணிந்து பின்வாங்கி விடுவார்கள். இதன் பிறகு கடற்படைப் படகு தனது கண்காணிப்பு பணியில் தொடர்ந்து செல்லும். புலிகள் பொறுத்திருந்து விட்டு மீண்டும் கப்பலை கரையை நோக்கிக் கொண்டு போவார்கள்.

கப்பல் முல்லைத்தீவை நோக்கித் தான் போகிறது என்று தெளிவாகத் தெரிந்தால் மட்டுமே ஆயுதப்படைகள் அதன் மீது தாக்குதலைத் தொடுக்க முடியும். அப்போதும் கூட, கடற் சட்டமானது எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்க்குமாறும், கப்பல் மூழ்கு முன் வேண்டிய பிற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் கூறுகிறது.

உண்மையில் கடற்படையின் துப்பாக்கிப் படகு (Gun boat) ஒன்றுக்கு ஒரு உருக்காலான கப்பலை மூழ்கச்செய்ய நீண்ட நேரம் எடுக்கும். எம்நாட்டுத் துப்பாக்கிப் படகுகள் (Gun boats) சிறிய படகுகளைத் துரத்தவும் மூழ்கடிக்கவும் என்றே தயாரிக்கப்பட்டவையாகும். 6000 தொன் நிறையுள்ள சரக்குக்கப்பல் ஒன்றைத் தாக்க உருவாக்கப்பட்டவை அல்ல. துப்பாக்கிப்படகிலுள்ள மிகப்பெரிய துப்பாக்கி 37 மி.மீ. துப்பாக்கியேயாகும். இப்படியான ஒரு கப்பலைத் துணை நூற்றுக்கணக்கான ஷெல்களை ஏவ வேண்டும்.

இந்த ஷெல்கள் கப்பலின் மேற்தளத்தினைத் தீப்பிடிக்க வைக்கக்கூடும் என்றாலும் கூட, இதனால் கப்பலை மூழ்க வைக்க முடியாது.

முன்பும் புலிகளின் ஆயுதக் கப்பல்களை மூழ்கடிக்க கடற்படைப் படகுகள் முயன்ற சம்பவங்களின் போது இது தெளிவாகத் தெரியவந்திருக்கிறது. இரண்டு சந்தர்ப்பங்களில் புலிகளின் கப்பல்களை மூழ்கடிக்க கடற்படைப்படகுகட்கு பல மணி நேரம் சென்றிருக்கிறது.


இம்முறையும் கப்பல் முல்லைத்தீவின் பாதுகாப்பு எல்லைக்குள் போய்விட்டிருந்தால், அதனை அழிப்பது என்பது கடற்படைப் படகுகட்கு இயலாத காரியமாகப் போய்விட்டிருக்கும். அவை கரையிலிருந்து ஏவப்படும் புலிகளின் பலமான ஆட்டிலறித் தாக்குதலுக்கு முகம்கொடுக்க வேண்டி இருந்திருக்கும். ஆட்டிலறியிலிருந்து வரும் ஷெல் ஒன்றே கடற்படைக் கப்பலில் ஒன்றை முற்றாக நிர்மூலமாக்கப் போதுமானதாகும்...!

இதைத்தவிர கடற்புலிகள் பொதுவாக இயந்திரத் துப்பாக்கி பொருத்தப்பட்ட சிறிய படகுகள் பலவற்றைக் கொண்ட கூட்டமாக வந்து கடற்படைப் படகுகளைத் தாக்கும் தன்மையைக் கொண்டவர்கள்.

வாசகர்கள் 1995 ஒகஸ்டில் என்ன நடந்தது என்பதை மறந்திருக்க மாட்டார்கள். 120 பொதுமக்களுடன் யாழ்ப்பாணம் நோக்கிப் போய்க் கொண்டிருந்த 'பாதை'க் கப்பல் ஒன்றை (Ferry) கடத்தி முல்லைத்தீவில் நங்கூரமிட்டு, கடற்படைக் கப்பல்கள் அழிந்துபோக வழிசமைத்தார்கள். இரண்டு டோரா அதிவேகத் தாக்குதல் படகுகள் மூழ்கின. மாலுமிகள் கொல்லப்பட்டனர்.

உண்மையில் அதில் பயணம் செய்த பயணிகள் விடுவிக்கப்பட்டபோதும், அந்தக் கப்பல் இன்னமும் புலிகளின் வசமே இருக்கிறது.

பிரச்சினையை மேலும் சிக்கலுள்ளதாக மாற்றுகின்ற இன்னொரு முக்கியமான விடயம் என்னவென்றால், யாழ்ப்பாணத்திலுள்ள 6லட்சம் மக்களுக்குரிய உணவுப் பொருட்களையும் பிறவற்றையும் அனுப்பிவைக்க போதுமான கப்பல் போக்குவரத்து வசதி இலங்கை அரசிடம் இல்லாததே ஆகும்.



இதனால் இலங்கையில் செயற்படும் பெரும்பாலான கப்பல்கள் பிறநாட்டுக் கப்பல்களாக இருப்பதுடன், அவற்றின் மாலுமிகளும் வெளிநாட்டவர்களாகவும் இருக்கின்றனர். அத்துடன் இலங்கையர்களை விட வெளிநாட்டவர்களே பெறுமதி வாய்ந்தவர்கள் என்ற எண்ணமும் எம்மவரிடையே நிலவுகிறது. இது நிலைமையை இன்னமும் மோசமாக்குகிறது.

ஒரு கப்பலை அழிக்க இலகுவான வழி விமானப்படையினால் அதன் மீது குண்டு வீசுவதேயாகும். ஆனால், புலிகள் ஒரு கப்பலைக் கடத்தும் போது தம்முடன் விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும் எடுத்துச் செல்லக் கூடும் என்பதால் இதுகூட ஒன்றும் அத்தனை சுலபமான ஒன்றல்ல.

மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள், இயந்தி., உதிரிப்பாகங்கள் போன்ற பொருட்களுடன் கொழும்பிலிருந்து செவ்வாயன்று யாழ். நோக்கிப் புறப்பட்ட 'பிரின்சஸ் காஷ்' கப்பலுக்கு உண்மையில் நடந்தது இதுதான்!

வியாழக்கிழமை பிற்பகல் 10 மணியளவில் அது முல்லைத்தீவில் காணப்பட்டது என்று கூறப்படுகிறது. எனவே அதற்குமுன் அக் கப்பல் வேறெங்காவது நிறுத்தப்பட்டு பொருட்கள் ஏற்றப்பட்டோ, இறக்கப்பட்டோ இருந்திருக்க முடியாது என்பது தெளிவாகிறது.

முல்லைத்தீவுக் கரைக்கு மிகவும் அண்மையில் இருப்பதாக கடற்படைப் படகுகளால் எச்சரிக்கப்பட்டபோது, அது கடலின் நடுப்பகுதியை நோக்கி திரும்பியது. கப்பல்கள் பொதுவாக கரையை நோக்கி நகர்வதும், திரும்ப அது புரிந்ததும் கடலில் நடுப்பகுதி நோக்கி நகர்வதும் சாதாரணமானது தான். இவ்வாறு தான் அதுவும் செய்தது.

ஆனால், அது திரும்பவும் இருளில் கடற்படைப் படகுகளின் கண்களுக்குத் தெரியாமல் முல்லைத்தீவுக் கரையை நோக்கி நகர்ந்துள்ளது. மறுநாள் காலை 8 மணியளவில் தான் அது முல்லைத்தீவுக்கு அருகில் நங்கூரமிடப்பட்டிருக்கக் காணப்பட்டது.

இந்த இடத்தில் தான் சந்தேகம் வலுப்பெறத் தொடங்கியது.

துப்பாக்கிப் படகுகள் கப்பலை நெருங்கியபோது கப்பலிலிருந்தும் கரையிலிருந்தும் தாக்குதலுக்குள்ளாகின. இதனால் அவை பின்வாங்க நேரிட்டது. இதேவேளை புலிகளின் படகுகள் கப்பலிலிருந்து கரைக்கு பொருட்களை வரிசையாக ஏற்றிச் சென்று கொண்டிருந்தன.

எப்படியோ, இறுதியாக கட்டுநாயக்காவிலிருந்து வந்து இஸ்ரேலிய கிபிர் விமானம் ஒன்று கப்பல் மீது. சரியாகக் குண்டு வீசுவதில் வெற்றி பெற்றது. இது நடந்தது பிற்பகல் 2 மணியளவில். அதன்பிறகு கப்பல் கடலில் முற்றாக மூழ்கியது.

பெருமளவான பொருட்கள் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு புலிகளிடம் போய்ச் சேர்ந்திருக்கலாம் என்று எதிர்பார்க்கலாம்.

மந்திரி சபையைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர், புலிகளுக்காக இந்தக் கப்பலின் கப்டன் வேலை செய்துள்ளார் என்று சந்தேகிக்கப்படுகிறது என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார். இதுவே ஆயுதப்படைகளால் இக்கடத்தலை தடுக்க முடியாமல் போனது என்று தெரிவித்துள்ளார். அத்துடன் இந்தக் கப்பல் சந்தேகத்திற்கிடமான முறையில் அதன் பெயரையும் மாற்றியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது சுத்த அபத்தமான ஒரு அறிவிப்பு!

வடக்குக்கு சரக்கேற்றிச் செல்லும் எல்லாக் கப்பல் கம்பனிகளும் கப்பற் போக்குவரத்து அமைச்சரால் மிகவும் இறுக்கமான கேள்விப்பத்திர முறை மூலமே தெரிவு செய்யப்படுகின்றன. சரக்கு ஏற்றும் நோக்கத்திற்காக விண்ணப்பிப்பதற்திற்குக் கூட ஒரு நிறுவனம் தன்னை கப்பல்துறை அமைச்சில் மட்டுமல்லாமல் பாதுகாப்பு அமைச்சிலும் பதிவு செய்தாக வேண்டும்! இத்தகைய ஒரு பதிவுக்கு ஒரு நிறுவனம் தனது முழு வரலாற்றையும், தனது கப்டன், மாலுமிகள் பற்றிய விபரங்களையும் தெரிவித்தாக வேண்டும். அதில் ஏதாவது இசகு பிசகு இருப்பின், அதற்குப் பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகத்தர்களே பொறுப்பேற்க வேண்டும்.

கப்பல்கள் தமது பெயர்களை அடிக்கடி மாற்றுவதுண்டு. ஆனால், இந்த மாற்றங்கள் பற்றிய விபரங்கள் கப்பற்துறை அமைச்சிடம் மட்டுமன்றி பாதுகாப்பு அமைச்சிடமும் இருக்க வேண்டும்.

இந்தக் குறிப்பிட்ட கப்பற் கம்பனி சிலவேளையில் உலகிலுள்ள மிகவும் துரதிருஷ்டமான கம்பனியாக இருக்கலாம்! அதன் மூன்று கப்பல்கள் புலிகளினால் தொலைந்து போயுள்ளன!

முதலாவது கப்பல் எம்.வி. ஓசன் ரேடர், 1994ல் வெற்றிலைக்கேணி இராணுவ முகாமருகாக நங்கூரமிடப்பட்டிருந்த போது அது மூழ்கடிக்கப்பட்டது. இரண்டாவது 'பாதைக்' கப்பலான 'மிசன்', இது 1996இல் மன்னாரில் வைத்து புலிகளால் கடத்தப்பட்டது. அது இன்னமும் புலிகளின் வசமே உள்ளது.

ஏதாவது ஒரு கப்பல் நிறுவனம் குறித்து ஏதாவது சந்தேகம் இருக்குமானால், சி.ஐ.டி.யோ தேசிய புலனாய்வுத்துறையோ அதன் உரிமையாளர்களை விசாரிக்க முடியும். அவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்த முடியும். அவர்களது அலுவலகங்கள் கொழும்பிலேயே உள்ளன!

உண்மையில் இங்கே தெளிவாகத் தெரிவது இதுதான்: ஆயுதப்படைக்கு புலிகளினால் கப்பல்கள் கடத்தப்படுவதை தடுக்கும் சக்தி இல்லை. அத்துடன் அவை முல்லைத்தீவை நோக்கி செல்வதைத் தடுக்கும் ஆற்றலும் அவர்களுக்கு இல்லை.

புலிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு இந்தப் பலவீனங்கள் எல்லாம் நன்கு தெரியும். எனவே அவர்கள் இதைத் திரும்பவும் நிச்சயமாகச் செய்வார்கள்.

இதைக் கையாள்வது எப்படி என்பது புதிய கூட்டுப்படைத் தலைமையகத்தின் பொறுப்பு. அதற்கு உரிய குறிப்பான திட்டங்களை அது தீட்டவேண்டும். இல்லாவிட்டால் வடக்கு நோக்கிப் போகும் கப்பல்கள் எல்லாவற்றிற்கும் இதே கதி தான் தொடரும்.

*நன்றி: ஐலன்ட்*
*19, ஒகஸ்ட் 1998*

# ஐ.தே.கா. வின் காணிக் கொள்கை: பழைய மந்தையில் புதிய கள்ளா?

—பரந்தாமன்

கடந்த ஓகஸ்ட் 12ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் யாப்பு சீர்திருத்தக் குழு மாகாண சபைகளின் காணி அதிகாரம் பற்றி தீர்மானங்களை எடுத்துள்ளது.

மாகாணங்களில் உள்ள காணி தொடர்பான அதிகாரம் மத்திய அரசிடம் இருக்க வேண்டும் என்றும் மாகாண சபைகள் தமக்கு காணி தேவையானால் மத்திய அரசு நியமிக்கும் காணிச் சபைக்கு விண்ணப்பித்து அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அத்தீர்மானம் குறிப்பிடுகின்றது.

' காணிச் சபையின் ஒதுக்கீட்டில் திருப்தி ஏற்படாவிட்டால் மத்திய அரசு நியமிக்கும் நடுவர் மன்றத்திடம் முறையிடலாம் என்றும் அதுவும் சரிவராத போது உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் மேலும் அத்தீர்மானம் குறிப்பிடுகின்றது.

எதிர்பார்த்தது போலவே இத்தீர்மானங்கள் பேரினவாதிகளின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பனவாகவே உள்ளன. வரலாற்று ரீதியாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என வரும் போது பிரதான எதிர்க்கட்சி பேரினவாதிகளின் குரலாக ஒலிப்பதே வழக்கமாக உள்ளது. பண்டா-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது ஐ.தே.க. எதிர்த்ததும் டட்லி-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது சி.ல.சு.க. எதிர்த்ததும் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மாகாண சபைகள் வந்த போது சி.ல.சு.க. எதிர்த்து தேர்தல்களைப் பகிஷ்கரித்ததும வரலாற்று நிகழ்வுகளாக உள்ளன. இன்று ஐ.தே.க. அத்தொடர்ச்சியைப் பேணுகின்றது. இத்தொடர் கிளித்தட்டு மறிப்பு விளையாட்டில் தற்போது ஐ.தே.க.வின் முறை. அது விளையாட்டைத் தொடர்கிறது. தன் விளையாட்டின் ஒழுங்குகள் திருப்தியாக இருக்கின்றதா என்பதைப் பரிசீலிப்பதற்காக ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சிங்கள ஆணைக்குழுவிடம் அதன் அறிக்கைகளின் பிரதிகளை கேட்டுப் பெற்றுக் கொண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தங்களுடைய விளையாட்டுகள் அச்சுப் பிசகாமல் பேரினவாதிகளின் சிந்தனைகளுடன் ஒத்துப் போக வேணடும் என்ற கவலை அவருக்கு.

இனி காணி அதிகாரம் தொடர்பான பேரினவாதிகளின் சிந்தனைக்கு வருவோம்.

காணி அதிகாரம் தொடர்பாக பேரினவாதிகள் இரண்டு விடயங்களைச் சாதிக்க முற்படுகின்றனர். ஒன்று காணி அதிகாரம் தொடர்பான பிரதான கட்டுப்பாட்டு அழுத்தியை தங்கள் வசம் வைத்திருக்க வேண்டும் என்பது, இண்டாவது தமிழர்களின் தாயகக் கோரிக்கையை சுவடே இல்லாமல் அழிப்பது.

முதலாவது விடயத்தின் அடிப்படையிலேயே அவர்கள் காணி அதிகாரம் மத்திய அரசிடம் இருக்க வேண்டும் என வற்புறுத்துகின்றனர். இங்கு மத்திய அரசு என்பது இனங்களின் கூட்டரசல்ல அது சிங்கள அரசே. சிங்கள அரசில் ஆட்சியாளர்கள் வெறும் பொம்மைகளே. அவர்களை ஆட்டுவிக்கும் பிரதான கயிறு பேரினவாதிகளிடமே உள்ளது. ஐ.தே.க. முன்வைக்கும் நடுவர் சபை என்பதும் ஒரு போதும் பல்லின நடுவர் சபையைக் குறிக்கா. சிங்கள நடுவர் சபையையே குறிக்கின்றது. இதன் கயிறும் பேரினவாதிகளிடம் தான் இருக்கப் போகின்றது. காணிப் பிரச்சினையின் இறுதித்தீர்ப்பாளராக உயர்நீதிமன்றத்தினை ஐ.தே.க.வினர் குறிப்பிடுகின்றனர். இவ் உயர் நீதிமன்றமும் சிங்கள நீதிமன்றம் என்பதைத் தான் வரலாறு காட்டி வந்துள்ளது. அங்கும் பேரினவாதிகள் தான் கோலோச்சப் போகின்றார்கள். சிங்கள ஆணைக்குழுவின் தலைவர் (ஏ.டீ.டி.எம்.பி.தென்னகோன்) ஒரு முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் என்ற தரவு மட்டுமே இந்நீதிமன்றம் எவ்வாறு தீர்ப்பளிக்கும் என்பதை மதிப்பிடப் போதுமானது.

உண்மையில் நடுவர் மன்றம் உயர் நீதிமன்றம் என்பதெல்லாம் பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கு கட்டும் வெறும் குஞ்சங்கள் தான்.

இரண்டாவது ஒரு வகையில் முதலாவது விடயத்தின் மறுதலையானது காணி அதிகாரத்தைக் கொடுக்கின்ற போது இயல்பாகவே தமிழர்களின் தாயகக் கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டி வரும். இதனைப் பேரினவாதிகள் விரும்பவில்லை. தாயகக் கோரிக்கையை அங்கீகரிக்க மறுப்பது மட்டுமல்ல அதன் அடிப்படையையே இல்லாமல் செய்வது தான் அவர்களின் நோக்கம். அடிப்படையை இல்லாமல் செய்வதானால் வடக்கு-கிழக்கு இணைப்பை இல்லாமல் செய்ய வேண்டும். இணைப்பை இல்லாமல் செய்வதானால், நிலத்தொடர்ச்சியையும் சனத்தொகை வீதாசாரத்தையும் மாற்றுதல் வேண்டும். வேண்டுமானால் இதற்குப் பொருத்தமான முக்கிய கேந்திர இடங்களில் குடியேற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். குடியேற்றங்களை உருவாக்கினால் மட்டும் போதாது அவற்றை அரசியல் ரீதியாகப் பலப்படுத்தவும் வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் காணி அதிகாரம் தேவை. இதில் விடப்படும் சிறிய விட்டுக் கொடுப்புகள் கூட தங்கள் அபிலாஷைகளுக்கு எதிராகி விடும் என அவர்கள் கருதுகின்றனர்.

மறு பக்கத்தில் தமிழ்த் தரப்பினைப் பொறுத்தவரை சுயநிர்ணயக் கோரிக்கையின் உயிர்நாடியே அது தான். சுயநிர்ணயக் கோரிக்கையின் சாராம்சமே தனது தாயகத்தில் முழுமையான அதிகாரமும் தாயகத்தையும் ஏனைய பிரதேசங்களையும் இணைக்கும் போது ஏற்படுகின்ற பொது விடயங்களில் கூட்டு அதிகாரமும் என்பது தான். இதனை மீறி தாயகத்திலேயே பேரினவாதம் தான் ஊன்ற முற்படுகின்றது. இது அப்பட்டமான பேரினவாத ஆக்கிரமிப்பே தவிர வேறொன்றுமில்லை.

இன்னொரு பக்கத்தில் மத்திய அரசிடம் காணி அதிகாரம் என்பது மாகாண சபையின் இறைமைக்கும் மக்களாட்சிக் கோட்பாட்டிற்கும் கூட தடையாக உள்ளது. இங்கு மாகாண சபை என்பது வெறுமனே நியமிக்கப்பட்ட நிறுவனமல்ல. மாறாக மக்களால் தெரிவு செயயப்பட்ட நிறுவனம். குறிப்பிட்ட மாகாண மக்களின் இறைமை அந்நிறுவனத்திடம் உள்ளது. அவ் இறைமைத்துவத்தின்படி தங்களது காணி அதிகாரம் மாகாண சபைகளிடம் இருக்க வேண்டும் என மக்கள் கோரும் போது அதனைத் தடுப்பது எந்த வகையில் நியாயமாகிவிட முடியும் தங்களுக்கான அதிகாரத்தை சிங்கள மத்திய அரசிடம் கொடுக்கும்படி என்றைக்கும் தமிழ் மக்கள் கேட்டுக் கொண்டதில்லை.

முக்கியமான சமஷ்டி ஆட்சி நாடுகளான கனடா, அமெரிக்கா, சுவிஸ் போன்ற நாடுகளில் காணி அதிகாரம் மாநில அரசுகளிடம் தான் உள்ளது என்பதை நாம் நினைவிற் கொள்ளல் வேண்டும். அரை குறை சமஷ்டி ஆட்சி நாடு என்று கருதப்படுகின்ற இந்தியாவில் கூட காணி அதிகாரம் மாநில அரசாங்கங்களிடம் உள்ளது என்பதை இது விடயத்தில் நாம் மறக்கக் கூடாது.

இதை விட ஒரு சாரார் காணி அதிகாரம் மாகாண அரசிடம் இருக்கலாம். மத்திய அரசு தனக்கு தேவையான போது காணிகளை மாகாண அரசுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் எனக் கூறுகின்றனர். இலங்கை இனங்களின் அரசுகளை சமத்துவமான இணைத்த ஒரு கூட்டரசாக இருக்கும் போது மட்டுமே தமிழ்ப் பிரதேசத்திற்குள் மத்திய அரசுக்கு காணிகள் கொடுக்கலாம். இப்போது இருப்பது போல அது சிங்கள அரசாகவே தொடர்ந்து இருக்குமானால் காணிகளை கொடுக்க முடியாது. இப்போது உள்ள நிலையில் கொடுக்கின்ற ஒவ்வொரு காணித் துண்டும் பேரின ஆதிக்கம் தமிழ் பிரதேசங்களில் காலூன்ற வழிவகுத்ததாகவே அமையும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை பேரினவாதத்திடம் காணி அதிகாரம் கொடுப்பது என்பது அவர்களிடம் தமிழ் மக்களை அழிப்பதற்கான புற்றுநோய்க் கிருமிகளை கொடுப்பதற்குச் சமனானதாகும். ஏற்கெனவே அக்கிருமிகளைக் கொண்டு தான் தமிழ் பிரதேசத்தினை அரித்து ஒரு பகுதியினை கோறையாக்கியுள்ளனர். இப்போது முழுவதையும் கோறையாக்கி முழுமையாக தமிழர்களை அழிக்க கங்கணம் தீட்டுகின்றனர்.

இரண்டு பேரினவாதக் கட்சிகளும் தொடர்ந்து தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக கிளித்தட்டு மறிப்பதை நிறுத்தி உண்மையைப் பச்சையாகக் கூறி விடுதல் நல்லது. அதாவது பேரின அபிலாஷைகளுக்கு எதிராக மயிரளவு கூட எம்மால் அசைய முடியாது என ஒப்புதல் வாக்கு மூலம் அளித்தால் அவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்கின்ற பெரிய உதவியாக இருக்கும். தமிழ் மக்கள் தங்கள் பிரச்சினையைத் தாங்களே பார்த்துக் கொள்வார்கள்.

---

# லிங்க நகர்: எரிந்து கொண்டிருக்கும் நேரம்!

விடுதலைப் புலிகளுடன் தான் நாங்கள் யுத்தம் செய்கிறோம். தமிழ் மக்களுடனல்ல என்று அரசு வாய்க்கு வந்த நேரமெல்லாம் உச்சரித்துக் கொண்டாலும் இராணுவம் தனது ஒவ்வொரு நடவடிக்கை மூலமும் தமிழர்கள் வேறு; விடுதலைப் புலிகள் வேறு என்று பார்ப்பதில்லை. தமிழர் என்றால் அவர் மேல் எப்போதும் ஒரு கண் வைத்திருப்பதே பாதுகாப்புக்கு நல்லது என்று சொல்லாமற் காட்டிக் கொண்டிருக்கிறது.

இந்தக் கண் வைப்பில் ஒன்றாகத் தான் லிங்கநகர் கிராமமும் சிக்கித் தவிக்கிறது. ஓகஸ்ட் 9ம்திகதி சிவில் உடையில் வந்த இராணுவச் சிப்பாய்கள் பட்டப்பகலில் குடிசைகளின் கூரைகளைப் பிய்த்து அவற்றைக் கீழே போட்டு குப்பை எரிப்பது போல் எரித்திருக்கிறார்கள். தமிழ்க் குடிசை வாசிகள் எவ்வளவோ தடுத்தும் கேளாமல் சுமார் பதினைந்து குடிசைகள் மேல் இந்த அராஜகம் நடத்தப்பட்டிருக்கிறது.

''சத்தியமாக நாங்கள் வீடுகளை எரிக்கவில்லை'' என்று இவர்கள் சட்டத்திற்கு முன் சத்தியம் செய்யக் கூடிய வகையில் தான் தங்கள் அராஜகத்தை நிகழ்த்தியிருக்கிறார்கள் என்றாலும், உண்மையில் குழந்தை குட்டிகளுடன் வாழ்ந்த ஏழைத் தமிழ் மக்கள் மீது குடியிருக்கும் உரிமையை மறுக்கும் ஒரு கேவலமான செயலைத் தான் இந்த இராணுத்தினர் செய்திருக்கிறார்கள்.

லிங்கநகர் ஒரு மீள் குடியேற்றக் கிராமம். மூன்று பக்கமும் கடல் சூழ்ந்த ஒரு மெல்லிய முனை நிலம். நகர்ப் பகுதியில் துறைமுகக் கடற்பரப்பில் இத்தகைய மூன்று முனைகள் உள்ளன. ஒரு நிலம் கடற்படைத் தளமாக இயங்குகிறது. அடுத்த நிலம் உவ ் மலை என அழைக்கப்படுகிறது. இதன் முனைப்பகுதியில பிளான்டன்ட் பொயின்ட் இராணுவத் தளம் அமைந்துள்ளது. மூன்றாவது நிலப் பரப்புத் தான் லிங்கநகர். இந்த முனையில் தமிழர்கள் குடியிருப்பு அமைந்துள்ளதால் வெறும் கடற் பரப்பினால் மட்டுமே பிரிக்கப் பட்டுள்ள பிளான்டன்ட் பொயின்ட் இராணுவத் தளத்துக்கு ஆபத்து நேரலாம் என இராணுவம் கருதுவதாலேயே இக்குடியிருப்பை அகற்றிவிட துடியாய் துடிக்கிறதோ என எண்ண வேண்டி இருக்கிறது.

இங்கு சுமார் இருநூற்றைம்பது தமிழ்க் குடும்பங்கள் இருந்தன. மட்கோ என்ற அயல் கிராமத்தைச் சேர்ந்த பிக்கு ஒருவரின் இனவாதக் கண்ணோட்டமும் இராணுவத்தினரின் புலிபிடிப்பு நடவடிக்கையும் மேலோங்கத் தொடங்கியதால் குடும்பங்களின் தொகை 176 ஆகக் குறைந்து போனது.

இந் நிலப்பரப்பு தங்களது சுடுவீச்சு எல்லைக்குட்பட்டது என இராணுவம் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டாலும் போதிய நிரூபணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இனவாத புலிபிடிப்புத் தொல்லைகள் காரணமாக இப்பகுதி மக்கள் 96 நவம்பர் 23ல் தங்களை வாழ விடுமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியிருக்கிறார்கள். காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை வெய்யிலில் குழந்தை குட்டிகளுடன் நின்று தங்கள் எதிர்ப்பைக் காட்டியிருந்தார்கள்.

புதிய தந்திரத்தைக் கையாண்ட இராணுவம் மக்களைக் குடியெழுப்பி நிலத்தைத் தமக்குத் தருமாறு பிரதேசச் செயலாளரை நெருக்கியது. இதனால், பிரதேசச் செயலர் 30 குடும்பங்களின் மேல் முதற்கட்டமாக வழக்குத் தாக்கல் செய்துள்ளார். வழக்கு விசாரணையிலிருக்கிறது.

இந்த நிலையில் இராணுவப் பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் இக்குடியிருப்புக்குச் செல்லும் பாதையில் காவலரண் ஒன்றை நிறுவி பாண், பருப்பு, பனடோல் தொடக்கம் மக்கள் கொண்டு செல்லும் ஒவ்வொரு பொருளையும் சோதனை செய்து கட்டுப்பாடுகளையும் வேண்டாத வகையில் விதித்தது. கயிறு, கம்பு, ஆணி, கிடுகு, சீமெந்து, மணல், கல் என்று வீடு திருத்தக் கூடிய எந்தப் பொருளையும் குடியிருப்பாளர்கள் எடுத்துச் செல்ல முடியாதபடி தடை விதிக்கப்பட்டது. பொலித்தீன் தாள், சாக்கு . என்பவை கூடத் தடை செய்யப்பட்டன.

குடியிருப்பாளர்களுக்கும் விசேட 'கவனிப்புகள்' நடந்தன. தேசிய அடையாள அட்டை மாவட்ட அடையாள அட்டை (இராணுவத்தால் வழங்கப்படுகிறது) என்பவற்றுக்கும் மேலதிகமாக விசேட அடையாள அட்டையும் வழங்கப்பட்டது. இவ் வட்டையைக் காவலரணில் காட்டினால் தான் உள்ளே விடுவார்கள். இவர்களைத் தேடி உறவினர்களோ, நண்பர்களோ வருவதாயின் யாரைச் சந்திக்க வேண்டும் என்ற விபரத்தைக் காவலரணில் தெளிவுபடுத்தி ஆளடையாள அட்டையையும் ஒப்படைத்த பின்னரே உள்ளே செல்ல வேண்டும். திரும்பி வரும்போது அடையாள அட்டையைப் பெற்றுச் செல்லலாம்.

இந்தக் கெடிபிடிகள் எல்லாம் இவர்களைக் குடியெழுப்பும் நோக்கத்தைக் கொண்டே நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தன. வேறுபோக்கிடமற்ற இம்மக்கள் இந்த கேவலங்களைச் சகித்துக் கொண்டு வாழ்கிறார்களே என்று வெதும்பிப் போன நிலையில் தான் ஓகஸ்ட் 9ம்திகதிச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன.

இரக்கமின்றி வீட்டுக் கூரைகளைப் பிய்த்து எரித்தவர்கள் தகரம், சீட் என்பவற்றைக் கொண்ட வீட்டுக்காரர்களிடம் சென்று கூரையிலிருந்து சில தகரங்களையோ, சீற்றுக்களையோ அகற்றி விட வேண்டும் எனவும் எச்சரித்திருக்கிறார்கள்.

நாகரிக உலகில் நகர்ப் பகுதிக்குள்ளேயே ஒரு இனத்துக்கு வேண்டுமென்றே இழைக்கப்பட்ட காட்டுமிராண்டித்தனமான கொடுமை இது. மழை வெய்யிலிலிருந்து பாதுகாக்க உதவிய மெழுகு சிலைகளைக் கூட இவர்கள் கழற்றி எரித்திருக்கிறார்கள்.

நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் கேவலமான இனவாதக் கண்ணோட்டத்துடன் செய்யப்பட்ட சட்டத்தை உதாசீனப்படுத்தும் இந்தச் செய்கை பற்றி இரா. சம்பந்தன் பா.உவும், டக்ளஸ் தேவானந்தா பா.உவும் உரியவர்கள் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். திருகோணமலை இராணுவத் தலைமையகமோ தங்கள் சிப்பாய்கள் இப்படியான காரியத்தைச் செய்யவில்லை என்று மறுத்திருக்கிறது.

கூரையில்லா வீட்டில் தான் தமிழர்கள் குடியிருக்க வேண்டும் எனச் செயல்பட்ட குலராமன் தூதுவர்கள் மேல் இராணுவம் நடவடிக்கை எடுக்குமா? அரசு அக்கறை கொள்ளுமா?

-திரிபுரன்

# மூதூர் மாவட்ட வைத்தியசாலை:
# புலிப்பயம் வெறும் பூச்சுற்றல் தானா?



மூதூர் மாவட்ட வைத்தியசாலை நீண்டகாலமாக வைத்தியர் பற்றாக் குறையை எதிர்நோக்கி வருகிறது. பின்தங்கிய பல கிராமங்களுக்கு வைத்தியசேவை அளிக்க வேண்டிய கடப்பாடு உடையது. இந்த வைத்திய சாலை இயற்கைக் காரணிகளாலும் யுத்த நடவடிக்கைகளாலும் எந்த நேரமும் பாதிப்பை எதிர்பார்த்தி ருக்கும் சுமார் 50,000 மக்கள் இந்த வைத்தியசாலையையே நம்பி இருக்கிறார்கள்.

பல கிராமங்கள் கார், பஸ் என்பவற்றை எக்காலத்திலும் கண்ட தில்லை. வேறு பல கிராமங்கள் யுத்த நடவடிக்கைகள் காரணமாகப் பொதுப் போக்குவரத்துத் தொடர்புகளை ஆண்டுக் கணக்காக இழந்து போயுள் ளன. இக்கிராமவாசிகளிற் பலர் சுமார் பத்து மைல் தூரம் நடந்தோ, மாட்டுவண்டியில் வந்தோ தான் பஸ், கார் ஓட்டோ என்பவற்றை அணுக வேண்டும். விழும் ஷெல்களிடையே யும், வெடிக்கும் துப்பாக்கிகளிடையே யும் காலந்தள்ளும் இந்த அப்பாவி ஜீவன்கள் இவ்வளவு சிரமங்களையும் தாங்கி அவசர நோயாளிகளை உயிரைப் பணயம் வைத்து மூதூர் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரும் போது அங்கு வைத்தியர்கள் இல்லை யென்றால்...

இந்த லட்சணத்தில் தான் மூதூர் வைத்தியசாலை தனது கடமைகளைச் செய்கிறது. இரண்டு எம்.பி.பி.எஸ். தர வைத்தியர்களையும், இரண்டு உதவி வைத்திய உத்தியோகத்தர் களையும் கொண்டிருக்க வேண்டிய வைத்தியசாலை எம்.பி.பி.எஸ். தர வைத்தியர்களைக் கொண்டிராம லேயே காசநோயாளிபோல் இருமி இருமிக் காலந்தள்ளுகிறது.

பொதுமக்கள் எவ்வளவு தான் அழுது புலம்பினாலும் அந்தப் புலம்பலைக் காதில் போட்டுக் கொள்ளத் தயாரில் லாத - பணமொன்றே குறியாகக் கொண்டு வாழ்கிற வைத்தியர்களே இந்த ஆஸ்பத்திரி அவலத்துக்குக் காரணமாக இருக்கிறார்கள் என்பது தான் கசப்பான உண்மை.

வாரந்தோறும் மூதூர் நகர் சென்று தனியார் நிலையங்களில் தலைக்கு 175/= வாங்கி வைத்திய ஆலோசனை வழக்கிப் பெரும் பணத்தைச் சுளை யாக உழைக்கும் இவர்கள் பொது மக்கள் வரிப்பணத்தில் இலவசமாகப் படித்தோமே என்ற நன்றியையும் மறந்து மூதூர் வைத்தியசாலையில் கடமை செய்வதற்குப் ''புலிப்பயம்'' என்று ஒப்பாரி வைப்பது யார் காதில் பூச்சுற்ற என்று தான் கேட்கத் தோன்று கிறது.

அரசவைத்திய அதிகாரிகள் சங்கத்துக் கும் மாகாண சுகாதார அமைச்சுச் செயலாளர் டபிள்யூ. ஏ.திஸேரா வுக்கும் இடையிலான கடிதங்களின் சில வரிகள் வாசகர்களுக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்தும்.

திருகோணமலை மாவட்ட வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் மாகாணச் சுகாதாரச் செயலருக்கு ஜூலை 22, 98 திகதியிட்டு ஒரு கடிதம் எழுதப்பட் டுள்ளது. ஒன்பது பந்திகள் கொண்ட இக்கடிதத்தில் ஏழு விடயங்கள் கூறப் பட்டுள்ளன. தலைவர், பி. கணேச பாகுவும், செயலாளர் கே.ஈ.கருணா கரனும் ஒப்பமிட்டுள்ளனர். இவற்றுள் முதலாம், இரண்டாம், ஐந்தாம் விடயங்கள் பொதுமக்களுடன் தொடர்புடையதான வைத்திய அதிகாரிகளின் பிரச்சினைகளாகும்.

வைத்திய அதிகாரிகளின் பிரச்சி னைகள் எனத்தலைப்பிட்ட கடிதத்தின் முதலாவது பந்தி.

''அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் திருகோணமலைக் கிளையின் அவசரக் கூட்டம் தள வைத்தியசாலை யில் 22.7.98ல் இடம்பெற்றது. வைத்திய உத்தியோகத்தர்கள் எதிர் கொள்ளும் பலவிதமான பிரச்சினை களை நன்கு ஆராய்ந்து பின்வரும் விடயங்கள் தொடர்பான முடிவுகளை ஏகமனதாக எடுத்துள்ளது.'' (எனத் தொடக்கி இலக்கமிட்டுப் பிரச்சினை களை ஆரம்பிக்கிறது.)

1. வைத்தியர் கே.ஜி.டி.சில்வா, வைத்தியர் எம்.சுகுணதேவன் ஆகி யோர் பதிற்கடமைக்காக (Relief only) மூதூருக்குச் செல்லும்படி பணிக்கப் பட்டிருந்தனர். வைத்தியர்களான சக்கிர் தம்பதிகள் இருவரும் ஏற் கெனவே பாதுகாப்புக் காரணங்களுக் காகப் பதிலாட்கள் எவருமின்றி மத்திய அமைச்சால் அங்கிருந்து இட மாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். இத்தகைய பாதுகாப்புநிலை தொடர்ந் திருக்குமிடத்து ஏனைய வைத்திய அதிகாரிகளும் அதேவிதமான பிரச்சி னைகளையே எதிர்கொள்வர். பாது காப்பு நிலைமை சீராகியது எனக் கண்டால் சக்கிர் தம்பதிகள் இவரும் மீளவும் மூதூரில் பணியாற்ற அழைக் கப்பட வேண்டும்.

2. ஏற்கெனவே மத்திய அமைச்சரால் நியமிக்கப்பட்ட மூதூரில் பணியாற் றிக் கொண்டிருந்த வைத்தியர் செல்வி பிருந்தா இராமநாதனை அவருடைய விருப்பத்துக்கு மாறாக மாகாண நிர்வாகம் திருகோணமலைக்கு இடமாற்றம் செய்தது. இதனால் பாதிப்புக்குள்ளான அவர் மன நல மருத்துவரிடம் சிகிச்சை பெற நேர்ந் தது. இதனையடுத்து அவருக்கு பதவி வறிதாக்கல் கடிதம் அனுப்பட்டது. இச்செய்கை மாகாண நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட துக்ககரமானதும் சரியற்றதுமான ஒரு நடவடிக்கை யாகும்.

5. சகல வைத்திய அதிகாரிகளதும் இடமாற்றங்கள் மத்திய அமைச்சா லேயே செய்யப்பட வேண்டியவை; மாகாண நிர்வாகத்தாலல்ல. மாகாண நிர்வாகத்தால் செய்யப்பட்ட சகல இடமாற்றங்களையும் தயது செய்து ரத்துச் செய்யவும்.

உதாரணத்துக்கு

1. வைத்தியர் செல்வி ஆர். எப்.செனவிரட்ன (எம்.ஓ.மூதூர்)

2. வைத்தியர் செல்வி பி. இராமநாதன் (எம்.ஓ.மூதூர்)

மேலும் பல உதாரணங்கள் உள்ளன.

கடைசிப்பந்தி அரச வைத்திய அதிகா ரிகள் சங்கம் திருகோணமலைக் கிளை மேலே காட்டப்பட்ட ஒழுங்கீனங் களை இருவார காலத்துக்குள் திருத்து மாறு கேட்டுக் கொள்கிறது. திருப்தி கரமான தீர்வு தரப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைக்கு நாங்கள் தள்ளப்படுவோம்''

ஒப்பம்.

(தலைவரும் செயலாளரும் ஒப்பமிட்டுள்ளனர்.)

இதற்கான பதிற்கடிதம் மாகாண சுகாதார அமைச்சின் செயலரால் 28.7.98 திகதியிட்டு எழுதப் பட்டுள்ளது. அரச வைத்திய அதிகாரி கள் சங்கத் தலைவருக்கு எழுதப்பட்ட இக்கடிதத்தின் பிரதிகள் கௌரவ ஆளுநர், கொழும்பு சுகாதார அமைச்சின் செயலாளர், மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர், பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர், மாவட்ட வைத்திய அதிகாரி ஆகியோ ருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

வைத்திய அதிகாரிகளின் பிரச்சினை கள் எனத் தலைப்பிடப்பட்ட இக்கடி தத்தில்

''உங்களுடைய 22.7.98 திகதியிடப்பட்ட கடிதம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் பற்றி சரியான நிலையை உங்கள் கவனத்துக்குத் தருகிறேன்.

வைத்தியர்கள் சக்கிர் தம்பதிகள் மத்திய அமைச்சுக்கு பாதுகாப்பு நிலைமை சம்பந்தமாகப் பிழையான தகவல்களைக் கொடுத்து இடமாற்றம் பெற்றுள்ளனர். மத்திய அமைச்சு இவ்விடயத்தில் எனது பலத்த ஆட்சே பனையையும் கருத்திற்கொள்ளாது பதிலாட்களையும் நியமிக்காது இட மாற்றம் வழங்கியுள்ளது. பதிலாட்கள் இன்றி இவர்களை விடுவிக்க நான் விரும்பாத போதிலும் வடகிழக்கு மாகாண ஆளுநரும் பிரதி சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியா ராச்சியும் மாகாணத்திலிருந்து அவர் களை விடுவிக்குமாறு என்னை நெருக்கினர். இவ்விடயம் தொடர்பாக என்னால் எழுதப்பட்ட 14.5.98, 25.5.98 திகதிகள் கொண்ட 9/EB/16/98 இலக்கக் கடிதப்பிரதிகள் தங்கள் பார்வைக்காக இணைக்கப்பட்டுள் ளன. இதற்கும் மேலாக திருகோண மலை 22ம் இலக்கப் படைப் பிரிவின் தளபதி இவர்கள் பிழையான தகவல்களைக் கொடுத்து வஞ்சகமான முறையில் இடமாற்றம் பெற்றுள்ளனர் என்று மத்திய சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளதோடு மூதூரின் பாதுகாப்பு நிலைமை மோசமானதாக இல்லையென்றும் உறுதிப்படுத்தியிருக்கிறார். இதற்கு ஆதாரமாக அவருடைய 6.6.98 திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரதியை இணைத்துள்ளேன். மத்திய அமைச் சால் இடமாற்றம் செய்யப்பட்ட சக்கிர் தம்பதியினரை மூதூருக்கு அழைக்கு மாறு தாங்கள் விடுத்த கோரிக்கையை நிறைவேற்ற முடியாதவனாக இருக்கி றேன்

2. வைத்தியர் செல்வி பி.இராமநாதன் மூதூர் மாவட்ட வைத்தியசாலையில் நியமனம் பெற்றார். ஆனால், அவர் ஒழுங்காகக் கடமைக்குச் சமூகமளிப் பதில்லை என்பது உங்களுக்கும் தெரி யும். அத்தோடு அங்கு பல தொல்லை களையும் உருவாக்கிக் கொண்டி ருந்தார். திருமலைக்கு இடமாற்றம் பெற்றதன் காரணமாக அவர் மன நிலை பாதிப்புற்றுள்ளதாக நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். நீங்கள் தவறான தகவல்களைக் கொண்டுள்ளதாக நான் கருதுகிறேன். திருகோணமலைக்கு இடமாற்றம் பெறுவதற்கு முன்ன ரேயே அவர் மனநலம் சம்பந்தமான மருத்துவம் பெற்றிருக்கிறார். அவர் நீண்ட விடுமுறையில் நின்று வந்த பின்னர் மூதூருக்குச் செல்லும்படி பணிக்கப்பட்டார். ஆனால், விருப்ப மின்றி எங்கள் அழுத்தத்தின் பிரகா ரமே சென்றார். கடமைக்காகச் சென்ற பின்பு பல கஷ்டங்களை உண்டு பண்ணினார். எனவே மேலும் பிரச்சி னைகள் தோன்றாமல் தடுக்குமுகமாக பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (வைத்தியர் வி.சிவ நாதன் ) அவர்களின் வேண்டுகோ ளின் பேரில் எனது சிபார்சுக்கமைய 29.5.97 திகதியிடப்பட்ட ELA/01/97 இலக்கக் கடிதத்தின் பிரகாரம் கொழும்பு சுகாதார அமைச்சின் செயலாளரினால் அவர் மூதூரிலி ருந்து திருகோணமலைத் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனவே மாகாண நிர்வாகம் அவரை இடமாற்றியதாகக் கூறுவது பிழை யாகும்.

5. மாகாண நிர்வாகத்தால் அல்ல மத்திய அமைச்சரால் தான் இட மாற்றங்கள் செய்யப்பட்வேண்டும் என நீங்கள் வலியுறுத்துவதாயின் தங்கள் கடிதத்தின் முதலாவது பந்தியின் இறுதி வசனம் முரண் பாடடைகிறது. எவ்வாறாயினும் மத்திய அமைச்சின் அனுமதியின்றி நான் ஏத்தகைய மாற்றமும் செய்த தில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். 27.5.97 திகதி யிடப்பட்ட ELN/3/97 கடிதத்தின் பிரகா ரமே வைத்தியர் செல்விஆர்.எம். செனவிரத்தினவை மூதூருக்கும் வைத்தியர் எப்.ஏ.எம்.எச்.சக்கிரை பிராந்திய சுகாதார அதிகாரியாக திருகோணமலைக்கும், திருமதி எஸ்.ஆர்.சாதிக்கீனை பால்வினை நோய் அதிகாரியாக மட்டக்களப்புக் கும் நியமித்தேன். அரச வைத்திய அதிகாரிகள் சங்கப்பிரதிநிதிகளுடன் 97 ஜுன் ஆரம்பத்தில் நான் கொழும்பு அமைச்சு அலுவலகத்துக்குச் சென்றி ருந்த போது அங்குள்ள அதிகாரிகள் வைத்தியர் சக்கிரையும் வைத்தியர் திருமதி சக்கிரையும், (சாதிக்கீன்) ஒரே இடத்தில் பணிபுரிய வைக்குமாறு எனக்குக் கூறியது எனது நினைவில் இருக்கிறது. இதன் பிரகாரம் கணவன் மனைவி இருவரையும் மூதூரில் பணிபுரிய அனுமதிப்பதுடன், வைத்தி யர் செல்வி ஆர்.எப்.செனவிரத்தி னவை திருகோணமலைக்கு இட மாற்றலாம் எனக் கருத்துக் கூறினேன். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டதால் அதன்படி செயல்பட்டேன். தங்களது இக்கடிதம் கிடைப்பதற்கு முன்னர் இது சம்பந்தமாக தங்கள் சங்கத்தால் இவ்விடயம் தொடர்பாக எவ்வித ஆட்சேபனையையும் எமக்குத் தெரிவிக்கப்படவில்லை. பயனற்ற விடயத்தில் நாம் ஈடுபடுவதாக நான் கருதுகிறேன். நான் மத்திய அமைச்சின் வேண்டுகோளுக்கமைய நடந்தவனேயன்றி என் விருப்பில் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட வில்லையென்று உங்களுக்குத் தெரி விக்க விரும்புகிறேன்.''

என்று தொடர்ந்து கடைசிப்பந்தியில்...

''மூதூரில் வைத்தியசாலையில் இன ரீதியான ஆபத்து எதுவும் இல்லை என்பதை மீண்டும் கூறிவைக்க விரும்புகிறேன். ஒரு சிங்களவரும், இரண்டு தமிழர்களும், உதவி வைத்திய உத்தியோகத்தர்களாக எவ் வித பிரச்சனைகளுமின்றிக் கடமை புரிகிறார்கள்.

நன்றி''

ஒப்பம்

இந்தக்கடித விபரங்கள் மூதூர் ஆஸ் பத்திரி வைத்தியர் பற்றாக்குறையின் காரணத்தை விளக்கப்போதுமானது அல்லவா?

விவேகி

இறுதிப் பகுதி —

# தமிழ் தேசிய வாதத்தின் பாராளுமன்ற அரசியல் வறுமை !

சி.சிவசேகரம்

*தமிழ் மக்களுக்கு நல்லது எது என்பது பற்றியோ அவர்களது அன்றாடத் தேவைகள் எவை என்பன பற்றியோ ஆழ்ந்த அக்கறை தமிழரசுக் கட்சிக்கு இருந்ததாகக் கூறுவது கடினம். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் பற்றி அதிகம் எதிர்த்துப் பேசிய தமிழரசுத் தலைமை இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை என எதையேனும் எடுத்ததா என்பதை நாம் கவனிக்க வேண்டும்*

தமிழ் மக்களுக்கு நல்லது எது என்பது பற்றியோ அவர்களது அன்றாடத் தேவைகள் எவை என்பன பற்றியோ ஆழ்ந்த அக்கறை தமிழரசுக்கட்சிக்கு இருந்ததாகக் கூறுவது கடினம். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் பற்றி அதிகம் எதிர்த்துப் பேசிய தமிழரசுத் தலைமை இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை என எதையேனும் எடுத்ததா என்பதை நாம் கவனிக்க வேண்டும். 1970களில் ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான அரசு விதித்த இறக்குமதித் தடைகளால் வடபகுதி விவசாயிகள் நன்மைக் காணத் தொடங்கியபோது, வடக்கிலிருந்து வன்னிநோக்கிய தமிழ்க் குடிபெயர்வும் ஊக்கம் பெற்றது. அதேவேளை, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் தொடர்ந்தன. மலையகத் தமிழர்கள் 1974க்குப் பின்பு வன்னிக்குப் புலம்பெயர்ந்த போது அவர்கள் அனுபவித்த இன்னல்கள் வடக்கின் தமிழ்த் தேசியவாதம் எவ்வளவு தூரத்திற்கு தனது யாழ் - மையச் சிந்தனையிலும் சாதிய, நிலவுடமைச் சுரண்டல்கள் நடைமுறையிலும் ஊறிப்போயிருந்தது என்பதையே காட்டின. அங்கு மலையக மக்களுக்காக நல்ல பணிகள் செய்தோர் இருந்தனர். அவர்களது செயல்கள் தமிழரசுக்கட்சி அரசியலின் விளைவாக அல்லாது மனிதாபிமானத்தாலும் தமிழ் இனம் பற்றிய அக்றையாலும் உந்தப்பட்டவையே.

முற்கூறியவை ஒரு புறமிருக்க, 1970க்குப் பிந்திய காலகட்டம், ஒரு கட்சி என்ற முறையில் தமிழரசுக் கட்சியைச் செயலற்ற ஒன்றாக்கும் ஆபத்து மிகுந்த ஒன்றானது. 1965-69கால இடைவெளியில் அரசாங்கத்துடன் நெருங்கி உறவாடி அலுவல்களைச் சாதித்த தமிழரசுக் கட்சியினருக்கு 1970 தேர்தலின் பினனான நிலை அனாதரவான ஒன்றாகத் தெரிந்ததில் வியப்பில்லை. எனினும், கடவுள், தமிழர்களைக் காப்பாற்ற விரும்பாவிட்டாலும் தமிழரசுத் தலைவர்களைக் காப்பாற்றச் சிறிது உதவினார் என்றுதான் கூற வேண்டும்.

1970ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தனது சொந்த தொகுதியிலேயே தோற்கடிக்கப்பட்ட அமிதர்லிங்கம் தனது அரசியற் புனர்வாழ்வுக்காகத் தனக்கென ஒரு போராளிப்பலத்தை உருவாக்கும் சூழ்நிலை வெகுவிரைவிலேயே ஏற்பட்டது. 1970க்கு முன்பிருந்தே செயற்பட்ட மாணவர் பேரவை எனற அமைப்பு மேலும் தமிழ்த் தேசிய அரசியற் பண்புடையதாக மாறியது. 1970ம் ஆண்டுப் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட தரப்படுத்தல் தமிழ் மாணவர்களை மிகவும் பாதித்தது. அந்த நிலையிற் கூட, நமது கல்வி முறையின் ஏற்றத்தாழ்வுகளைக் கணிபிலெடுத்துப் பின்தங்கிய பகுதிகளிலும் பாடசாலைகளிலும் பயிலும் மாணவர்கட்கு உயர் கல்வி வசதிகளை அதிகரிக்கும ஒரு மாற்றுத் தீர்வு பற்றித் தமிழரசுக்கட்சி யோசனை கூறியிருந்தால், பிரச்சினையின் இனவாதப்பரிமாணம் முறியடிக்கப் பட்டிருக்கும். தமிழரசுக்கட்சி வெறுமனே ஆட்சேபம் தெரிவித்த போது, யாழ்ப்பாணத் தமிழ் மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர். அவர்களது போராட்ட உணர்வை நெறிப்படுத்தும் ஆற்றல் தமிழரசுக்கட்சிக்கு இருக்கவில்லை. அடுத்து வந்த ஆண்டுகளில் மாவட்ட ரீதியான ஒதுக்கீடு தரப்படுத்தலுடன் இணைந்தபோது, யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கட்கும் வன்னிப் பகுதி, கிழக்கு மாகாணப்பகுதி மாணவர்கட்குமிடையில் ஒரு பாரிய கருத்து முரண்பாடு உருவானது.

தமிழ் மாணவர்கட்கெதிரான பாரபட்சம் தவறானது என்பது ஒருபுறமிருக்க, தரப்படுத்தல் எழுப்பிய அடிப்படையிலான சில கேள்விகளுக்குத் தமிழ், சிங்கள தேசியவாத அடிப்படைகளில் தீர்வு தேட முடியாது. தேசியவாதிகளது ஆதிக்கத்திலிருந்த பாராளுமன்ற அரசியல் தமிழ் இளைஞர்களது விரக்தியை மோசமாக்கியது. இதைத் தமிழரசுக் கட்சி அறுவடை செய்யும் வாய்ப்பு 1972ம் ஆண்டின் புதிய குடியரசு யாப்பின் வரைவோடு உருவானது.

1972ம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு வரைவதில் தமிழரசுக் கட்சி எடுத்த நிலைப்பாடு தவறானது என்பது என் கணிப்பு. அதே வேளை பாராளுமன்றத்தில் போதியளவு பெரும்பான்மை வலிமை இருந்ததைக் கருதித் தமிழ் மக்களது முக்கியமான பாராளுமன்றக் கட்சியை உதாசீனம் செய்யும் முறையில் யாப்பின் வரைவிற்குப் பொறுப்பானவர்கள் நடந்து கொண்டதும் மிகவும் கண்டிக்கத்தக்கது.

தமிழரசுக்கட்சி இலங்கை குடியரசாவது பற்றி என்ன நிலைப்பாட்டை எடுத்தது என்பதும் பகிஷ்கரிப்பின் மூலம் சாதித்தது என்ன என்பதும் முக்கியமான கேள்விகள். புதிய அரசியல் யாப்பைப் பற்றி ஆக்கமன விமர்சனம் ஒன்றை மேற்கொள்ளவும் சகல சிறுபான்மை இனத்தவருக்கும் பாதகமான கூறுகளை எவ்வாறு திருத்துவது என்று விளக்கவும் அரவ்கள் கூடிய கவனங்காட்டியிருக்கலாம். ஐ.தே.கவுடன் தமிழரசுக் கட்சி ஏற்படுத்தய உறவும் ஸ்ரீ.ல.சு. கட்சியுடனான பகைமை உணர்வும் தமிழரசுத் தலைமையின் சிந்தனையைக் கடிவாளமிட்டன என்று கூறலாம். மறுபுறம், ஐக்கிய முன்னணி அரசின் மூன்று கட்சிகளும் உறவை ஏற்படுத்துவதற்கான வசதியை அன்றைய சூழ்நிலை வழங்கவில்லை. அதற்கேற்றாற் போலத் தமிழரசுக் கட்சியும் பாராளுமன்றத்தில் ஐ.தே.கவுக்கு இசைவாகவே நடந்து கொண்டது.

புதிய அரசியல் யாப்பைத் தமிழரசுக் கட்சி நிராகரிப்பதற்காகக் காட்டிய கராணம் மேலெழுந்தவாரியாக நோக்கும் போது ஏற்புடையது. பழைய யாப்பில் சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான சட்டமியற்றலுக்கு எதிரான பாதுகாப்பை வழங்கிய 29ம் பாகம் நீக்கப்பட்டமை பற்றிய ஆட்சேபம் நியாயமானது. எனினும், அந்த வாசகங்கள் இருக்கும்போதே மலையகத் தமிழருக்குக் குடியுரிமை போனது, சிங்களமே அரசகரும மொழியானது. அது மட்டுமன்றிப் பின்னையது பற்றி மகாராணியாரின் நீதிமன்றில் வழக்காடியும் எதுவும் ஆகவில்லை. அரசியலில் சட்டப்புத்தகங்களை விட முக்கியமானவை சமுதாய யதார்த்தங்கள் என்பது தெளிவு. எனவே, தமிழரசுக் கட்சி எதுவிதமான போராட்டத்துக்கும் ஆயத்தமின்றி யாப்பு வரைவிற் பங்குபற்ற மறுத்து அதன் பின் அரசியல் யாப்பின் பிரதியை எரித்து ஆத்மதிருப்தி தேடியதை விட அதிகமாக ஒன்றும் சாதிக்கவில்லை.

ஐ.மு. அரசியல் இனவாதப் போக்கு இருந்தது பற்றியோ, தமிழ் மக்களுக்கு எதிரான பல அநீதிகள் நிகழ்ந்தது பற்றியோ நாம் விடிய விடியப் பேசலாம். ஆயினும், அவற்றைத் தவிர்க்கவும் நிகழ்ந்தால் எதிர்த்துப் போரிடவும் தமிழரது பிரதிநிதிகள் என்போரிடம் என்ன வழிமுறைகள் இருந்தன என்ற கேள்விக்கு, மெளனமே பெரிதுஞ் சரியான விடையாகும்.

1974 தமிழாராய்ச்சி மாநாடு எங்கு நடத்தப்பட வேண்டும் என்ற இழுபறியில் அரசாங்கம் செய்த தவற்றுக்கு அமைச்சர் குமாரசூரியரது பங்களிப்பு பெரிது. மறுபுறம், தமிழாராய்ச்சி மாநாட்டை எங்கு வைப்பது என்ற தீர்மானத்தில் தமிழரசுக்கட்சியின் அரசியற் குறுக்கீடுகளும் இருந்தது. எவ்வாறாயினும் அரசாங்கம் தொடக்கத்திலேயே தமிழாராய்ச்சி மாநாட்டுக் குழுவின் முடிவை மதித்து யாழ்ப்பாணத்தில் நடத்த அனுமதித்திருந்தால் பெருமளவான மனக்கசப்பு தவிர்க்கப்பட்டிருக்கும். மநாட்டின் இறுதியில் அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட பொது சனங்களுக்கான நிகழ்ச்சியின் அசம்பாவிதம் தவிர்க்கக் கூடியது. அரசாங்கம் மாநாடு தொடர்பாக விட்ட தவறுகளால், மாநாட்டின் இறுதி நாளில் நிகழ்ந்த வீண் மரணங்கட்கான முழுப் பழியையும் அரசாங்கத்தின் மேற்சுமத்துவது மிகவும் இலகுவாயிற்று.
இதன் தொடராக நிகழ்ந்த அரசியற் படுகொலையைத் தமிழரசுக் கட்சி கண்டிக்கத் தவறியது என்பது மட்டுமின்றித் துரோகிகள் கொல்லப் படுவதை அமிர்தலிங்கம் ஏற்றார் எனும் விதமாகவே அவரது நிலைப்பாடு இருந்தது. துரோகிகளை நோக்கி நீண்ட துவக்குகள் எவருக்கும் துரோகி என்ற அடையாளத்தை இடும் கைகளாலேயே சுமக்கப்படும் போது, அவற்றின் அபாயம் பெரிது.

புதிய அரசியல் யாப்பை எதிர்த்துச் செல்வநாயகம் பா.உ. பதவியை விலகி உப தேர்தலை எதிர்நோக்கிய போது அரசாங்கம் அத்தேர்தலை வேண்டுமென்றே காலங்கடத்தியது. இதனால் தமிழரசுக்கட்சி எதிர்பார்த்த உடனடியான அரசியல் லாபம் கிட்டாவிட்டாலும் தமிழ் மக்கள் மத்தியில் அரசாங்கத்தைப் பற்றிய கசப்புணர்வு அதிகரித்தது. ஈற்றில் காங்கேசன்துறையில் உபதேர்தல் நடந்தபோது, செல்வநாயகத்தை எதிர்த்து சோவியத் சார்பு கம்யூனிட்ஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட வி. பொன்னம்பலம் கணிசமான வாக்கு விகிதத்தைப் பெற்றே தோல்வி கண்டார். இது தமிழரசுக்கட்சித் தலைமை (அப்போது கூட்டணி?) எதிர்பாராத ஒரு எதிர்ப்புப் பரிமாணம். இது ஒரு புறமிருக்கத் தேர்தலில் பிரிவினை வலத்தை எதிர்த்து வாக்களிக்குமாறு பகிரங்கக் கோரிக்கை விடுத்த பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர்கள் ஒவ்வொருவருக்கம் மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1974ல் உருவான த.ஐ.முன்னணியில் இணைந்த தொண்டமானும், ஐ.தே.க. பிரமுகரான தேவநாயகமும், ஐ.மு. ஆட்சியை எதிர்க்கும் தேவைகருதியே அங்கு சென்றனர். முன்கூறியது போல 1970ல் அந்த அமைப்பு தமிழீழப் பிரிவினையைக் கோரும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற கூட்டணியானபோது 1977ல் வரவுள்ள தேர்தலை மனதிற்கொண்டு தொண்டமானும், தேவநாயகமும் ஒதுங்கிக்கொண்டனர்.

1977 தேர்தலுக்கு மக்கள் முன் வைக்கத் தமிழரசுக்கட்சியிடம் புதிதாக வேறு எதுவும் இல்லை எனற காரணத்தாலேயே தமிழீழப் பிரிவினைக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது என்ற கருத்தை அன்று கூட்டணி மறுத்தாலும் பின்னைய நிகழ்வுகளை அவதானிக்கும் எவருக்கும் தமிழீழத்தை எவ்வாறு வென்றெடுப்பது என்று அற்ப யோசனையும் இல்லாமலேயே அந்தக் கருத்து முன்வைக்கப்பட்டது என விளங்கும்.

மேற்கூறிய சந்தர்ப்பவாதத்தை நோக்கும் எவரும், 1997 தேர்தலில் ஜே.ஆர்.ஜயவர்த்தனவாவுடன் தமிழரசுத் தலைமையும் இ.தொ.கா. தலைமையும் செய்து கொண்ட உடன்படிக்கையையும் கணிப்பில் எடுத்தால், தமிழீழ விடுதலைப் பற்றி எவ்வளவு கரிசனையுடன் கூட்டணி தேர்தலில் இறங்கியது என விளங்கும். ஜயவர்த்தனவின் சிங்களப் பேரினவாதமும் தமிழர் மீதான துவேஷமும் தமிழரசுக் கட்சியிலிருந்த எவரும் அறியமுடியாத ஒன்றல்ல. அவருடன் செய்யப்பட்ட உடன்படிக்கை 1983 இனவாத வன்முறையை அடுத்துப் பாராளுமன்றத்தில் தொண்டமான் அம்பலப்படுத்தும்வரை கூட்டணியால் ஒப்புக்கொள்ளப்படாது இரகசியாமாகவே பேணப்பட்டது.

தமிழரசுக்கட்சியோ, கூட்டணியுட் புகுந்த தமிழ்க் காங்கிரசின் பெரும் பகுதியோ தமிழ் மக்களது நம்பிக்கையை எப்போதே இழந்து விட்டவைதாம். ஆயினும், சிங்களப் பேரினவாத அரசியலின் முன்பு தமிழ்பேசும் மக்களுக்கு இருந்த தெரிவு சிறியதே. அதைவிடப் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளது சீரழிவு அவர்களைத் தெற்கிலும் வடக்கிலும் செல்லாக் காசாக்கியவிட்டது.

1977 தேர்தல் வெற்றிக்குப்பின்பு, ஜயவர்த்தன கூட்டணிக்கு அளித்த பரிசுகள் பல. 1977 இனவாத வன்முறையின் போது அவசரகாலச் சட்டம் பிறப்பிக்க மறுத்தமை, 1981ல் யாழ்ப்பாண நூலக எரிப்பு, அதிகாரமற்ற மாவட்ட சபைகள் மூலம் கூட்டணியினரை முட்டாள்களாகக் காட்டியது, 1983 வன்முறை என்பன மறக்க முடியாத சில. தரப்படுத்தல் தொடர்பாக வழங்கப்பட்ட சிறு சலுகை யாழ்ப்பாணத் தமிழ் மாணவர்கள் மீதான சுமையை அதிகம் தளர்த்தவில்லை என்றே கூற வேண்டும்.

1997 தேர்தலின் பின்பு, ஸ்ரீ.ல.சு.க. பிரமுகர்கள் மட்டுமின்றி ஆதரவாளர்களும் ஐ.தே.க. காடைத்தனத்திற்கு ஆளானபோதோ, 1980ல் சிறிமா பண்டாரநாயக்காவின் உரிமை பறிக்கப்பட்டபோதோ, 1980ல் அரசாங்க ஊழியர்களது வேலை நிறுத்தம் கொடுமையாக நசுக்கப்பட்டபோதோ கூட்டணித் தலைமைக்கு நிதானம் திரும்பியிருக்கலாம். ஆயினும், அது நிகழவில்லை. கூட்டணி உண்மையான ஒரு எதிர்க்கட்சியாக நடந்து கொள்ளும் என்ற வாய்ப்பிற்கு ஜயவர்த்தன இடம் வைக்கவுமில்லை. மாவட்ட சபை விவகாரம் தந்த விரக்தியின் விளைவாகக் கூட்டணி ஸ்ரீ.ல.சு.கட்சியுடனும் இடதுசாரிக் கட்சிகளுடனும் சிறிது உறவு முறை பேண முயன்றது. ஆயினும் 1982ல் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தேர்தலைப் பின்போடும் முயற்சியை எதிர்க்கக் கூட்டணி தயங்கியது. வடக்கிலிருந்த பல்வேறு ஜனநாயக சக்திகளது கடும் எதிர்ப்பின் விளைவாகவே கூட்டணி ஒப்புக்கேனும் அதை எதிர்த்து அறிக்கை விடுத்தது. 1983 இனவாத வன்முறை, தமிழ் மக்கள் ஐ.தே.க.வின் இந்தச் சர்வாதிகார முயற்சிக்கு எதிராகத் தமது கருத்தைத் தெரிவித்ததற்கான தண்டனை என்ற கருத்தில் நியாயம் இல்லாமலில்லை.

1983க்குப் பிறகு கூட்டணித் தலைமை இந்திய அரசின் தயவில் வாழும் நிலைக்கு ஆளாயிற்று. அதன் பின்பு நடந்தவை பல வேறொரு அரசியல் நடத்தை மரபுக்கு உரியவை.

1970களில் அரசியற் படுகொலைகளாகவும், மிரட்டல் அரசியலாகவும் விரிவடைந்த வன்முறை அரசியல் 1983க்குப் பிறகு வடக்கிலும், கிழக்கிலும் பூரண ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அந்த அரசியல் வன்முறையை விமர்சிப்போர் பலர் வன்முறை வரும் திசையை மனதிற் கொண்டே தமது கண்டனங்களை முன்வைக்க காண்கிறோம். இது 'மனித உரிமை அரசியல்.'

அரசியலில் வன்முறைக்கு இரண்டு அம்சங்கள் உண்டு. ஒன்று, ஆயுதமேந்திய போராட்டத்திற்கான தேவை. மற்றது அரசியல் நிலைப்பாடு. முன்னையதில் ஒரு பகுதியை மார்க்சியவாதிகளின் சாதிய எதிர்ப்புப் போராட்டத்தினின்று கற்ற விடுதலை இயக்கங்கள், அந்தப்போராட்டம் மக்கள் போராட்டமாக அமைய வேண்டிய தேவையையும் வன்முறை எவருக்கு எதிரானது என்பதின் கூரிய கவனமும் பற்றி அதிகம் கவனிக்கவில்லை. அரசியல் நிலைப்பாட்டைப் பொறுத்தவரை, தமிழ் - சிங்கள மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய முரண்பாடுகளைப் பகை முரண்பாடாக்கிப் பேரினவாதத்திற்கும் ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இனத்திற்கும் இடையிலான முரண்பாட்டுடன் சமன்படுத்தும் போக்கை நாம் காணலாம். மறுபுறம், மலையகத் தமிழரதும், முஸ்லிம்களதும் தனித்துவமான, தேசிய இன அடையாளத்தை மறுக்கிற போக்கும் தமிழ்த் தேசியவாதத்தின் குறுகிய நலன்கட்கு வசதியாகப் பாவிக்கும் போக்கும் அடையாளங் காணப்படுகின்றன. மேற்கூறியவற்றை நோக்கும்போது, விடுதலை இயக்கங்கள் என்பன பாராளுமன்றத் தேசியவாதக் கட்சிகளது குறுகலான சிந்தனை மரபாற் சிறைப்படுத்தப்பட்டவர்களாகவே இருப்பதை நாம் காணலாம்.

→ 17



# சிங்களப் பே…
# மலையகத் தமி…

1994ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பொ.ஐ.மு. அரசானது கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் 1995ம் ஆண்டு ''மலையக கலாசார மேம்பாட்டுக் குழு'' எனும் பெயரில் ஒரு குழுவை அமைத்துள்ளது. இக்குழுவினால் ஒவ்வொரு வருடமும் ''மலையக கலாசார பணியாளர்களுக்கான செயலமர்வு'' எனும் பெயரில் மூன்று நாள் செயலமர்வொன்றும் நடாத்தப்பட்டு வருகிறது. இம்முறையும் ''மலையக கலாசாரப் பணிப்பாளர்களுக்கான செயமலர்வு'' ஒகஸ்ட் 7,8,9ம் திகதிகளில் மீப்பே ஆசிரியர் கல்லூரியில் நடாத்தப்பட்டது.

- இம்மலையகக் கலாசாரப் பணியாளர்களுக்கான குழுவின் செயலாளர் ஒரு சிங்களவராவார்.
- செயலமர்வு, சிங்கள மொழி பேசுபவாகளாலேயே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அறிவித்தல்கள் யாவும் சிங்கள மொழியிலேயே இருந்தன.
- மலையகச் கல்சார மேம்பாட்டுக்குழுவில் அங்கம் வகிக்கும் மலையகத் தமிழர்களும் கூட பங்குபற்றுபவர்களாகத் தான் கலந்து கொண்டிருந்தனரே தவிர செயலமர்வை ஒழுங்கு செய்து நடாத்துபவர்களாக அல்ல.

மலையகக் கலை தொடர்பாக எந்த விரிவுரையுமே இடம்பெறாததோடு மூன்று விரிவுரைகளைத் தவிர ஏனைய அனைத்தும் சிங்கள விரிவுரையாளர்களால் நடாத்தப்பட்டன. அதில் கூறப்பட்ட விடயங்களுக்கும் மலையகத் தமிழரின் வாழ்வியலுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்பது வேறு விடயம். (மொழி பெயர்ப்பு இருந்தாலும் அது காத்திரமானதாக இருக்கவில்லை.)

சிங்கள விரிவுரையாள்ர்கள் ஆளும் பொ.ஐ.முன்னணி சார்புடையவர்களாகவிருந்தோடு அவர்களால் அரசாங்க சார்பு பிரச்சாரங்களும் தாராளமாக மேற்கொள்ளப்பட்டன.

- பிரதம விருதினர்களாக பங்குபற்றிய அமைச்சர்களும் இச்செயலமர்வுக்கு பொறுப்பானவர்களும் தாராளமாகவே அரசியல் பிரச்சாரத்திற்கு மேடை தேடிக்கொண்டனர்.
- ''எமது அரசு, உங்களது (மலையகத் தமிழரது) கலாசார நலனில் அக்கறை கொண்டு உங்களுக்கான கலாசாரப் பிரிவை ஏற்படுத்தியுள்ளது'' எனும் பேரினவாத மமதைத்தனமான கூற்றுக்களுக்கும் பஞ்சமிருக்கவில்லை.

பௌத்த - சிங்களப் பேரினவாத நிர்வாகக் கட்டமைப்பிற்குள் எதுவும் சிங்கள மயமாகத் தானிருக்கும் என்பது ஒன்றும் புதியதல்ல. இத்தகைய பேரினவாத நிர்வாகக் கட்டமைப்பிற்குள் நடைபெறும் செயற்பாடுகளுக்கு மேலும் சலுகைகள் கேட்பதோ அல்லது ம.க.ப. செயலமர்வின் வெற்றி தோல்விகளை ஆராய்வதோ இங்கு எனது நோக்கமல்ல. இதன் பின்னாலுள்ள பேரினவாத அரசியல் போக்குகளை அம்பலப்படுத்துவதே எனது பணி.

### *அருகிவரும் மலையகத்தின் பாரம்பரியக் கலை மரபுகள்...?*

ஒவ்வொரு மக்கள் சமூகமும் தன்னை ஒரு தேசமாக (Nation) உருவாக்கிக் கொள்ளும் இயக்கப் போக்கின் போது, தனது பாரம்பரிய கலை கலாசாரங்களுக்கு அதிமுக்கியத்துவமளித்து அவற்றை வளர்த்தெடுப்பதும், பாதுகாப்பதும் தேச உருவாக்கத்தில் ஒரு பொதுவான அம்சமாக உள்ளது. எனினும், மலையகத் தமிழ் சமூகத்தைப் பொறுத்த வரையில் அது தன்னைத் தனியான ஒரு தேசமாக அடையாளங் கொள்ளும் அரசியற் செயற்பாடு ஒருபுறம் நட்ந்தேறுகையிலேயே மறுபுறம் அதன் மரபான மூலங்கள் சிதைந்து கொண்டு செல்கின்றன. அத்தோடு தனக்குள்ளிருந்து தனக்கேயுரித்தான புதிய கலை வடிவங்களை பிரசவிக்கும் வாய்ப்பும் இச் சமூகத்திற்கில்லாதுள்ளது. இதை இலங்கையின் அரசியலுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதுடனேயே விளங்கிக் கொள்ள முடியும்.

தேயிலைத் தோட்டங்களில் வேலைக் கமர்த்தப்பட்ட மக்கள் வெள்ளை முதலாளிகளின் பொருளாதார அடக்குமுறைகளின் சுரண்டல்களுக்கெதிராக போராடிக் கொண்டு தமது வாழ்க்கையை நடத்தி வந்தனர். தாம் வாழ்ந்த தோட்டப் பகுதிகளில் தமக்குக் கிடைக்கப் பெற்றிருக்கும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திர சூழலில் தமது தென்னிந்திய மூதாதையரிடமிருந்து சுவீகரித்துக் கொண்டு வந்திருந்த கிராமியக் க்லைகளில் தமது ஓய்வு நேரங்களில் மனதைச் செலுத்தி வந்தனர். தமது வாழ்நிலை தொடர்பாக தமக்கேயுரித்தான மொழி நடையிலும் இலக்கணத்திலு[ம் ப]ாடல்களைப் புனைந்து பாடினர்.

காலனித்துவவாதிகளின் மோசமான பொருளாதார ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகியிருந்தாலும் கூட அன்றைய மலையகத் தமிழ் மக்கள் தாம் வாழ்ந்த தோட்டப் பகுதிகளில் ஒரு குறிப்பிட்டளவாவது சுதந்திரத்தை அனுபவித்தனர். குறிப்பாக அவர்களால் சுதந்திரமாக தமது மொழியைப் பாவிக்க முடிந்தது. தமது மொழியைப் பாவிப்பது தொடர்பாக அன்று அவர்கள் எந்தவிதமான தயக்கத்துக்கோ, தாழ்வுச் சிக்கலுக்கோ, அச்சத்துக்கோ உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. இது குறிப்பிட்டளவாவது அவர்களது சுதந்திரமான சிந்தனைக்கும், சுதந்திரமான வாழ்வியலுக்கும் அடிப்படையாயமைந்தது. இதுவே அவர்கள் தமக்கேயுரித்தான கலை நடவடிக்கைகளில் ஈடுபடவும், தமது அன்றைய வாழ்நிலையின் தன்மைக்கேற்ப தமது பாரம்பரியக் கலைகளை வளர்த்தெடுக்கவும் பாதுகாத்திடவும் அவர்களை இயலுமானவர்களாக்கியது.

கூடவே காலனி அரசாங்கம் தோட்டப் பகுதிகளில் ஆரம்பப் பாடசாலைகளை நிர்மாணித்ததன் மூலம் தமிழ் மொழி மூலமான கல்வியைப் பெறும் வாய்ப்பு இளம் மலையக சந்ததியினருக்குக் கிடைத்தது. அத்தோடு நகர்ப்புறங்களுக்குச் சென்று உயர் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு அப்பொழுது பொருளாதாரம் மாத்திரமே பிரதான தடையாக இருந்தது. எனினும், குறிப்பிட்ட வீதத்தினராவது நகரப் பாடசாலைகளில் ஆங்கிலம் மூலம் உயர்கல்வியைப் பெற்றுக் கொண்டதோடு இலங்கைச் சமூகத்தின் பொது நீரோட்டத்தில் காலூன்றவும் தொடங்கினர். இலவசக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், கணிசமானளவு மலையகத் தமிழ்ப் பிள்ளைகள் தமது கல்வியை 10ம் வகுப்புவரை தமிழ் மொழி மூலமே தொடர்ந்திடவும் முடிந்தது. இவையாவும் மலையகத் தமிழ் சமூகத்தின் பண்புத்தளத்தை உயர்த்தியது.

மலையகத்தில் ஏற்பட்டு வந்த கல்வி விழிப்புணர்வுடன் அன்றைய கால கட்டத்தில் இலங்கையில் எழுச்சி பெற்று வந்த இடதுசாரி அரசியல் இயக்கத்தின் பாதிப்பும், தொழிற்சங்க நடவடிக்கைகளினதும் காரணமாக மலையகத்தில் பரவலான அரசியல், சமூக விழிப்புணர்வும் ஏற்படலாயிற்று.

இக்கால கட்டத்தில் மலையகத்தில் நவீன கலை, இலக்கியம் உருவாகலாயிற்று. நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், இசை போன்றன வளர்ச்சி பெற்றன. மரபான கிராமியத் தன்மையான கலைகளை உடைத்துக் கொண்டு மலையகக் கலை, இலக்கியம், புதிய பாய்ச்சலுக்கு - பரிணாமத்திற்கு உள்ளாகியது. இந்நவீனத்துவமான கலை, இலக்கியங்களில் சமூக, அரசியல் விழிப்புணர்வூட்டல் மேலோங்கியிருந்ததைக் காணமுடியும். கூடவே சமூக, அரசியல் விழிப்புணர்வு மிக்க இளம் கலைஞர்களும் இலக்கியவாதிகளும் உருப்பெற்று வந்தனர்.

ஒரு கட்டத்தில் இலங்கையின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் சக்திகளாகவும், மலையகத் தமிழ் மக்கள் மாறிவிட்டிருந்தனர். (1948ம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகையில் இலங்கைத் தமிழர் 12% என்றால் மலையகத் தமிழர் 13%ஆக இருந்தனர்) மலையகத் தமிழ்ச் சமூகத்தின் அடையாளத்தைப் பேணுபவர்களும், முன்னணியில் திகழ்பவர்களும், அச்சமூகத்தில் மிகப் பெருபான்மையாயிருப்பவர்களுமான பாட்டாளி மககளால் மலையக அரசியல் நிர்ணயிக்கப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் தமது வர்க்க நலனைப் பிரதிநிதித்துவப்படுத்திய இடதுசாரிகளை இவர்கள் ஆதரித்தனர். மலையகத் தமிழ்ப் பாட்டாளிகளின் வாக்குகளினால் ஒரே தடவையில் 7 இடதுசாரிகள் பாராளுமன்றம் செல்ல முடிந்தது.

இதனால் சகிப்புணர்விழந்த சிங்களப் பேரினவாத அரசியல் தலைமை மலையகத் தமிழரின் இதயத்தையே அறுத்தெரியும் காரியத்தைச் செய்யத் துணிந்தது. அதுதான் 1948ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பிரஜாவுரிமைச்சட்டம். இதன் விளைவாக 5 லட்சம் மக்கள் இந்தியா செல்ல நேர்ந்தது. போராட்டங்களினூடே வளர்ச்சி பெற்று வந்த மலையகத் தமிழ் மக்களின் அரசியல், சமூக வாழ்வு சிதைக்கப்பட்டது. அவர்களது அரசியல், சமூக ஆளுமை கருவிலேயே நசுக்கப்பட்டது. மக்கள் தொகை சுருங்கியது. இதன் மறுபுறம் மிக மோசமாகத் தலை தூக்கிவந்த சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறைக் கரங்கள் மலையகத் தமிழ்ச் சமூகத்தை மேலும் விளிம்பை நோக்கித் தள்ளத் தொடங்கியது.

- 1956இல் அமுலுக்கு வந்த தனிச்சிங்களச் சட்டம் தமிழ் மொழி உரிமையை மறுத்தது.
- 1958இல் தமிழர்களுக்கெதிராக நடாத்தப்பட்ட இனவன்முறை மலையகத் தமிழரின் இறுதி நம்பிக்கையையும் இழக்கச் செய்தது. இதனால் மக்கள் தாமாக விரும்பியே இந்தியா செல்ல முற்பட்டனர்.
- 1971இல் தோட்டங்கள் அரசமயமாக்கப்பட்டதுடன் பல தோட்டங்களில் பயிர்ச்செய்கை கைவிடப்பட்டு மக்கள் வேலையிழந்து தெருவுக்கு வந்தனர். பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.
- 1971 இல் ஆட்சிக்கு வந்த கூட்டரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கையினால் நாடெங்கும் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக சில தோட்டங்களைச் சார்ந்த மக்கள் வன்னிக்கும், கிழக்கு மாகாணத்திற்கும் இடம் பெயர்ந்தனர்
- 1971க்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அனைத்துமே பௌத்த சிங்களப் பேரினவாதத்தை அரச கொள்கையாக கொ[ண்]டிருந்த நிலையில் மலையகத் [த]மிழருக்கெதிரான அடக்கு முறை[க]ளுக்கு வரைமுறை கிடையாது போனது.
- திட்டமிட்ட தோட்ட லயன் எரிப்புகளும், அடுத்தடுத்து வந்த இனக் கலவரங்களும் மலையகத் தமிழ் மக்களை வடக்கு - கிழக்கு மாகாணங்களையும், இந்தியாவையும் நோக்கி குடிபெயரச் செய்தது.
- தமிழ் மொழிக்கல்வி பர்ரபட்சத்துக்குள்ளாகியதால் தோட்டப் பாடசாலைகளில் மாத்திரமன்று தென்னிலங்கையில் பிரபலமான பாடசாலைகளைத் தவிர்ந்த ஏனைய தமிழ்ப் பாடசாலைகள் ஒழுங்காக

இயங்கவி…
களிலும், ந…
மலையகத்…
மொழிக் க…
குத் தள்ளப்…

- மலையகத்… லைகள் தி… மூடப்பட்ட…
- தோட்டங்… பிள்ளைப்… களில் ப… ஆசிரியை… டனர். இ… பேசக்கற்… வே… இழப்பற்…
- மோசமாக… மைகள்.
- எல்லாவற்… முந்து வரு… தல்
- அச்சம்… காரணம… மலையக… சிங்களவ… சிங்களவ… வரும் நி…

இவ்வாறு… சென்றதை… கல்விவாய்… யாவும் பரிவ… வந்த மலை… இலக்கியத்… ஏற்படுத்தி… மந்தமா…

இன்று தலை… வாத அரசிய… குள் கண்டு… தமிழர் தமது… களையும்,… செல்லும் அ… ளனர்.

மனிதர்கள்… யாதவாறு பி… மொழி என்… னையை, ஒ… மைக்கிறது… மனிதர்கள்… மொழி சார்… கின்றனர். த… மானுட சி… படுத்த… முறை… மைக்கிறது… பெறும் மா… உணர்வுகள்… வெளிப்பா… மானுடசார…

தனது கல… காணும் எந்… மானுடசார…

பதாகும்.… னால் சமூக… மொழி ரீ… கொண்டிரு… நாயக, ம… பட்டிருக்… சமூகம்;… இழந்து… கொண்டு…

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



...லை. இது கிராமங்
...ங்களிலும் வாழ்ந்த
...தமிழரை சிங்கள
...யை நாடும் நிலைக்

...ல் தமிழ்ப் பாடசா
...மிட்டு மூடப்பட்டன/
...ருகின்றன.

...ில் நடாத்தப்படும்
...ராமரிப்பு நிலையங்
...ற்றப்பட்ட சிங்கள
...ள அமர்த்தப்பட்
...மிழ்ப் பிள்ளைகள்
...கொள்ளும் பருவத்தி
...து ...ழியறிவை
... காரணமாகியது.

...பொருளாதார நிலை

...கும் மேலாக மேலெ
...பேரினவாத அச்சுறுத்

...ற்றும் புறக்கணிப்பு
...கிராமங்களில் வாழும்
... தமிழர்கள் தம்மை
...ாக மாற்றிக் கொண்டு
...ளுடன் ஒன்று கலந்து
...மை.

இத்தகைய நிலையில் மலையகத் தமிழர்களது கலைவடிவங்கள் அருகி வருகின்றன. கலை, இலக்கியம் பரிணாமத்திற்குள்ளாகவில்லை. நவீனத்துவமாகவில்லை எனக்குறைப் பட்டுக் கொள்பவர்கள் மலையகத் தமிழரின் உள்ளார்ந்த (Potrential) கேள்விக்குள்ளாக்கும், சந்தேகிக்கும் தவறைத் தான் செய்து வருகிறார்களேயன்றி, இத்தகைய நிலைமைக்கு மலையகத் தமிழரைத் தள்ளிவிட்டிருக்கும். சமூக அரசியற் காரணிகள் தொடர்பாக கண்களை மூடிக் கொண்டே இருக்கிறார்கள்.

பேரினவாதத்தின் அச்சுறுத்தலுக்கும், இழிவுபடுத்தலுக்குமுள்ளாகும் நிலையில் கல்வி பெறும் வாய்ப்புடைய இன்றைய இளம் மலையக சமூகம் தனது சமூகத்திடமிருந்து அந்நியமாகும் போக்கும் நிகழ்ந்துகொண்டிருப்பதையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியுள்ளது. ஆரம்பக் காலங்களில் கல்வி பெற்று மேல்தளத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த மலையக சந்ததியினர் தமது சமூகத்துடனான வேர்களை பிரக்ஞைபூர்வமாக துண்டித்துக் கொள்ளவில்லை. காரணம் அன்றைய மலையகத் தமிழ்ச் சமூகம் வளர்ச்சிப் போக்கிலிருந்த



# ...ரினவாதமும், ...ரின் எதிர்காலமும்

**-கோவிந்தா**

...ககள, ...தாகை
...பெயர்ந்து சிதறிச்
...ழியுரிமை மறுப்பு,
...மறுப்பு, அச்சம்...
...வளர்ச்சிக்குள்ளாகி
...தின் நவீன கலை,
... பாரிய பாதிப்பை
...து. அதன் வளர்ச்சி

...த்து நிற்கும் பேரின
...நிர்வாக முறைமைக்
...ருக்கும் மலையகத்
...ந்திரமான சிந்தனை
...றலையும் இழந்து
...த்திற்குள்ளாகியுள்

...ழியுடன் பிரிக்க முடி
...ந்து போயுள்ளனர்.
...மனிதர்களது சிந்த
...த செய்யும்/ வடிவ
...மாக இருப்பதால்
...னவரும் தம்மை
...னிதராகவே உணரு
...ற்ற வளமான மொழி
...னையை, செழுமைப்
...ழிப்பான சிந்தனை
... ஆன்ம... வடிவ
...ல என்பது எழுச்சி
... ஆன்மாவின் நுண்
...தூண்டப்படுவதன்
...ம். கலை என்பது
... (Human Essence)

...ில் தேக்கத்தைக்
...ரு சமூகமும் தனது
...இழந்து கொண்டிருப்
...ளப் பேரினவாதத்தி
...ருளாதார, அரசியல்
... - அடக்கப்பட்டுக்
... - அடிப்படை ஜன
...ரிமைகள் மறுக்கப்
...மலையகத் தமிழ்ச்
... மானுட சாரத்தை
... அபாயத்தை எதிர்
...து

துடன், தமது சமூகத்துடனான பிணைப்புகளால் தனிமனிதர்கள் சமூக ரீதியான பலத்தையும், சமூக அடையாளத்ந்தையும் பெற்றனர். ஆனால், பேரினவாதத்தால் இழிவு நிலைக்குத்தள்ளப்பட்டு வரும் இன்றைய கட்டத்தில்; இளம் மலையகத் தமிழ்ச் சமூகத்தினர் தமது சமூகத்தின் இழிநிலையைக் கண்டு கொதித்தெழாமல் தாழ்வுச்சிக்கலுக்குள்ளாகி சமூகத்திலிருந்தே அந்நியப்பட்டுச் செல்கின்றனர். யதார்த்தத்தை மறந்த கற்பனை வாழ்வொன்றை நோக்கி இளம் மலையகச் சமூகம் சென்று கொண்டிருப்பது துயரமானதே.

### *பேரினவாதத்தின் இன்றைய வளர்ச்சி நிலையும், மலையகத் தமிழரின் எதிர்காலமும்*

இலங்கையில் எழுச்சி பெற்று வந்த பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் தாக்குதலுக்கு முதலில் இலக்குக்கு உள்ளாகிய மக்கள் சமூகம் மலையகத் தமிழ்ச் சமூகமே.

இன்று பேரினவாதமானது அரச இயந்திரம் முதற் கொண்டு சிவில் சமூகத்தின் மிகச்சிறிய அலகான குடும்பம் வரை நன்றாக ஊருடுவி வியாபித்து நிற்கிறது. ஏனைய இனங்களையும், மதப்பிரிவுகளையும் அடக்கியொடுக்குவதன் மூலமாக வளர்ச்சி பெற்று வந்த பௌத்த - சிங்கள பேரினவாதமானது தனது வளர்ச்சியுடன் கூடவே பாசிசக் கூறுகளையும் திரட்டிக் கொண்டு தான் வந்தது. பேரினவாதப் போக்குகளும் (Chauvinism) பாசிசமும் நாணயத்தின் இருபக்கங்கள் போல் பிரிக்க முடியாதவாறு இணைந்துள்ளன. தன்னை மாத்திரமே அங்கீகரித்துக் கொள்ளும், அதேநேரம் ஏனைய தேசங்களின் இருப்பையே நிராகிக்கும் பேரினவாதமானது - இது பாசிசத்தின் ஒரு அம்சமாகும்.

- இரு விழிகளில் தனது ஆக்கிரமிப்பை மேற்கொள்கிறது.
- ஒன்று தனக்கு சவாலாக அமைந்துவிடும் தேசங்களை அழித்தொழிக்கிறது.
- மற்றது, தனக்கு சவால் விடமுடியாத அரசியலில் பலவீனமாகயிருக்கும் தேசங்களை திட்டமிட்ட முறையில் விழுங்கிவிடுகிறது. (Absolve பண்ணிக் கொள்கிறது)

இந்த இரண்டு போக்குகளையும் இலங்கையின் சிங்களப் பேரினவாதத்திடம் காணமுடிகிறது. அது ஈழத் தமிழ்த் தேசத்தை அழித்தொழிக்கிறது. மலையகத் தமிழ் தேசத்தின் அரசியல் உள்ளாற்றலை சிதைத்து சிதைத்து அதன் தனித்துவத்தை இல்லாது செய்து சிங்கள இனத்துடன் ஒன்று கலக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

மலையக கலாசார மேம்பாட்டுக் குழுவினால் நடாத்தப்பட்ட ம.க.ப. செயலமர்வில் வெளியிடப்பட்ட விடயங்களை இதற்கான உதாரணங்களிலொன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

சிங்கள மொழியில் விரிவுரை நடாத்திய பிரபல விரிவுரையாளர்களிடமிருந்து வெளிப்பட்ட கருத்துகள் அதிச்சியூட்டும் விதத்தில் அமைந்திருந்தன.

- ''சிறிய கலாசாரங்கள் தமது கலாசாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்றால் அவைபெரிய கலாசாரத்துடன் ஒன்று கலப்பதன் மூலமே சாத்தியப்படும்''
- ''இந்நாட்டில் இன்று காணப்படும் பல்லின கலாசாரத் தன்மைகள் அழிந்து ஒரே தேசமாக உருவாகிட வேண்டும்.''

இவை சில தனிநபர்களின் வெறும் கூற்றுக்கள் அல்ல. மாறாக, பேரினவாதத்தின் உளவியல் மலையகத் தமிழர் தொடர்பாக எவ்வாறு செயற்படுகிறது என்பதன் வெளிப்பாடேயாகும்.

இதைவிட,

- மலையகத் தமிழர் சிங்கள மொழிக் கல்வி பெறுவது பல வழிகளிலும் ஊக்குவிக்கப்படுகிறது.
- மலையகத் தமிழரும், ஈழத்தமிழரும் இரு வேறு தனித்துவமான தேசங்களாகும். எனினும், பேரினவாதிகளோ, இந்தத் தனித்துவமான தேசியத்தன்மையை அங்கீகரிக்காமலேயே மலையகத் தமிழரை, ஈழத்தமிழரிலிருந்து வேறுபட்டவர்களாக கூறுமிடத்து, ''வடக்கிலுள்ள தமிழர்கள் இனப் பிரச்சினையைப் பிரதானப்படுத்திக் கொண்டுள்ளனர். ஆனால், மலையகத் தமிழர் அப்படியில்லை. அவர்களுக்கு இனப் பிரச்சினை கிடையாது. பொருளாதாரப் பிரச்சினை மாத்திரமேயுள்ளது'' எனும் கருத்தை புனைந்து புனைந்து கூறுவதன் மூலம் மலையகத் தமிழர் தாம் குறிப்பிட்ட மொழிபேசும் இனம் எனும் அடிப்படையில் அடக்கப்படுவதை மறுத்துரைத்து வருகின்றனர். இதன் மூலம் பௌத்த - சிங்கள பேரினவாதத்தால்; அடக்கப்படும் தேசங்கள் தமக்கிடையே பரஸ்பரம் புரிந்துணர்வுக்கு வருவதை திட்டமிட்டு தடைசெய்கின்றனர். பொய்மையான இன நல்லுறவைக் காட்டி மலையகத் தமிழர் தமது சுய அடையாளத்தை தாமே நிராகரித்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளிவிடுகின்றனர். அதேநேரம் மலையகத் தமிழ மக்கள் (பெருந்தோட்டத் தொழிலாளர்கள்) தமது பொருளாதாரப் பிரச்சினையைப் பற்றிக் கூறும் போது'' இவர்களுக்கென்ன பொருளாதாரப் பிரச்சினை இருக்கிறது? கிராமிய சிங்கள மக்களினை விட இவர்கள் மேலான பொருளாதார வாழ்வை அனுபவிக்கின்றனர்'' எனக் கூறுபவர்களும் இந்தப் பேரினவாதிகள் தான்.

பேரினவாதம் அரசியற் பலமற்ற தேசங்களையும், சிறிய மக்கள் சமூகங்களையும் விழுங்கி விடுவதற்கு மிகச்சிறந்த உதாரணமாக மகியங்கனைப் பகுதியில் வாழும் பழங்குடி மக்களான வேடுவ சமூகத்தினர் உள்ளனர்.

வளர்ச்சி பெற்ற பௌத்த - சிங்கள பேரினவாதமானது இலங்கைத் தீவில் சிங்களவர்கள் தொன்மையானவர்கள் என்பதை வலிந்து புனைந்து நிருபிப்பதன் மூலம் ஏனைய தேசங்களினதும் மக்கள் பிரிவினர்களதும் தொன்மைத் தன்மையை நிராகரிக்க முயல்கிறது. அதன் மூலம் இலங்கைத் தீவிற்கு தானே ஏக உரிமையாளர்கள் என நிருபிக்க முயல்கிறது. அத்துடன் தன்னை எண்ணிக்கை ரீதியாக இன்னும் பலமான தேசமாக நிர்மாணித்துக் கொள்வதற்காக சிறிய மக்கள் சமூகங்களை தனக்குள் உறிஞ்சிக் கொள்ளும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறது.

இந்த முயற்சிகளிலொன்று தான் மகியங்கனைப் பகுதியில் வாழும் பழங்குடி மக்களான (Indigineous People) வேடுவ சமூகத்தினரை பௌத்த - சிங்கள மயப்படுத்தும் நடவடிக்கைகள். இதற்காக பேரினவாத அரச இயந்திரத்தின் அங்கங்கள் அனைத்தும் தமது பாத்திரத்தை மிகச்சிறப்பாக ஆற்றி வருகின்றன. குறிப்பாக பேரினவாதமயப்பட்டிருக்கும் தொடர்பூடகங்கள் மிகவும் குறிப்பிடத்தக்க விதமாக இந்த உள்வாங்கலைச் செய்து வருகின்றன.

- திட்டமிட்ட முறையில் வேடுவ சமூகத்தினர் பௌத்த - சிங்கள சமூகத்துடன் இணைத்துக் காட்டப்பட்டு வருகின்றனர்.
- வேடுவ சமூகத்தினரை தமக்குள் உள்வாங்கிக்கொள்ளும் உளவியல் தயார் நிலையை சிங்கள மக்களிடையே ஏற்படுத்துவதற்காக வேடுவ மக்கள் தொடர்பான சிங்கள தொலைக்காட்சி நாடகங்கள், விவரணப் படங்கள் தயாரிக்கப்பட்டு ஒளி, ஒலி பரப்பு செய்யப்பட்டு வருகின்றன.
- வேடுவ மொழி நடையைப் பாவித்து எண்ணுக்கணக்கான சிங்களப் பாடல்கள் இசையமைக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.
- வேடுவத் தலைவர்களை அடிக்கடி தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமாக பேட்டி காண்பதும் குறிப்பாக யுத்தம் தொடர்பாக அவர்களிடம் கேள்வி கேட்பதும் நடைபெறுகிறது. சிங்கள மொழி ஒலிபரப்பொன்றில் யுத்தம் தொடர்பாக வேடுவ பிரதிநிதியொருவர் கூறிய கருத்து ''நான் மனித அழிவை விரும்பவில்லை. மனிதர்கள் ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ளும் இந்து யுத்தம் எனக்கு ஆச்சரியத்தையும், கவலையையும் தருகிறது'' என்பதாயிருக்க இவர்களோ அதை அவர் பிரிவினை அவசியமில்லை என்பதாகக் கூறியது போன்ற தொனியில் சிங்களத்தில் மொழி பெயர்த்தனர்.
- வேடுவ மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன.
- வேடுவ மக்களுக்கு தேசிய அடையாள அட்டைகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- அவர்களது வாழ்விடப் பகுதியில் பௌத்த மத சடங்குகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவர்களைக் கொண்டு பௌத்த மதப் பெரஹராக்களும் நடாத்தப் படுகின்றன.

இப்படியான நடவடிக்கைகளினூடாக பழங்குடி மக்களான வேடுவ மக்களை பௌத்த - சிங்களவர்களாக அடையாளப்படுத்தும் முயற்சிகள் பேரினவாத அரச இயந்திரத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இது பழங்குடி மக்கள் தொடர்பான ஐ.நா. சாசனத்திற்கு முற்றிலும் முரணான செயல் என்பதும் குறிப்பிட வேண்டியதாகும்.

வேடுவ மக்களைப் போல் குறுகிய காலத்திற்குள் மலையகத் தமிழரை சிங்களப் பேரினவாதத்தால் விழுங்கி இன ஒன்று கலப்பு செய்திட முடியாவிடினும், நீண்ட காலத்தில் இந்த ஆக்கிரமிப்பை நடாத்தி முடிப்பதற்கான காரியத்தில் அது ஏற்கெனவே இறங்கிவிட்டுள்ளது என்பதை மலையகத் தமிழ் சமூகம் உணர்ந்து கொண்டு அதற்கெதிராக தன்னை பலமிக்க அரசியலையுடைய மக்கள் சமூகமாக கட்டியெழுப்பிவிட வேண்டும்.

○

## அவர்...

3 →

எடுக்கப்பட்டு, பத்மநாதனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைத் தாக்கல் செய்ய பொலிசார் தவறியுள்ளதைச் சுட்டிக்காட்டி, அதற்குப் போதிய கால அவகாசம் வழங்கி வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது இப்படி இருக்க, அண்மையில், குருணாகலை பொலிசார், அப்பகுதியில் உள்ள பத்மநாதனின் வருங்கால மனைவியின் வீட்டிற்குச் சென்று அவருடைய குடும்பத்தினர் அனைவரையும் விசாரணைக்கென பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார்கள். பத்மநாதனின் வருங்கால மனைவியான யுவதியைப் பொலிசார் தடுத்து வைத்து விசாரணை செய்து வருகின்றார்கள்.

இதே வேளையில், அவருடைய வீட்டிற்குச் சென்ற பொலிசார், அங்கு வைக்கப்பட்டிருந்த பத்மநாதனின் சகோதரனுடைய மோட்டார் சைக்கிள், பத்மநாதனுடைய பிறப்புச் சான்றிதழ், அவருடைய வங்கிப் புத்தகம், பாஸ்போர்ட், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் அவருக்கு வழங்கப்பட்ட உத்தியோக நியமனக் கடிதம் ஆகியவற்றையும் எடுத்துச் சென்றுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளார்கள்.

போர்க்காலச் சூழலில், யுத்த பிரதேசத்திற்குள்ளே உயிராபத்துகளுக்கு மத்தியில் மனிதாபிமானச் சேவையில் சுமார் 5 வருடங்களாகக் கடமையாற்றி வந்துள்ளார்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிக்கும் இடையே இறந்த பொது மக்களின் பூதவுடல்களைக் கொண்டு செல்வதிலும், இராணுவத்தின் வேண்டுகோளுக்கமைய இராணுவத்தால் கொல்லப்பட்ட புலிகளின் பூதவுடல்களை, புலிகளின் பகுதிக்குக் கொண்டு செல்வதிலும், இராணுவத்தின் அனுமதியோடு, புலிகளால் மோதல்களின் போது கொல்லப்பட்ட இராணுவத்தினருடைய சடலங்களைப் புலிகளிடம் இருந்து பெற்று இராணுவத்தினரிடம் கொண்டுவந்து சேர்ப்பதிலும் அவர் பெரும் பங்காற்றியுள்ளார். இவருடைய பணிகளில் எந்தவிதமான இரகசியமும் இருந்ததில்லை. அவருடைய செயற்பாடுகள் குறித்து பாதுகாப்புப் படையினர் நன்கு அறிந்தே இருந்தார்கள்.

இருப்பினும், நியாயமான ஒரு நடவடிக்கையில் சட்டரீதியான முறையில் அவர் மடுக்கோவில் பகுதிக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாட்டுக்கு அமைய மேற்கொண்ட பிரயாணத்தைச் சந்தேகக்கண் கொண்டு பார்த்துள்ள பொலிசார் பத்மநாதனைச் சரியான காரணம் காட்டாமல் தடுத்து வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அவருடைய வருங்கால மனைவியாகிய யுவதியையும் குருணாகலை பொலிசார் கைது செய்து காரணம் கூறாமல் தடுத்து வைத்திருப்பதற்கு என்ன நியாயம் இருக்கிறதோ தெரியவில்லை. இவர்கள் தமிழர்கள் என்பதைத் தவிர வேறு வலுவான காரணம் எதனையும் பொலிசாரினால் கூற முடியுமா என்பது சந்தேகமே!

## மட்டு...

3 →


அழைத்துச் செல்லும் போது ''இன்று சனிக்கிழமை நான் மட்டக்களப்பு சி.எஸ்.யு. முகாமுக்கு கையொப்பம் இடப் போக வேண்டும்'' என்று ஸ்ரீகாந்தன் கூறிய போது இதுதான் உனக்குக் கடைசி நாள் என்று கூறிக் கொண்டு கூட்டிச் சென்றிருக்கிறார்கள். வளவின் முன் 50யார் வரை கூட்டிச் சென்று அவர் சுடப்பட்டிருக்கிறார். 5.35 மணியளவில் இச் சம்பவம் நடை பெற்றிருக்கிறது. ஸ்ரீகாந்தனுக்கு 'மகசின்கிற்'ஐ அணிவித்து ஐந்து கைக்குண்டு வீசினார்கள். சிறிது நேரத்தில் ஸ்ரீகாந்தனின் உடலை இராணுவத்தினர் உழவு இயந்திரத்தின் ஏற்றிச் சென்றனர். போகும்போது ஸ்ரீகாந்தனின் வீட்டு கிணற்றிலே கையும் கழுவி விட்டுச் மகனைச் சுட்டது நாங்கள் தான் என்றும் கூறிச்சென்றார்களாம். காந்தன் 16.2.98 அன்று நடந்த சுற்றிவளைப்பின்போது இவர்களால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சி.எஸ்.யு. முகாமில் விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்தார். விடுதலை யாவதற்கு ஒருவாரத்திற்கு முன்பே சிறைச்சாலைக்குக் கையளிக்கப் பட்டார். 4.5.98 இல் இவர் விடுதலை யானார். மாதத்தில் முதல், கடைசி சனிகளில் கையொப்பமிட சி.எஸ்.யு முகாமுக்கு வரவேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்தார். இதுவரைக்கும் நான்கு தடவை இவர் இம்முகாமில் கையொப்பமிட்டிருக்கிறார்.

இதேபோல வாழைச்சேனை மாரியம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த நல்லரத்தினம் லோகநாதன் (21) இதே துறைமுக இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். சம்பவ தினம் காலை 7.15 மணியளவில் வேலைக்குச் செல்வதற்காகப் புறப்பட்டுச் சென்று 10நிமிடங்களின் பின்பே வெடிச்சத்தம் கேட்டிருக்கிறது. இவர் சைக்கிளில் வரும் போது இவரை நோக்கி இராணுவத்தினர் சுட்டதாக கண்டவர்கள் தெரிவிக்கின்றனர். நாதனின் மார்பில் இரண்டு சூட்டுக் காயங்கள் இருந்தன. இராணுவ முகாமுக்கு சடலம் எடுத்துச் செல்லப்பட்ட பின் கைக்குண்டுடன் புலி உறுப்பினர் சுட்டுக்கொல்லப்பட்டதாக கூறி ஐ.ஆர்.சி.யூடாக சடலத்தை புலிகளிடம் ஒப்படைக்க அனுப்பினார்கள். புலிகள் சடலத்தை ஏற்கவில்லை. சடலம் அன்று பி.ப.மட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டது. மனைவி சந்திராணி 20, (திருமணம் முடித்து ஆறு மாதங்களே ஆகின்றது) அடையாளம் காட்டிய பின் பதில் மாவட்ட நீதிபதி கே.தியாகராஜா சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து 11.7.98இல் விசாரணைக்காக படையினரை ஆஜராக்க உத்தரவிட்டிருந்தார். ஆனால், அன்றைய தினம் படையினர் ஆஜராகவில்லை.

ஒகஸ்ட் 21ம்திகதி பெந்தகோஸ்தே சபை சமயப் பாடசாலை முடிந்து கருவாங்கேணியிலிருந்து கிண்ணயடிக்கு வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருக்கும் வேளையில் மோ. கோகுலரஜனி (8), அனுரஜனி, (10) என்ற இரு மாணவிகளும் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர். கோகுலரஜனி ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமுற்றார். இச்சம்பவம் பெற்றோர் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. காயமடைந்த அனுரஜனி, தாங்கள் வரும்வழியில் படையினர் தங்களை மறித்து கதைத்துவிட்டு போகச் சொல்லி விட்டு சிறிது தூரம் சென்றபின் தங்களை நோக்கிச் சுட்டனர் என டொக்டரிடம் கூறியதை கேட்டுக் கொண்டிருந்த பெந்தகோஸ்தே சபையைச் சேர்ந்த த.ஸ்ரீஸ்கந்தராசா மரணவிசாரணையில் தெரிவித்திருக்கிறார். இச்சம்பவம் கொலை என தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு பல சம்பவங்கள் கொலை என தீர்ப்பளிக்கப்பட்டும், கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த முடியாத நிலையே உள்ளது. 'கள்ளனும் அவனே, விதானையும் அவனே' என்றால் யாரைச் சொல்லி என்னபயன்?

## தலித்தியக் குறிப்புகள்



## மூக்கன் வேலாயுதத்தின் மறைவு!

'...செத்தபின் சிவலோகம் செல்வர் என்பர் பித்த மனிதர். ஆனால் சிவலோகமோ நரகலோகமோ யார் பார்த்தார்கள். நாம் உயிருடன் இருக்கும் போதே ஒன்று செய்ய வேண்டும்.. இறந்தவர் ஒருவருக்கு செய்யும் சிறப்பை அவர் அறியமாட்டார்..... அவ்வாறான சிறப்புக்கள் ஊழியர்களை உற்சாகப்படுத்தும் என்பதில் ஐயமில்லை...."[1]

அருந்ததியர் சமூகத்தின் மேன்மைக்காக பல காலம் உழைத்து வந்த மூத்த தலைவர் வேலாயுதம் அவர்கள் தனது 77வது வயதில் கடந்த ஒகஸ்ட் 9 அன்று காலமானார். இவர் பற்றியும் இவர் அச்சமூகத்தின் மத்தியில் வகித்த பாத்திரம் குறித்து பலர் மத்தியிலும் வெவ்வேறு கோணங்களில் பன்முக விமர்சனங்கள் இருந்த போதிலும், இவரின் இத்தனை வருட பணிகளை உதாசீனப்படுத்தவோ குறைத்து மதிப்பிடவோ எவரும் முன்வரமாட்டார். அந்த வகையில் இவரை என்றென்றும் அச்சமூகம் நினைவு கூரும்.

வேலாயுதம் அவர்கள் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் *எட்டய புரத்திற்கருகிலுள்ள திட்டிக்குளம்* எனும் கிராமத்தில் பிறந்தார். சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்த இவர் இளம் வயதில் "சிலோன்" வந்து சேர்ந்தார்.

"....தனது இளம் வயதிலேயே சமூகத் தொண்டு வேலைகளில் ஈடுபடத் தொடங்கி விட்டார். 1939இல் தனது பொதுச் சேவையில் பிரவேசித்தார். இவரின் முதலாவது பொதுப்பணி *ஹரிஜன காந்தி சேவா சங்கம்* எனும் அமைப்பின் மூலம் ஆரம்பமானது...

....*உதயம். இனவெழுச்சி* ஆகிய பத்திரிகைகளின் முறையே ஆசிரியராகவும், துணையாசிரியராகவும் கடமையாற்றியருக்கிறார். அத்துடன் அருந்ததியர் சமூகம் குறித்த பல விடயங்களை இலங்கை மற்றும் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் எழுதி வந்துள்ளார்...[2]

இலங்கையில் அரசியற் கட்சிகள் உருவாகாத காலத்தில் தோன்றிவிட்ட *அகில இலங்கை அருந்ததியர் சங்கத்தினை* தொடக்கிய ஸ்தாபகர்களில் ஒருவர் இவர். அத்தோடு பல தடவைகள் அருந்ததியர் சங்கத்தின் தலைவராகவும், பொதுச் செயலாளர், பொருளாளர் போன்ற பொறுப்புகளில் இருந்து கடமையாற்றியிருப்பதுடன், தனது இறுதிக் காலங்களில் சங்கத்தின் ஆலோசகராகவும் இருந்தார்.

"...தலைவர் வேலாயுதம் அவர்கள், கடந்த காலங்களில் குவளை ஒழிப்புப் போராட்டம், கோயில் நுழைவுப் போராட்டம், மது ஒழிப்புப் போராட்டம், முனிசிபல் இலஞ்சம் ஒழிப்புச் சாட்சியம் இன்னோரன்ன துறைகளில் ஈடுபட்டவர்....

....இவர் கொச்சிக்கடை முனிசிப்பல் லயம், தெமட்டக்கொடை ஆகிய இடங்களில் வாங்கிய அடி, வசை மொழிகள் எழுத்தில், எழுத அடங்கா. சமூக முன்னேற்றத்திற்காக இதையெல்லாம் சகித்துக் கொண்டு, பணியாற்றியதையிட்டு ஒரு விழாவல்ல ஓராயிரம் விழாக்கள் எடுத்துச் சிறப்பிக்கலாம்!..."[3]

"...இவர் சலியாத உழைப்பாளர் சிறந்த சமூக சேவையாளர், அறிவு, ஆற்றல் அனுபவத் திறமை மிக்க இவர் 35 வருடங்களாக கடமை வீரராகவும், கண்ணியமிக்கவராகவும் இருந்து ஆற்றிய சேவை போற்றத்தக்கது...."[4]

இதை விட 1944ல் சோல்பரி விசாரணை ஆணைக்குழு இலங்கை வந்திருந்த போது அருந்ததியர் சங்கத்தின் சார்பில் சாட்சியம் அளித்தார்.[5]

பல்வேறு வெகுஜன இயக்கங்களில் தலைமைப் பதவிகளில் இருந்து செயலாற்றியிருந்த வேலாயுதம் அவர்கள் தமிழ் நாட்டிலுள்ள சாதிய எதிர்ப்பியக்கங்களுடன் நேச உறவுகளைக் கொண்டிருந்தார். தமிழ் நாட்டு விஜயங்களின் போதெல்லாம் அங்கு பல்வேறு அரசியற் தலைவர்களையும், சந்தித்து பல பேச்சுவார்த்தைகளை நடத்தியிருப்பது பத்திரிகை செய்திகளிலிருந்து தெரிய வருகிறது.



இதைவிட அத்தகைய விஜயங்களின் போது பல கூட்டங்களில் உரையாற்ற அழைக்கப்பட்டு இலங்கை அருந்ததியர்களின் நிலை குறித்து பல விடயங்களை கருத்து வெளியிட்டிருக்கிறார்.

1974இல் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடாகிக் கொண்டிருக்கும் போது தமிழ் காங்கரஸின் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலத்துடன் வேலாயுதம் அவர்கள் அடங்கிய மூன்று பேர் கொண்ட குழுவொன்று போய் பேசி அதில் கலந்துகொள்ள ஆதரவளிக்குமாறு கோரிய போது அதற்கு நாம் ஆதரவளிப்பதாக சங்கத்தின் பொதுச் செயலாரான வேலாயுதத்திடம் உறுதி அளித்தார் ஜி.ஜி.பொன்னம்பலம். ஆனால் இது பின்னர் பெரும் சர்ச்சைகளில் முடிந்தது.[6]

1976 மார்ச் 21ஆம் திகதியன்று இவரது சேவையைப் பாராட்டி அருந்ததியர் சங்கத்தினரால் கொழும்பு விவேகானந்தா சபை மண்டபத்தில் நடத்தப்பட்ட இந்த விழாவுக்கு பல்வேறு அரசியற் தலைவர்களினதும் வாழ்த்துக்கள் அனுப்பப்பட்டிருந்தன.[7] வேலாயுதம் அவர்கள் அந்நிகழ்ச்சியில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இவரது குடும்ப நிகழ்ச்சிகளில் அன்றைய தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் கலந்து கொண்டுள்ளதை அவர் பெருமையாகக் கூறி வருவார்.

மதுவிலக்கை அமுல்படுத்தக்கோரி அருந்ததியர் சங்கத்தின் சார்பில் (பொதுச் செயலாளராக இருந்த போது) நீண்ட காலம் போராடி வந்த வேலாயுதம் அவர்கள் 1955ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதியன்று மதுவிலக்குக் கமிஷன் முன்னிலையில் சங்கத்தின் சார்பில் சாட்சியமளித்தார். அப்போது:

"...இலங்கையில் வாழும் அருந்ததியர்களில் 95 சதவீதத்தினர் மதுபானம் அருந்தும் பழக்கமுடையவர்கள். மதுவிலக்கு சட்டபூர்வமாக அமுல் நடத்தப்படாவிட்டால் அவர்களிடையே வேரூன்றிவிட்ட இந்தப்பழக்கத்தை அகற்ற முடியாது. மது அருந்துவதன் காரணமாகவே நாட்டில் அநேக குற்றங்கள் நடைபெறுகின்றன.....

2ரூபாய் முதல் 3 ருபாய் வரை இவர்கள் குடிக்காகப் பாவிக்கிறார்கள். பணமில்லாத போது இதற்காக வட்டிக்கு முதற்கொண்டு கடன் வாங்குகிறார்கள். மது அருந்துவதற்கு விரோதமாக எங்களுடைய அருந்ததியர் சங்கம் உழைத்து வருகிறது. ஆனால் இந்தப் பழக்கம் எங்கள் சமூகத்தினர் மத்தியில் வேரூன்றிவிட்டதால் இந்தப் பிரசாரங்களை அவர்கள் கவனிப்பதில்லை...."[8]

"சொந்த தமிழ் இனத்தவரையே சாதியின் பெயரால் தொல்லை கொடுப்பதை இனிமேலாயினும் நிறுத்தி தம் சகோதர மக்களோடு கைகோர்த்து நிற்குமாறு வேண்டுகிறேன்" என ஒரு பத்திரிகையில் மனம் வருந்தி கோரிக்கை விடுத்திருந்தார்.

ஒரு முறை அனுராதபுரத்தில் கோஹிவல பகுதியில் அருந்ததியர் சங்கக் கிளையொன்றை ஆரம்பித்து உரையாற்றுகையில் "..இவ் ஈழத் திருநாட்டில் எட்டுத் திக்கிலும் பரந்து விரிந்து கிடக்கும் சமுதாயம் ஒன்று உண்டென்றால் அது நமது அருந்ததிய சமூகமே என்பதை எவரும் மறுத்துவிட மாட்டார்கள். எங்கெங்கு நகர, கிராம, பட்டின சபைகள் உள்ளனவோ அங்கெல்லாம் எமது சமூகம் அதுவும் எவரும் செய்ய முன்வராத செய்ய முடியாத, துணியாத முதன்மையான அத்தியாவசியத் தொழிலை, அரிய பெரிய சேவையாகிய சுகாதார மலகூடத் தொழில்களைச் செய்து வருகிறது. பல வருடங்களுக்கு முன் மலேரியா நோய் ஆயிரக்கணக்கான மக்களைப் பலி கொண்டது. கொலரா நோயினால் இறந்தவர்களை அப்புறப்படுத்தக் கூட ஆட்கள் இன்றி தவித்த அரசாங்க அதிகாரிகளுக்கு ஒரே உதவியாக எமது சமூகத்தவரே இருந்தனர் என்பதை யாரும் மறுக்க முடியாது...." என தெரிவித்தார்.

இவரது சேவையின் காரணமாக 1979 ஜனவரி 31இல் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டார். பின்னர் இவர் வேலாயுதம் ஜே.பி. என்றே அழைக்கப்பட்டார். அதற்கு அருந்ததியர் சமூகத்தில் முதற்தடவையாக சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டவர் இவர் என்பது முக்கியமானது.

பெருத்த புகழ் நாட்டம் மிக்கவராகவும், பிரமுகர்த்தனம் காரணமாகவும் சரியான அரசியலைக் கொண்டிராததன் காரணமாகவும் அதிகளவு சீர்திருத்த வேலைகளிலும், தன்னியல்பு ஓட்டத்திலுமே கூடிய ஈடுபாடிருந்தன் காரணமாக இவராலோ இவர் சார்ந்த அருந்ததிய சங்கத்தினாலோ இம்மக்களின் தூர நோக்கைக்கொண்ட அரசியலுக்கான எதனையும் சாதிக்க முடியவில்லை. சகல அரசாங்கங்களும் பதவியில் அமர்கையில் வாழ்த்து அறிக்கை தெரிவிப்பதில் மிகவும் முனைப்பாக இருந்து வந்தவர் இவர். சில சந்தர்ப்பங்களில் பிரதான பேரினவாத-முதலாளித்துவக் கட்சிகளுக்கு ஆதரவாக சமூகத்தின் மத்தியில் பிரச்சாரங்களையும் மேற்கொண்டிருப்பது பல பத்திரிகை செய்திகளிலிருந்து தெரிய வருகிறது. இதைவிட இலங்கை தொழிலாளர் காங்கிரசில் நீண்ட காலமாக அமைப்பாளராகவும் இருந்து வந்துள்ளார் மூ.வேலாயுதம். அருந்ததியர் சமூகத்தின் வாக்குகளை ஒவ்வொரு தேர்தல்களின் போதும் இப்படியான சக்திகளுக்கு பெற்றுக்கொடுக்க அதிகளவில் காரணமாகவும் இருந்து வந்துள்ளார். ஆனால் இ.தொ.கா.வால் சொல்லக்கூடியளவில் எதனையும் இச்சமூகத்தின் நலனுக்காகப் பெற்றுத்தர இவரால் இறுதி வரை முடியவில்லை என்றே கூறவேண்டும். எவ்வாறிருந்த போதும் இப்படியான போக்குக்கு அச்சமூகத்தில் சரியான முற்போக்கான தலைமை தோன்றாததன் விளைவையே காரணமாகக் காணமுடியும். அந்த அடிப்படையில் இவரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் அனைத்துமே உதாசீனப்படுத்தக் கூடியவையல்ல. ஒரு கட்டம் வரை நகர்த்த-உயர்த்தப் பயன்பட்ட இவரின் சேவை நிச்சயமாக கௌரவிக்கத்தக்கது. நினைவு கொள்ளத்தக்கது.

— அருந்ததியன்

---

1. வேலாயுதம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி நடத்தப்பட்ட பாராட்டு விழாவின் போது அவரால் உரையாற்றப்பட்ட நன்றியுரையிலிருந்து. (இது அன்றைய தினம் துண்டுப்பிரசுரமாகவும் வெளியிடப்பட்டிருந்தது.)
2. கு.மு.இராசு — வீரகேசரி 76 மார்ச் பத்திரிகையில் வெளியான "பொன்னாடை போர்த்தும் விழா" எனும் கட்டுரையில்
3. மா.சே அருள் (முன்னாள் அருந்ததியர் சங்கத் தலைவர்களில் ஒருவரும், "சங்கம்" பத்திரிகையின் ஆசிரியருமாக இருந்தவர்) — வேலாயுதம் அவர்களுக்கு 1976 மார்ச் 21 அன்று விவேனாந்தா சபையில் நடத்தப்பட்ட பாராட்டு விழாவின் போது வெளியிடப்பட்ட சிறப்பு மலரில் கூறியிருந்தவை.
4. நெ.கா.சிவஞானம் (அருந்ததியர் சங்கத்தின் முன்னாள் தலைவர்) — அதே மலரில்.
5. மாதம்பிட்டி பொது மயானத்தில் வேலாயுதம் அவர்களின் இறுதிச் சடங்கின் போது ஜி.சண்முகவேல் ஆற்றிய இரங்கல் உரை.
6. தினகரன் 4—11—73
7. மேற்படி பாராட்டுவிழா சிறப்பு மலரில்.
8. தினகரன் 21—10—55
9. தினகரன் 1977.......

யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்




நாடகத்திதைத் தடை செய்யக் கோரி நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது

பிரதீப் டெல்பி:
நாடகப் பிரதியை எழுதியவர்

# "நதுராம் கோட்சே பேசுகிறேன்" நாடகத்தின் தடையின் பின்னால்..

"நதுராம் கோட்சே பேசுகிறேன்" என்ற தலைப்பிலான மராத்திய மொழி நாடகம் ஒன்று மும்பாயில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. கடந்த ஜூலை மாதம் 17ம்திகதியன்று மும்பாய் டாடர் நகரிலுள்ள சிவ்ராஜ் மந்திர் தியேட்டரில் இந்த நாடகம் மேடையேறத் தயாராகிக் கொண்டிருந்தது. பி.ப.3.30 மணிக்கு காட்சிக்குச் சற்று முன்பாக கிட்டத்தட்ட 500 பேர் கொண்ட கூட்டமொன்று 'காந்தி எதிர்ப்பு நாடகத்தை நிறுத்து', 'காந்தி கொலையை நியாயப்படுத்தாதே', 'கோட்சேயைப் புகழாதே' என்ற சுலோகங்களுடன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியது. காவலுக்கு நிறுத்தப்பட்ட பொலிசாரின் கட்டுப்பாட்டையும் மீறி தியேட்டருக்குள் நுழைவதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் முயலவே பொலிஸ் தடியடிப் பிரயோகத்தில் இறங்கியது. இந்திரா காங்கிரஸ், இளைஞர் காங்கிரஸ், சிவசேனையின் குஜராத்தியப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்தவர்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களாவர்.

இந்த ஆர்ப்பாட்டம் வெளியே நடந்து கொண்டிருக்கையில், மஹாராஸ்டிர மாநிலத்தின் கலாசார அமைச்சர் பிரமட் நவால்கர், சிவசேனை அமைப்பின் தலைவரது மருமகனான ராஜ் தக்ரே நாடகத் தயாரிப்பாளர் உதே ருராத் ஆகியோர் தியேட்டருக்குள் இருந்திருக்கிறார்கள். எப்படியோ அன்றைய தினம் அமைச்சர்களுக்காகவும் பத்திரிகையாளர்களுக்காகவுமென நடாத்தப்படவிருந்த மேடையேற்றம் கைவிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து, இந்நாடகம் தொடர்ந்து நடாத்தப்படுவதை தடைசெய்யுமாறு மத்திய அரசிடமிருந்து மஹாராஸ்டிர மாநில அரசுக்கு அறிவித்தல் வந்தது. மத்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சர் அத்வானி இந்த நாடகம் பற்றி லோக்சபாவில் பேசும்போது, 'எமது அரசாங்கம் நாட்டை விடுதலைக்கு வழிநடாத்திச் சென்ற மகாத்மா காந்தியின் பங்களிப்பையும் அவரது நினைவுகளையும் கொச்சைப்படுத்துவதை அங்கீகரிக்க முடியாது' என்று அறிவித்தார்.

மறுநாள் அதாவது ஜூலை 18ம்திகதி மஹாராஸ்டிர மாநில அரசாங்கம் நாடகத்தை உத்தியோகபூர்வமாகத் தடைசெய்தது. இந்தத் தடையுத்தரவு மத்திய அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரிலேயே செய்யப்பட்டது என்று தெரிவித்தார் மாநில முதலமைச்சர் மனோகர் ஜோசி.

பிரச்சினைக்குரிய இந்த நாடகம் குறித்து மாநில அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்த போதும் - சிவசேனை - பி.ஜே.பி. தலைமையிலான இவ்வரசாங்கம் இந்தத் தணிக்கைக்கு உடன்பட்டதாகக் கொள்ள முடியாது. நாடகம் தொடர்பாக பரவலாக எழுந்த எதிர்ப்புக்கள் காரணமாகவே அவர்கள் இம்முடிவை நோக்கி நகர்ந்ததாகவும் கருதப்படுகிறது. சிவசேனைத் தலைவர் பால் தக்கரேயே 'இந்த நாடகத்தில் காந்தியை அவமரியாதை செய்யும் காட்சிகளோ, வசனங்களோ - எதுவும் இல்லை' என்று தெரிவித்துள்ளார்.

மஹாராஸ்டிராவிலுள்ள அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகட்கு அனுமதி வழங்குவதற்கான சபையானது ஒரு சுயாதீனமான சபையாகும். இந்தச் சபையின் அனுமதி பெற்ற இந் நாடகம் ஆர்ப்பாட்டம் நடப்பதற்கு முன் மூன்று தடவை மேடையேறியது.

உண்மையில் இந்த நாடகம் 15 ஆண்டுகட்கு முன்னர் பிரதீப் டல்வி என்ற நாடக ஆசிரியரால் எழுதப்பட்ட ஒரு நாடகமாகும். ஆயினும் அப்போது இந்த நாடகத்தை மேடையேற்றுவதற்கான அனுமதியை அன்றைய தணிக்கைக்குழு அனுமதிக்கவில்லை. டல்வி தனது வெளிப்பாட்டுரிமைக்கான சுதந்திரத்தைக் கோரி பம்பாய் உயர்நீதிமன்றம் வரை போயிருந்தார். ஆயினும் அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. பின்னர் டல்வி நாடகத்திற்கான உரிமையை ஒரு குஜராத்தியமொழித் தயாரிப்பாளருக்கு விற்பனை செய்தார்.

இந்தத் தயாரிப்பாளர் நாடகத்தின் பெயரை 'ஆகுதி' (தியாகம்) என்று மாற்றி அமைத்தார். இந்தக் குஜராத்திய மொழிபெயர்ப்புக்கு தணிக்கைக் குழுவின் அங்கீகாரம் கிடைத்தது. கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் மும்பாயில் மண்டபம் நிறைந்த பல காட்சிகள் காண்பிக்கப்பட்டன. (தற்போது மராத்திய மொழி நாடகத்திற்கிருக்கும் தடை குஜராததிய மொழிக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.)

குஜராத்திய தயாரிப்பாளர் பல வெற்றிகரமான மேடையேற்றங்களுக்குப் பிறகு அதன் பெயரை மீண்டும் மாற்றினார். 'காந்தியா? கோட்சேயா?' என்பது அதன் புதிய தலைப்பு. ஆனால், இந்தத் தலைப்பு மாற்றத்திற்கான அனுமதி தணிக்கைக் குழுவினால் வழங்கப்படவில்லை. ஆனாலும், இந்த நாடகம் எந்தச் சிக்கலும் இன்றி நீண்டகாலமாக மேடையேற்றப்பட்டதை சுட்டிக்காட்டி அவர் விவாதித்ததின் பின் அதற்கு அனுமதி கிடைத்தது.

மூன்று மாதங்களுக்கு முன் மராத்திய மொழியில் அதை மேடையேற்றுவதற்கான அனுமதிகோரி தொடர்ந்த வழக்கொன்றில் டல்வி வெற்றி பெற்றார். அதன்பின்னரே அது மூன்று முறை மேடையேற்றப்பட்டதும், ஆர்ப்பாட்டம் நடந்ததும் பின்னர் மீளவும் தடைசெய்யப்பட்டதுமான சம்பவங்கள் நிகழ்ந்தன.

இந்த நாடகத்தைப் பார்ப்பவர்கள் காந்தியின் சிலையை இழுத்து வீழத்தியும், காந்தியின் பெயரிலுள்ள வீதிப் பெயர்களை தார்பூசி அழித்தும் தம் உணர்வுகளை வெளிப்படுத்துவார்கள் என்றால், அதுதான் என் நாடகத்தின் வெற்றியாகும்' என்று டல்வி கூறியதாக கூறப்படும் ஒரு கதையே பல பிரச்சினைகள் எழக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் டல்வி தான் அவ்வாறு கூறவில்லை என்று மறுத்திருக்கிறார்.

டல்வியைப் பொறுத்தவரை அவரது நாடகம் மகாத்மாவின் கொலையை நியாயப்படுத்தவோ, கோட்சேயை துதிபாடவோ எழுதப்பட்டதல்ல. ஆனால், காந்தியைக் கொல்வதற்கான அவனது சிந்தனையின் வளர்ச்சிப் போக்கையும், அவன் ஒரு வெறிகொண்ட பைத்தியக்காரனாக இருப்பினும் கூட அவனது வெறிக்கும் ஏதாவது தர்க்கம் இருக்கலாம் என்று ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டது.

மராத்திய மொழியில் 'கொலை' என்ற சொல்லுக்கு 'வாத்' என்ற சொல்லை அவர் பயன்படுத்தியதை இந்நாடகத்தை எதிர்ப்பவர்கள் கண்டிக்கிறார்கள். இச்சொல் தீயவற்றை அழிக்கும் போது பயன்படுத்தப்படும் சொல்லாகும். இந்த ஒரு சொல்லே கோட்சேயை உயர்த்திப் பிடிக்கும் போக்கைக் காட்டுகிறது என்று அவர்கள் வாதிக்கின்றனர். ஆனால், கோட்சேக்கு இருந்த உலகப் பார்வைக்குப் பொருத்தமான சொல் இதுதான் என்கிறார் டல்வி. கலாநிதி கெட்கார் என்ற மதிப்புக்குரிய அகராதியாளரால் தயாரிக்கப்பட்ட மராட்டிய அகராதி இச்சொல்லுக்கு தரும் அர்த்தம் 'தனிப்பட்ட நோக்குக்காக அன்றி சமூக நலனுக்காக செய்யப்படும் செயல்' ஆகும் என்கிறார் அவர். இது முழுக்க முழுக்க நீதிமன்றில் கோட்சே வழங்கிய வாக்குமூலத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது என்று வாதிக்கிறார் டல்வி.

எவ்வாறாயினும் இந்த நாடகத்தின் அரசியல் அம்சங்கள் எத்தகைய தன்மையதாயினும் இவ்வாறு அது சட்டரீதியாக தடைசெய்யப்படுவதை பொதுவாக எல்லாக் கலைஞர்களும் எதிர்க்கவே செய்கின்றனர். 'இது ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கையாகும்' என்கிறார் விஜய் கங்காரே - மதிப்புக்குரிய ஒரு மராத்திய நாடக இயக்குநர். ஆரம்பத்தில் இந்தநாடகம் தடைசெய்யப்படுவதை எதிர்த்த சிவசேனை இப்போது தானே தடைசெய்திருப்பதை விமர்சிக்கும் இவர் இது மிக மோசமான ஒரு நடவடிக்கையாகும் என்று கண்டித்துள்ளார்.

கலைப்படைப்புகள் மீதான அரசியற் தடைகளுக்கான முடிவு எப்போது தான் வரப்போகிறதோ?

தகவல்:
FRONT LINE
ஒகஸ்ட் 1998

## சத்திரியம்

வேட்டையாடல்
சத்திரியர்கு அறம்; வீரர்க்கு
இலட்ஷணம்.

நாம் சத்திரியர்
வேட்டையாடலாம் புறப்படு.
பிடி ஒரு மனிதனை
அவன் தோளில் தொற்றிக்கொள்
அவனிடம் உள்ளதை அறி;
சாதி மதம் மொழி இனம்...
அல்லது
ஒருத்திக்காய்
இருவர் முரன்படல் கூடும்

எதாவது ஒன்றிருக்கும்; இல்லாவிடில்
புகட்டு; வெறியூட்டு;புறப்படு-
வேட்டைக்கு.
அவன் உடம்பிலெல்லாம் குண்டுகளை
புதை; கட்டளையிடு-
களம்காண.

கோவிலில் திருவிழா,
மசூதியில் தொழுகை,
பிரித்தில் லயித்திருக்கும் விகாரை;
நகரின் கேந்திரமையம், பஸ் நிலையம்,
சந்தை;
பாலராய் இருந்தாலென்ன....பாடசாலை,
அல்லது
வைத்திய நிலையம்.

எதுவாயிருந்தாலும் நேரம்
முக்கியம்;
மனிதர் கூடும் நேரம்.

இயக்கு;
குண்டுப்பிண்டம் வெடிக்கட்டும்;
பாலர், பெண்டிர், கன்னியர், கர்பிணியர்,
வயோதிபர், பாவியர், வழிப்போக்கர்,
குழந்தைகள்; குருதியில்
குளி; குடித்து மகிழ்; நிணம்
புசி;

அடுத்தவன் தோளில் ஏறிக்கொள்;
அவனை
ஏற்று போர்விமானத்தில்; போதுமான
அளவு குண்டுகளை நிரப்பிக் கொள்;
செலுத்து வான்பரப்பில்.

உற்றுநோக்கு;
எங்காவது மனிதநடமாட்டம் தெரிகிறதா;
நாலுபேர் கூடிநின்று பேசுவது,
பள்ளி முன்றலில்
சிறுவர் கூடி விளையாடுவது,
அல்லது
உன் வருகைகண்டு
ஆலயத்துள் தஞ்சம் தேடுவது.

ஏதுவாயிருந்தாலும்
எண்ணிக்கையை கருத்தில் கொள்.
செலுத்து குண்டுகளை; நொருங்கிச்
சிதறட்டும்

வேட்டையின் வெற்றியில்
களைப்புற்றிருக்கிறாயா - வா;
வட்டமாய் அமர்ந்துகொள்;
பேசுவோம்.

வேட்டைபற்றி,
வேட்டையின் விளைவுபற்றி,
களைப்பாற அருந்தும் மதுவின்
சுவைபற்றி,
மகிழ்விக்க ஆடும் மங்கையின்
அழகுபற்றி,
அமைதி பற்றி, சமாதானம்
மற்றும் நிவாரணம் பற்றி,
உலக நிலவரம்பற்றி,
பேசுவோம்
களைப்பாறும் வரையில்.

ஆனாலும்
தூக்கம் மறந்திரு; மீள
எக்கணமும் கிளம்பவேண்டும்

வேட்டையாடல்
சத்திரியர்க்கு அறம்.

காதல் என்றால் என்ன? அது ஒரு இன்பமான உணர்வுதானே. நானும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். அந்தக் கண்களைச் சந்திக்கும் வரை.

யாராவது ஒருவனை கடைக்கண் பார்வையால் காதலிக்க வைப்பதும், பின்பு காதல் கடிதம் தரும் போது நான் உங்களை அண்ணனாகத் தான் நினைத்தேன் என்பதும், அவனைப் பித்துப்பிடிக்க வைப்பதும், எல்லாமே எனக்கு இன்பமான விளையாட்டுத் தான்.

ஆனால் என் நண்பிகள் என்னைப் பேசுவார்கள், அடியே கயிறு குடுக்காதே. பிறகு ஏமாற்றாதே அது பாவம் எண்டு. நான் எதையும் கணக்கெடுப்ப தில்லை.

இப்படி கொஞ்சப்பேரை காதலிக்க வைத்ததும், பின்பு நழுவிக் கொண்டதும் என நிறைய அனுபவங்கள் எனக்கு. இதனால் இவ்விடயத்தில் நான் ஒரு அனுபவ முதிர்ச்சி பெற்றவளாகிப் போனேன். காதலிப்பதென்றால் கண்டவுடன் கடிதம் தருகிறவனையெல்லாம் காதலிக்கக்கூடாது என்றும், கொஞ்சம் தெரிந்த அல்லது பழகிய பின்பு தான் முடிவெடுக்க வேண்டும் என்றும் பள்ளிப் பருவத்தில் ஒரு இலட்சியம். ஆனால் யாரையும் சைட் அடிக்கலாம், அது எல்லாம் காதலாக இருக்காது. அது எல்லாம் சும்மா பொழுது போக்கிற்கு.

நீங்கள் நினைக்க வேண்டாம் நான் பெடியன் களைக் கலைத்துக் கொண்டு திரிகிற ஜாதி என்று. எனக்கு அதில் எல்லாம் இஷ்டம் இல்லை. என்னைப் பொறுத்த வரைக்கும் நண்பிகளுடன் சேர்ந்தால் தான் கொஞ்சம் குழப்படி (உங்க ளுடைய பாசையில்). மற்றும்படி நான் நல்ல பிள்ளை. ரியூசனுக்கு போகும் போது தான் இப்படி யேதாவது அனேகமாக நடக்கும். கொஞ்சம் அட்டகாசமான பெடியன்கள் என்றால் எங்களை விட்டால் சாதுக்கள் இல்லை என்ற மாதிரி போய் விடுவம். அவங்களிட்டை வாய் கொடுத்தால் தப்ப ஏலாது எண்டு தெரியும். அப்படியான பெடியன் கள் சிலவேளைகளில் கூடாத கதைகளும் கதைப்பாங்கள். அவங்களுக்கு இதுதான் கதைக் கலாம் என்ற விவஸ்தை இல்லை. அவங்களோடை சும்மா சோசலாக பழகப் போனாலும் அவங்கள் பெட்டையளை இளிச்சவாய்களாகத்தான் பாப் பாங்கள். அதாலை நாங்கள் அப்படியான கேசுகளை கவனிக்கிறதேயில்லை. நாங்கள் எண்டு சொல்லிறதை விட நான் எண்டு சொல்லலாம்.

சாமிகளையும் நாங்கள் கணக்கெடுக்கிறேல்லை. அதுகளும் ஒண்டுக்கும் லாயக்கில்லாததுகள் எண்ட நினைப்பு எங்களுக்கு. அதுகளெல்லாம் எல்லாத்துக்கும் பஞ்சாங்கம் பாத்துக் கொண்டிருக் குங்கள். அவங்களைப் பொறுத்தவரைக்கும் அடக்க ஒடுக்கமா தலையக் குனிஞ்சு கொண்டு போறதுகள் தான் உண்மையான நல்ல பிள்ளைகள் எண்ட நினைப்பு. நாங்கள் அதுக்குள்ளை ஏன் தலையிடுவான். அது அவங்களோடை கற்பனை.

நாங்கள் கூடுதலாக சைட் அடிக்கிறதெண்டால் காதலிக்கவும் ஆசையிருக்கும். ஆனால் கொஞ்சம் பயந்தாங்கொள்ளிகள். ஓரளவிற்கு பருவ ஆசை களை முகத்திலை அப்பிக் கொண்டு திரிகிற அப்பாவிகள். அவங்கள் தான் எங்களுக்கு அழகா னவங்களாகவும் இருப்பாங்கள். மென்மையான வங்களாகவும் இருப்பாங்கள். அவங்களோடை பிறென்சிப் வைச்சிருக்கிறதும் ரொம்ப சுலபம். மற்றது முக்கியமான விடயம், அவங்கள் யாரையும் கொச்சைப்படுத்த மாட்டாங்கள். நீ தலைகுனிஞ்சு கொண்டு போனாத்தான் நல்ல பொம்பிளை எண்டு சொல்ல மாட்டாங்கள். அதாலை எங்களுக்கு அப்படியானவங்களைப் பிடிக்கும். எது கேட்டாலும் சிரிப்பாங்கள். எந்த உதவியும் செய்து தருவாங்கள். நல்லாப் பழகிட் டாங்கள் எண்டால் அண்ணன் தம்பி யாகவே வைத்திருப்போம். சேட்டை விட மாட்டோம். மற்றவங்களை எல்லாம் நீ நல்ல வடிவாய் இருக் கிறாய் எண்டு சொல்லி பயித்தியம் பிடிக்க வைத்தோ, அல்லாட்டி எதை யாவது சொல்லி நக்கலடித்துக் கொண்டோ இருப்பம்.

எல்லாத்தையும் விட யார் என்ன தான் சொன்னாலும், ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விதமான ரசனை. எனக்கு புராணத்து அழகர் களைப் பிடிக்காது. முக்கியமா மீசை வைச்சவங் களைப் பிடிக்காது. என்ன காரணம் எண்டு எனக்கே தெரியாது. இன்னது தான் அழகு எண்டு படிமம் போடவும் மாட்டன். அது ஒருவகை கவர்ச்சி. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விதமான கவர்ச்சியான அழகு இருக்கு. எனக்கும் இதில் ஒரு ரகத்தைப் பிடிக்கும் எண்டு வையுங்க ளன்.

ஆனால், காதலிக்கிறது கூட ஒரு கலை தான். அது ஒரு சிலருக்குத் தான் சரிவரும். அழகானவர்கள் எல்லாருமே (உங்களுடைய பாசையில் அழகான வர்கள்) காதலிக்கலாம் எண்டில்லை. அழகற்ற வர்கள் எல்லாருமே காதலிக்க முடியாதெண்டு மில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித மான ரசனை. நான் அழகு என்று ரசிப்பது மற்றவர்களுக்குப் பிடிக்காது. அவர்கள் அழகு என்பது எனக்குப் பிடிக்காது. இவையெல்லாம் ஒவ்வொரு மனிதனும் வாழ்கிற சூழலும், அவர்க ளோடு வாழ்கிற மனிதர்களும் சேர்ந்து தீர்மானிக் கிற விடயம். ஆனால் எவையுமே அழகற்றது என்றில்லைத் தானே. நாங்கள் அழகில்லை என்று நினைப்பது எங்கள் விருப்பிற்கு அப்பாற்பட்டதே தவிர, அது உண்மையில் அழகற்றதல்லவே.

எல்லாரும் காதலை உணர்ந்தவர்கள் தானே. ஒவ்வொரு மனிதனும் அழகா இருக்க வேண்டும் என்று விரும்பிறதும் இந்த காலத்திலை தானே. ஒவ்வொருதரும் எவ்வளவு தரம் தங்களை கண்ணாடியில் பார்த்துக் கொள்வார்கள்.

நானாக யாருக்கும் காதல் கடிதம் கொடுக்க மாட்டேன். ஒன்று அதற்கு துணிச்சல் இல்லாமல்



இருக்கலாம். அல்லாவிட்டால் கலைத்துப்பிடிப் பதில் எல்லாம் ஏனக்கு நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம்.

நான் என்னுடைய சின்ன வயசிலேயே நிறையப் பேருக்கு அட்வைஸ் பண்ணுவன். காதல் எண்டால் என்ன? வாழ்க்கை எண்டால் என்ன எண்டு. அவங்கள் எல்லாருக்கும் நான் முதிர்ச்சி அடைந்த ஆள்போல் தான் இருந்தேன். எல்லாருமே என்னுடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளமாட் டார்கள். சிலபேர் காதல் எண்டால் ஒருத்தரைப் பார்த்தால் மனசுக்குள்ளை டக்கெண்டு பிடிச்சுக் கொள்ளும். அது எந்தவிதமான அறிவுரீதியான சிந்தனைக்கும் அப்பாற்பட்டது எண்டு சொல்லு வார்கள். சிலபேர் சொல்லுவாங்கள் கண்டவுடன் வாறதெல்லாம் வெறும் மயக்கம். அறிவு ரீதியாக ஒரு மனிசன்டை சில விடயங்களையாவது பிடித்திருக்க வேண்டும் என்பார்கள். எனக்கும் இதில் நிறையவே குழப்பம் உண்டு. அறிவு ரீதியாக வந்தால் திட்டமிட்டு பிள்ளையார் பிடிப்பதைப் போல் இருக்கும். கண்டவுடன் வாறதெண்டால் இந்த உலகத்திலை ஒரு மனுசனை மட்டும்தான் எங்களுக்குப் பார்த்தால் பிடிக்கும் என்றில்லையே. எங்களுடைய சில கற்பனைகள், ஆசைகள், ரசனைகள் என்ற வரையறைகளுக்குட்பட்ட வர்களை எங்களுக்கு பிடிக்கும். ஆகவே எனக்கு மின்னலடிக்கிறதெல்லாம் காதல் எண்டோ, அல்லாட்டி பிள்ளையார் பிடிக்கிறதெல்லாம் காதல் எண்டோ ஏற்றுக் கொள்ளேலாது. காதல் எண்டால் என்ன எண்டால் அது ஒரு இனம் புரியாத ஒன்று எண்டு மட்டும் தான் சொல்ல முடியும்.

அனேகமாக பள்ளிப் பருவத்தைத் தாண்டிய பிறகு எனக்கு காதலெண்டால் எங்களுடைய கொள்கை கள் இலட்சியங்களுடன் எங்களை சுதந்திரமாக நடமாட விடக்கூடிய ஒருவரைத் தெரிவு செய்வதுதான் எண்ட அபிப்பிராயம் எனது வாழ்க்கை முதிர்ச்சியினூடாக எனக்கு ஏற்பட்டது. இப்படியே எனக்குள் நான் அறிகிற விசயங்களா லும் பார்க்கிற விசயங்களாலும் என்னுடைய நண்பர்கள் உறவினர்களாலும் என்னை அறியா மலே எனக்குள்ளை ஏற்படுகின்ற மாற்றங்கள் எல்லாம் எனக்கு காதல் என்பதை அறிவுரீதியா னது என்பது மாதிரி கொண்டு வந்து விட்டது.

எனக்கு இப்பவும் நினைத்தால சிரிப்பு வருகிற விடயம் ஒண்டு உள்ளது. எனக்கு அப்ப பதினாறு வயதிருக்கும். எனக்குத் தெரிந்த ஒரு சின்னப் பெண் காதல் வயப்பட்டாள். அந்தப் பெண்ணின் அம்மாவிற்கு என்னில் நல்ல மரியாதை நான் நல்ல பெண் எண்டு. உண்மையிலும் நான் ஒன்றும் கூடாத பெண்ணில்லைத் தானே. அதனால் அவ ளிற்கு அட்வைஸ் பண்ணும்படி கூறினார். திடீரென நான் ஓர் ஆசிரியையாக உயர்த்தப்பட்டதாக உணர்ந்தேன். நான் அந்தச் சின்னப் பெண்ணிற்கு சொன்னேன்;

காதலிக்கிறதுக்கு உங்களுக்கு என்னும் வயசு வரேல்லை. நீங்கள் சின்னப் பிள்ளைகள் இப்ப படிக்க வேணும். படிச்சு முடிஞ்சாப் பிறகு காதலிக்கலாம். இப்ப இதுகளுக்குள்ளை போனால் உங்களுக்கு எதுவுமே செய்ய முடியாமல் போகும் எண்டு. அப்படித்தான் நான் சொன்னேன்.

அவள் காதலை ஒரு இனம் புரியாத அனுபவம் என்று நினைத்திருந்தாலோ அல்லாவிட்டால் அறிவு ரீதியானதாக நினைத்திருந்தாலோ என்னை முட்டாள் என்று தான் கருதி இருப்பாள். ஆனால் எனக்கொரு நம்பிக்கை அவள் அப்பிடி நினைக்க சந்தர்ப்பம் இல்லை எண்டு. ஏனெனில் அவள் என்னிலும் அனுபவம் குறைந்த சின்னப்பிள்ளை.

எனக்கு காதல் பற்றிய சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டாலும், நானும் ஒரு சாதாரண பெண் தானே. எனக்குக் குறும்பு செய்வது என்றால் நன்றாகப் பிடிக்கும். கிண்டல் செய்வது எல்லாம் பிடிக்கும்.

அத்தோடு எனக்குப் பிடித்தமான அழகானவர்கள் என்றால் பார்க்கப் பிடிக்கும். சிரிக்க விருப்பம் இருக்கும். இவையெல்லாம் மனித இயல்பு தானே. இவற்றையெல்லாம் மூடி மறைக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அனேகமானவர்கள் எல்லாம் இவற்றை ஏற்றுக் கொள்வதில்லை.

காதல் எண்ட விடயத்தில் எங்களுடைய கற்பனை களுக்கு ஆசைகளுக்கு அப்பால் உள்ளவர்கள் கூட சிலவேளைகளில் எங்களை கவர்ந்துவிடுவ துண்டு. அப்படித்தான் நானும் அந்தக் கண்களால் கவரப்பட்டு தூக்கி வீசப்பட்டேன். எந்தக் கேள்வியும், பதிலும் இல்லாமலேயே. அது இப்படித் தான் நிகழ்ந்தது.

O O O

நான் எப்பவும் தனியாக பிரயாணம் செய்வது என்றால் ரொம்பவும் ஜாக்கிரதையாகத் தான் இருப்பேன். யார் சிரித்தாலும் சிரிக்க மாட்டேன். சைட் எல்லாம் அடிக்க மாட்டேன். அமைதியான பொறுப்புள்ள பிள்ளை மாதிரி இருப்பன். என்னை யாரும் ஏமாத்தக்கூடாது எண்டிறதிலை எனக்கு அப்படியொரு பிடிவாதம்.

அன்றும் அப்படித்தான் ரொம்பவும் ஜாக்கிரதை யாக இருந்தேன். என்னுடைய சித்தி வீட்டுக்கு போய் விடுமுறையை கழித்து விட்டு வருகிறேன். முதலில் பஸ் ஸ்ராண்டிற்கு வரும் பொழுது இப்போதைக்கு கொழும்பிற்கு எந்த பஸ்சும் போக மாட்டுது எண்டு சொன்னார்கள். ஒரு பஸ் மட்டும் வெளிக்கிடத் தயாராக நின்றது. ஆனால் சீற் இல்லை. நிண்டு தான் போக வேண்டும். அண் டைக்கு ஏதோ வீட்டை வரவேண்டும் போல ஒரு மனநிலை. எப்படியாவது போய்சேர வேண்டும் என்று ப்ஸ்ஸில் ஏறினேன். பின்சீற்றில் நடுவில் இருந்தவர் என்ன நினைத்தாரோ இறங்கிப் போய் விட்டார். அந்த சீற் கிடைத்ததால் அதில் இருந்தேன். எனக்கு ஒரு பக்கத்தில் சின்னப் பிள்ளையும் தகப்பனும், மற்றப்பக்கத்தில் ஒரு வயதுபோன ஒருவர். கொஞ்சம் நின்மதியாக இருந்தது. யாரும் சேட்டை விடக்கூடியவர்கள் அல்ல என்பது போல் முகங்கள் இருந்தன. அந்தச் சின்னக் குழந்தை என்ன மாதிரி, நான் குழப்படி செய்தால் அடிப்பீர்களா என்பதைப் போல் குறும்பாய் பார்த்தான். எனக்குச் சிரிப்பு வந்தது. நான் சிரித்தேன். அந்தக் குழந்தையும் வெட்கப்பட்டு சிரித் தது. பஸ்ஸில் நிண்டு கொண்டே கொஞ்சப் பேர் வந்தார்கள். நான் கால் நீட்ட முடியாமலும் சிலர் நின்றார்கள். நான் நிமிர்ந்து பார்த்த போது அவனும் இன்னும் யாரோ சிலரும் நின்றார்கள். அவன் என்னைப் பார்த்துக் கொண்டு தான் நின்றான். ஆனால் அவன் என்னை ஒன்றும் பெரிதாகக் கவரவில்லை. அவனுக்குப் பக்கத்தில் நிண்ட பெடியனைப் ⇨



பார்த்து மனதிற்குள் நினைக்கிறேன் அழகாக இருக்கிறான் எண்டு.

பஸ் வெளிக்கிட்டது. ஒருவகை அமைதி என்னையறியாமலே என்னிடம் குடிகொண்டிருந்தது. ஏதோ ஒரு வெறுமை. இந்தவிடுமுறை சந்தோஷமாக சண்டை பிடித்தும் ஊர்சுற்றியும் கழிந்து விட்டது. எனி வீட்டிற்கு போய் பழையபடி வேலையும் வீடும், அதே மனிதர்களும். அலுப்புத் தட்டியது. மனதுக்குள் சலித்துக் கொண்டேன். பின்பக்கம் சாய்ந்து கண்களை மெதுவாக மூடினேன். முன்னுக்கு நிண்டு கொண்டிருந்தவர்களில் ஒருவன் தன்னுடைய பாக்கை வைத்திருக்கும்படி தட்டிக் கேட்டான். பேசாமல் வாங்கி வைத்துக் கொண்டேன். அவனும் நிண்டான். நான் ஏனோ அவனிடம் வாங்கவில்லை. அவனும் என்னிடம் கேட்கவில்லை. நான் வேறு பக்கம் திரும்பிக் கொண்டேன்.

அதுக்குப் பிறகு நிறைய ஆமி செக் பொயின்ருகள். அதாலை பஸ்ஸாலை இறங்கி ஏற வேண்டும். ஒவ்வொரு இடமும் இறங்கி கொஞ்சதூரம் நடந்து போய் பாக் செக் பண்ணி முடிய உடம்பை தடவிப் பார்ப்பார்கள். பிறகு அடையாள அட்டை கேட்பார்கள். எல்லாம் பார்த்து முடிந்த பிற்பாடு, குழம்பிப் போய் உள்ள பாக்கில் எல்லாவற்றையும் திணித்துக் கொண்டு கொஞ்சதூரம் நடந்து வந்து பஸ்ஸை செக் பண்ணி அனுப்பும் வரை காத்திருக்க வேண்டும். பிறகு பஸ்ஸில் இடிபட்டு ஏற வேண்டும். இப்படியே ஆறு அல்லது ஏழு முறை இறங்கி ஏற வேண்டும். எனக்கு களைப்பாகவும் இருந்தது. கதைப்பதற்கும் யாரும் இல்லை. பஸ்ஸிற்காக காத்திருக்கும் பொழுது யாராவது தெரிந்தவர்கள் வந்திருக்கிறார்களா என்று நோட்டம் விட்டேன். ஆனால் யாரும் தெரிந்த முகங்கள் இல்லை.

ஒவ்வொரு முறையும் இறங்கி நடக்கும் பொழுதும் யாராவது மெதுவாக நக்கலடிப்பார்கள். இல்லையெனில் பக்கத்தில் நடந்து வருவார்கள். வந்து பஸ்ஸிற்காக காத்திருக்கும் பொழுது பார்த்துக் கொண்டு நிற்பார்கள். முகவரி தெரியாத யாரோ ஒரு அழகன் சிரித்தான். நானும் சிரித்தேன்.


அதில் வந்தவர்களில் நான் கொஞ்ச வித்தியாசமாகத்தான் இருந்தேன். நான் உடுத்தியிருந்த உடையிலிருந்த எளிமையோ அல்லது எனது தோற்றத்தில் இருந்த எளிமையோ ஏதோ ஒரு வகையில் நான் அந்த பஸ்ஸில் வந்த பெண்களில் இருந்து வேறுபட்டவளாகத் தான் இருந்தேன். அதனாலோ என்னவோ தெரியாது அதில் வந்தவர்களில் சிலர் என்னைக் கூர்ந்து கவனித்தார்கள். நான் எதுவும் தெரியாதவளைப் போல் எங்கையாவது மரத்தையோ, அல்லது வெற்று நிலத்தையோ பார்த்துக் கொண்டிருப்பேன். நான் தற்செயலாய் நிமிர்ந்து பார்க்கும் போதெல்லாம் அவன் என்னைப் பார்த்துக் கொண்டு தான் இருந்தான். அப்போது கூட நான் பெண் என்பதாலோ அல்லது வேறு ஏதாவது காரணத்திற்காகவோ அங்கு நின்ற சிலரைப் போல அவனும் பார்க்கிறான் என்றே தான் நினைத்தேன். அவனை நான் வித்தியாசமாக இனம் காணவில்லை. அவன் அப்படியான தோற்றத்தையும் கொண்டிருக்கவில்லை.

பஸ்ஸில் பிரயாணித்துக் கொண்டிருக்கும் போது அடிக்கடி சீற்றில் சாய்ந்து கொண்டே தூக்கி எழும்பினேன். இதற்குள் எத்தனையோ பேர் ஏறி இறங்கினார்கள். எனக்குப் பிடித்தமான அழகானவர்களும் கூட. சில பேர் சிரித்தார்கள். நானும் சிரிக்கலாம் என்று தோன்றினால் சிரித்தேன்.

பஸ் செக் பொயின்ருகள் எல்லாம் தாண்டி கொழும்பு வந்து சேருவதற்கு இன்னும் ஒரு மணி நேரமே இருக்கும் எண்டு நினைக்கிறன். சாடையான தூக்கத்தில் இருந்து எழும்பினேன். என்னை யாரோ பார்த்துக் கொண்டிருக்கிற மாதிரி ஒரு உணர்வு. தலையை நிமிர்த்திப் பார்த்தேன். அவன் தான். அந்தப் பார்வையில் ஏதோ இருந்தது. அதில் காதலோ காமமோ அல்ல. ஆகர்சிப்பது போன்ற ஒரு பார்வை. நீ என் கண் பார்வைக்குள் சந்தோசமாக இரு என்பது போன்றும், ஒரு குழந்தை தூங்கும் போது பார்த்து ஒரு தாய் புன்னகைப்பாளே அது போலவும் இருந்தது. ஒரு கணம் நான் தடுமாறினேன். சந்தோசத்தில் மூழ்கினேன். ஆனால் அவன் கண்களை வேறு திசையில் திருப்பவில்லை. நேராகவே பார்த்துக் கொண்டிருந்தான். நான் எந்தக் கள்ளமும் அற்றவன் என்பது போல. வழமையாக யாராவது ஆண்கள் பார்த்தால் விழுங்கி விடுவது போல் பார்ப்பார்கள் அல்லது நாக்கை நீட்டுவார்கள் என்று பயப்படும் எனக்கு, அவன் புன்னகையினூடே நான் தூய்மையானவன் என்று மனதாரப் பார்ப்பது ஆச்சரியமாகவும் இருந்தது. அதேநேரம் ஏதோ ஒரு குளிர்மைக்குள் இருப்பது போலவும் இருந்தது.

நான் பஸ்ஸிற்கு வெளியில் பார்வையைத் திருப்பினேன். ஆனால் மனம் நிலை கொள்ளவில்லை. அந்தக் கண்கள் என்னைப் பார் என்று துரத்துவது போல் இருந்தது. நான் எனக்குள் யோசித்தேன். அவனைப் பார்க்கலாமா? வேண்டாமா? அவனைப் பார்த்து சலனப்பட்டுக் கொள்ள வேண்டுமா? பார்த்தால் என்ன? கொழும்பிற்கு பஸ் சென்றதும் நான் எங்கோ, அவன் எங்கோவாக போய்விடுவோம் தானே. நான் என்ன அவனைக் காதலிக்கப் போவதில்லையே. அவன் பார்க்கிறான். நானும் பார்த்தேன் என்று வைத்துக் கொண்டால், வழமையாக பஸ்ஸில் யாராவது அழகானவர்களைப் பார்ப்பதில்லையா? அதுபோலத் தானே இதுவும். ஆனால் அவன் அழகானவனா? எனக்குப் பிடித்துள்ளதா? இல்லை! உண்மையில் இல்லை!! என் ரசனையைப் பொறுத்தமட்டில் அவன் அழகல்ல. ஆனால் அவன் கண்களின் பார்வை மட்டும் என் மனதை ஏதோ செய்கின்றது.

என் மனம் எதையும் சிந்தித்து தீர்மானம் எடுக்கும் நிலையில் இல்லை. நான் திரும்பி அவனைப் பார்க்கிறேன். அவன் அப்பவும் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான். முதலில் என்ன நினைத்தேனோ தெரியாது சிரிப்போமா என்று யோசித்தேன். பிறகு பேசாமல் திரும்பி விட்டேன். நேரம் இன்னும் இருக்க பொழுதும் போகவில்லை. நெடுகலும் கண்ணை மூடிக்கொண்டிருந்து கண் வேறு எரிச்சலாக உள்ளது. ஏன் இவன் என்னை இப்படிப் பாக்கிறான். இவனுக்கு என்னைப் பிடித்திருக்குமா? மனதிற்குள் சிரித்துக் கொண்டேன். பிறகு எங்கையிருந்து குழந்தைத் தனம் மேலெழுந்ததோ தெரியாது. அவன் பார்க்க நானும் பார்த்தேன். அவன் விடாமல் தொடர்ந்து பார்த்துக் கொண்டே இருந்தான். ஒரு சிலநொடிகளுக்கு மேல் அவனது கண்களை அதனுள்ளிருந்த ஏதோ ஒரு இனம் புரியாத ஒன்றை என்னால் தாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது. மனம் படபடத்துக் கொண்டது. வெளியில் திரும்பிப் பார்த்தேன்.



பஸ் எதிலிருந்தோ தப்பி ஓடுவதைப் போல விரைவாகப் போய்க் கொண்டிருந்தது. கண்ணாடிக்குள்ளால் ஒவ்வொரு மரமும் வீடும் மனிதரும் பஸ்ஸின் வேகத்திற்குள் மறைந்து போனார்கள். யாரோ சின்னக் குழந்தை பஸ்ஸிற்கு கை காட்டியது. நான் அவனைத் திரும்பிப் பார்த்தேன். நான் பார்ப்பது அவனிற்குப் பிடித்திருக்க வேண்டும். அதேநேரம் நான் அவனைப் பார்ப்பதற்கு சங்கடப்படுவதையும் அவன் புரிந்திருக்க வேண்டும். பஸ்ஸிற்கு வெளியே பார்த்துக் கொண்டே எதையோ நினைத்து உதட்டோரம் சிரித்தான். உதட்டை ஈரப்படுத்திக் கொண்டான். மனதில் இருக்கும் விருப்பையெல்லாம் கண்களால் கொட்டுவதைப் போல புன்முறுவலோடு அழகாகப் பார்த்தான். என் பார்வைக்குள் ஒருவன் நனைவதைப் பார்ப்பது எனக்கு புதுவித இன்பமான அனுபவமாக இருந்தது.

இப்படி சின்ன விளையாட்டுப் போல் தான் அது ஆரம்பமாயிற்று. போகப் போக அவன் என்னைப் பார்க்க வேண்டும் எண்டே விரும்பினேன். எனக்கும் அவனைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் அந்தக் கண்களில் இருந்த ஏதோ ஒன்றை என்னால் தாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது. திரும்பவும் வேறு எங்காவது பார்ப்பேன். இப்படியே கொஞ்ச நேரம் போயிருக்கும். நான் அவனுடைய கண்களுக்கு ஆட்பட்டுப் போய்விட்டதாய் உணர்ந்தேன். என்னையறியாமலே என் மனதிற்குள் ஏதோ ஒன்று ஊற்றெடுப்பதாய் உணர்ந்தேன்.

சிலநொடிகள கண்களை மூடிக் கொண்டிருந்து மனதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தேன். நான் செய்வது சரியா? ஒருமுறை முறைத்துப் பார்த்தால் அவன் பிறகு என்னைப் பார்க்க மாட்டான் தானே? என்னால் ஏன் அப்படி முறைக்க முடியவில்லை? அவன் முகம் வாடிப் போவதை நான் விரும்பவில்லையா? ஆனால் நான் அவனைப் பார்ப்பதன் ஊடாக அவனுக்கு நம்பிக்கையை ஊட்டிக் கொண்டிருக்கிறேன் அல்லவா? ஏன் இப்படிக் குழம்புகிறது மனது. அப்படி என்னதான் என்னைக் கவர்ந்தது என்று அவனை உற்றுப் பார்க்க விரும்பினேன். கிட்டத் தட்ட 5 மணித்தியாலத்திற்கு மேல் ஒரே பஸ்ஸில் பிரயாணம் செய்கிறோம். இவ்வளவு நேரமும் என்னைக் கவரமுடியாத அவனது கண்கள் எப்படி ஒரே பார்வையில் என்னை தனக்குள் எடுத்துக் கொண்டது. அவன் கண்களை தவிர்த்து நான் அவனை என் மனதிற்குள் அளவெடுத்தேன்.

அவனது பெரிய நெத்தி அதில் சுருண்டு விழுந்திருக்கிற மயிர். அது ஒன்றும் எனக்குப் பிடித்திருக்கவில்லை. நீண்ட மூக்கு அழகானது. ஆனாலும் பெரிய எடுப்பாக இல்லை. மீசை எடுத்து முழுதாக சவரம் செய்யப்பட்ட அமைதியான முகம். சிறிய மெலிதாய் தடித்த உதடு கறுத்திருந்தது. ஓரளவு அளவான உடம்பு. அவன் அணிந்திருந்த வெளிறிய மெல்லிய நீல நிற சேட்டும், கறுப்பு ரௌசரும் அவனுக்கு மிகவும் எளிமையான தோற்றத்தைக் கொடுத்தது. எனக்கு என்னவோ அந்த எளிமை ரொம்பவும் பிடித்துப் போய் விட்டது. கழுத்தில் இருந்த சங்கிலி மட்டும் தான் ஏதோ தேவையில்லாத பொருள் போல் இருந்தது. எப்படி இவன் என்னை இவ்வளவு தூரம் கவர்ந்திருக்க முடியும். ஆனால் நான் அவனுடைய அழகு பற்றியோ அல்லது அவனது ஆளுமை பற்றியோ அறிவு ரீதியான கொச்சைப் படுத்தலுக்குச் செல்லத் தயாராக இல்லை. என் மனம் அதற்கு இப்பொழுது இடம் கொடுக்க முடியாத நிலையில் இருந்தது. எல்லாவற்றிற்கும் அப்பால் அவன் என்னை ஆக்கிரமித்துக் கொண்டான். அவனுடைய அளவான உடம்பும் திறந்த பட்டினூடே தெரியும் நெஞ்சுப் பகுதியும் என்னை கலக்கமடையத் தான் செய்தன. அவனுடைய நீண்ட கழுத்துப்பகுதி கூட அழகாகத்தான் இருந்தது. அவன் என்னிடம் ஏதோ சொல்ல வாயெடுத்தான். நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். அவன் எதுவும் பேசுவதை நான் விரும்பவில்லை. எனக்கு அவனைப் பார்த்துக் கொண்டிருக்க மட்டுமே பிடித்திருந்தது. அவனது பார்வையை என் கண்கள் சந்திக்கும் போதெல்லாம் அவனது சிறிய உதடு புன்முறுவல் பூப்பது போல் இருந்தது.

அவன் ஒவ்வொரு முறையும் எதையோ சொல்ல வாயெடுக்கும் போது நான் வேறுபக்கம் திரும்பிக் கொண்டேன். அவன் உதட்டைக் கடித்துக் கொண்டான். ஏதோ சலித்துக் கொண்டவனைப் போல் தலையை ஒருவாறு அசைத்தான். எனக்கு அதுகூட சிரிப்பையும், அவன் உதட்டைக் கடித்துக் கொண்ட விதம் ஏதோ ஒரு நெருடலையும் தந்தது. அவன் அப்படிக் கடித்துக் கொண்டது கூட அழகாகத் தான் இருந்தது.

அந்த நிமிடங்களில் எல்லாம் அவனிடம் நான் என்னை இழந்து கொண்டிருப்பதை உணராமல் தான் இருந்தேன். ஒரு வகையில் இது ஒரு விளையாட்டு பஸ் கொழும்பை வந்ததும் நான் வேறாக போய்விடலாம் என்ற மனத்துணிச்சல் என்னிடம் இருப்பதாகவே நினைத்தேன்.

பஸ் கொழும்பை அடைவதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்பு அவன் எனக்குப் பக்கத்தில் வந்தான். சைகையால் கேட்டான்;

யாரோடு வந்தீர்கள்? எனக்குக் கொஞ்சம் தூரத்தில் இருந்த யாரோ ஒரு பெண்ணைக் காட்டி அம்மாவுடனா? என்றான்.

நான் இல்லை என்றேன்.

திரும்பவும் யாரோடு என்றான்

நான் சிரித்துக் கொண்டேன். அவனுடைய சைகைமொழி எனக்குச் சிரிப்பைத் தான் தந்தது.

தனியாகவா ? என்று கேட்டான்.

ஓம் என்றேன்.

என்னைத் தனக்குத் தெரியும் என்றான்

நான் அவனைத் தெரியாது என்றேன்.

அத்தோடு எப்படி என்னைத் தெரியும் என்றும் கேட்டேன்.

அவன் திரும்பவும் ஏதோ என்னை நன்றாகவே தெரிந்தவனைப் போல், தெரியும் என்றான்.

எனக்கு அவனுடன் கதைத்தது ஏதோ மனதிற்குள் சந்தோசமாக இருந்தது. ஆனால் அவன் எதிலோ சலிப்படைந்திருப்பவனைப் போல் இருப்பதாக நான் உணர்ந்தேன். நான் அவனது சேட்டில் பட்டிருந்த மைக்கறையைப் பார்த்தேன். அவன் அவனுடைய நண்பனுடன் கதைத்துக் கொண்டு என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான். எனக்கு அவனது நேரிடையான பார்வையை தாங்கிக் கொள்ள முடியவில்லை. பிறகு வெளியில் திரும்பி பார்த்துக் கொண்டிருந்தேன்.

பஸ் ஸ்ராண்டில் பஸ் நின்றதும் இறங்கவில்லையா என்று கேட்டான். எனக்கு அவன் என்ன கேட்கிறான் என்றே விளங்கவில்லை..

உண்மையிலை நான் என்னிடம் இல்லை.

பேசாமல் இறங்கினேன். பஸ்ஸிற்கு முன்னால் போய் நின்றேன். நான் எங்கே நிற்கிறேன் என்பதையே என்னால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. திரும்பிப் பார்த்தேன். அவன் என்னை நோக்கி வந்தான்.

படிக்கிறீங்களா? எண்டு கேட்டான்

நான் வேலை செய்கிறேன் என்றேன். எனக்கு அவன் ஒரு பொருட்டல்ல என்பதைப் போல் நிலத்தைப் பார்த்துக் கொண்டோ அல்லது நான் போவதற்கான பஸ்ஸை தேடிக் கொண்டே நின்றேன்.

உங்களுடைய இனிமையான பெயர் என்ன? என்று ஆங்கிலத்தில் கேட்டான்.

நான் தடுமாறிப் போய் விட்டேன். உண்மையில் என்னால் கதைக்க முடியவில்லை. ஏதோ ஒரு வெம்மல். சுதா என்று ஒன்றைச் சொல்லில் விக்கினேன்.

திருமலையிலை யார் என்று கேட்டான்.

அன்ரி என்றேன்.

எங்க போகவேணும் என்று கேட்டான்.

தெகிவளை என்றேன்.

உண்மையில் இவை கூட நான் ரொம்பவும் கஷ்டப்பட்டே ஞாபகப்படுத்த வேண்டியதாய் இருக்கிறது. எனக்கு அந்தக் கண்களைத் தவிர வேறு எதுவுமே இப்போது ஞாபகம் இல்லை.

தெகிவளை எந்த இடம் என்று அவனுடைய நண்பன் கேட்டான். நான் என்ன என்றேன். அவனுடைய நண்பனைப் பார்த்து. அவனுடைய நண்பன் திரும்பவும் கேட்டான். நான் சொல்ல வாயெடுக்கும் போதே அவன் சொன்னான் அவ அதையும் மறந்திருப்பா என்றான். பிறகு திருத்திச் சொல்வதைப் போல அவ எல்லாத்தையும் மறந்திருப்பா என்றான் - எனக்குத் தெரியும் அவன் தன்னைத் தெரியாது என்று சொன்னதற்காகத் தான் இப்படிச் சொல்கிறான் என்று - என்னை வெற்றி காண முடியாமலே அவன் போய்விட்டான்.

அதன் பிறகு தான் நான் என்னை உணர்ந்தேன். எனக்கு அவனிடம் நிறைய கேட்க வேணும் போல இருந்தது. அந்த நிமிடத்தில் என்னால் எதையும் செய்ய முடியவில்லை. அவனுடைய பெயரைக் கூட அறிந்து கொள்வதற்கு, ஏன் அவனை நிமிர்ந்து பார்ப்பதற்கே என்னால் முடியாமல் இருந்தது.

அவன் கொஞ்ச தூரம் போயிருக்க மாட்டான். எனக்கு கண்கள் முட்டிக் கொண்டு வந்தது. அழவேணும் போல் வெம்மலாக இருந்தது - ஒரு குழந்தைப் பிள்ளை ரொபி கேட்டு அழுறதைப் போல் அடம்பிடிச்சு அழவேணும் போல் இருந்தது - நான் யாரிடம் அடம் பிடிக்க முடியும். நான் கேட்டால் யார் தான் அவனை எனக்குத் தரமுடியும்.

அவன் ஏதோ சொல்ல வாயெடுத்த போதெல்லாம் நான் எதற்காக முகத்தைத் திருப்பிக் கொண்டேன். கடைசியாக அவன் கதைக்கும் போதாவது

⇨16

# யுத்தத்தினால் ஏற்படும் உளத்தாக்கங்கள்



ஆனிமுத்தர்

தமிழ்ச் சூழலில் குறிப்பாக 1983இன் பின் தொடர்ச்சியாக நிலவும் யுத்தச்சூழலினால் நிகழும் அசம்பாவிதங்களினால் பலதரப்பட்ட உளத்தாக்கங்களையும் நெருக்கீடுகளையும் தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்றனர். தமிழ்ச் சமூகம் தனி மனித ஆளுமை விருத்தியற்று பாதுகாப்பற்ற உணர்வும் பயவுணர்வும் மேலும் அதிகரித்து விரக்தியுள்ள ஓர் சமூகமாக வாழ நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளது. இதனால், ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும், நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது.

யுத்தக்காலங்களில் இவை தவிக்கப் பட முடியாதவையென கூறப்படுகின்ற போதிலும் எந்தவொரு சமூகமும் தனது நீண்டகால நோக்கிலான முன்னேற்றம் கருதி சிந்தித்துச் செயற்படுவது அவசியமாகும்.

நாம் வாழ்ந்த பிரதேசங்களில் இருந்து யுத்தச் சூழல்களினால் வெளியேறி வேறிடங்களில் வாழ நிர்ப்பந்திக் கப்பட்டு வருகின்றோம். இது நமக்கு தற்காலிகமாக பாதுகாப்புணர்வைக் கொடுத்தாலும் நாம் வாழ்ந்து வர நேர்ந்துள்ள சூழலில் பல்வேறு புதிய பிரச்சினைகளையும் நெருக்கீடுகளையும் முகங்கொடுக்கின்றோம்.

அகதி வாழ்க்கையின் தொடர்ச்சி தமிழர்களின் வாழ்வியலையே மாற்றியமைத்து உளவியக்க ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உடல், உள ரீதியான நோய்கள் மற்றும், செயலாற்றும், திறன்குன்றல் மனிதவுறவு ஊடாட்டங்களில் குறைபாடு கொண்டு விரக்தியுற்ற, இறுகிய தன்மைகளைக் கொண்ட மனிதர்கள் போன்ற பல்வேறுவிதமான வெளிப்பாடுகளையும் தோற்றுவித்துள்ளது.

யுத்தச் சூழலுக்குள் வாழ்ந்து வரும் போதே தமது வருங்கால சந்ததியினரின் எதிர்கால உள, ஆரோக்கியம் பற்றிய அக்கறையும் கூட, அச் சமூகத்திற்கு இருக்க வேண்டும். அதற்கான முன்னெடுப்புக்களையும் அனைத்து சாத்தியமான வழி முறைகளிலும் அது வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உளப்பாதிப்புக்களைப் பற்றிய விழிப்புணர்வும், அவற்றை தம்மளவில் வளர்த்துக்கொள்ளும் மனப்பான்மைக்கான திட்டங்கள் செயற்பாடுகள் என்பன சமூக அக்கறையுள்ளவர்களினால் பின்பற்றப்பட வேண்டும்.

யுத்தச் சூழல்கள் உருவாவதற்கு முன்னர் தமிழ்ச் சமூகம் உளத்தாக்கங்கள் நெருக்கீடுகள் எதுவும் இல்லாத ஆரோக்கியமான ஒரு சமூகமாக இருந்ததாகக் கூறமுடியாது. ஆனால், இன்று யுத்தச் சூலினால் பிரச்சினைகள் இன்னும் பன்மடங்கு வித்தியாசமான பிரச்சினைகளாகவும் கிளைவிட்டு பல விதமான தாக்கங்களை உருவாக்கியுள்ளது.

யுத்தக்கால நெருக்கீடுகளினால் உருவாகும் தாக்கங்களில் எவை இயற்கையான சாதாரண தாக்கங்கள், எவை அசாதாரண பாதிப்பின் அறிகுறிகள் என்று வேறுபடுத்தி அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

பொதுவில் நெருக்கீடுகளால் இயற்கையாக உண்டாகும் உடல், உள விளைவுகளும் அது சார்ந்த உணர்ச்சிகளுமே ஆரோக்கியத்தின் துலங்கல்களாக அமையும். ஏனென்றால், இவை எங்களை அபாயமான சூழலிலிருந்து விலக்கிக் கொள்ளவும் தற்காப்பு முயற்சிகளை எடுக்கவும் உளச்சம நிலையைப் பேணவும், நெருக்கீட்டைக் கையாளவும் ஊக்கமளித்து நம்மை இசைவாக்கம் செய்து வாழ்க்கையைத் தொடர உதவுகின்றன.

இப்படியான நெருக்கீடுகள் திவீரமாக அல்லது தொடர்ச்சியாக நீடித்தால் அவற்றின் தாக்கம் எமது தாங்கும் சக்திக்கு அப்பாற்பட்டு பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

ஆகவே நாம் இவ்வாறான பாதிப்புக்களை இனங்கண்டு ஆராயும் போது தான் சில சுலபமான முறைகளைத் தெரிந்து கொண்டு அவற்றைக் கையாண்டு நெருக்கீட்டுத் தாக்கங்களைக் குறைத்துக் கொள்ளவும் அல்லது பாதிப்புக்களில் இருந்து குணமடையவும் ஆன வழிவகைளை தேடிக்கொள்ள முடியும்.

இங்கே நெருக்கீடு என்று குறிப்பிடுவது அசாதாரண அதிர்ச்சியையும், மனக்குழப்பத்தையும் உண்டாக்கும் நிகழ்வுகளையே ஆகும்.

இவை மனிதரின் செயற்பாடுகளில், அவர்களது பொது அனுபவத்திற்கும், அவர்களது தாங்கும் சக்திக்கும் இயைபாகும் ஆற்றலுக்கும் அப்பாற் கடந்து அவர்கள் மீது மனத்தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

உள இயக்க ரீதியாக ஒரு நெருக்கீட்டு நிகழ்வானது மனிதரின் மன எண்ணக் கருக்களை வாழ்வியல் பற்றிய மதிப்பீடுகள், விழுமியங்கள், உலக மாதிரிகள் எதிர்ப்பார்ப்புக்கள் நெருங்கிய உறவுகள், தொடர்புகள் போன்றவற்றைச் சிதைத்து நிர்க்கதியான கையறு நிலையை உருவாக்கும். இவ்வாறான அதி தீவிரமான அசம்பாவிதங்கள் மனதில் ஊடுருவி ஆழமாகப் பதிந்து மனவடுக்களை ஏற்படுத்தி வளர்த்துச் செல்லும்.

ஒரு விதத்தில் அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம் எண்ணிலடங்கா மனவடுக்களை அனேகமாக ஏல்லோரும் ஏதோவொரு விதத்தில் ஆழமாகக் கொண்டே உள்ளனர்.

இன்னொரு வகையில் தமிழ் மக்கள் மத்தியிலான உள்ளகச் செயற்பாடுகள் மூலமும் பல்வேறு நெருக்கீடுகளை அவர்கள் தமக்குள் முகங்கொடுத்து வருகின்றனர் என்பதும் உண்மையே.

அதிலும் குறிப்பாக விடுதலைப் போராட்டத்தில் இளைஞர்கள் இணைந்து கொள்ளத் தொடங்கிய அந்த வேகத்தில் - காலத்தில் பலரும் வீட்டை விட்டுச் சொல்லாமல் போய்க் கொண்டிருந்தனர். இதன் மூலம் பல தாய்மார்கள், தந்தைமார்கள், சகோதரர்கள் என பலரும் நெருக்கீடுகளுக்கு முகங்கொடுத்தனர். பலர் இன்னும் ஆழமான மனத்தாக்கங்களுக்கு உள்ளாகி உளச்சமநிலை குழம்பியவர்களாக உள்ளனர்.

இதற்குமப்பால் விடுதலை இயக்கங்களுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள் பலரை தங்களுக்குள்ளேயே கொலை செய்யும் போக்கில் முடிவுகாணப்படத் தொடங்கின. இதன் நிமித்தமும் சொந்த தோழர்களாலேயே பலர் மனத்தாக்கங்களுக்கும், நெருக்கீடுகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளதையும் நாம் மறந்து விடக்கூடாது.

இயக்க அழிப்புக் காலத்தில் பலர் வேட்டையாடப்பட்டதை நேரில் பார்த்த பலருக்கு ஏற்பட்ட குழப்பங்களும், தாக்கங்களும் கூட பலரை மனவடுக்கள் உள்ள நோயாளிகளாக மாற்றியுள்ளதனையும் நாம் மறக்க முடியாது.

இவ்வாறாக விடுதலைப் போராட்டம் என்ற அடிப்படையில் நம்மவர்களாலேயே நம்மவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளும், தாக்கங்களும் கூட, அவ்வளவு குறைந்தவை அல்ல.

மொத்தத்தில் தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம் குறித்து சிந்திப்பவர்கள் மேற்குறித்தவற்றையும் கவனத்திற் கொண்டு தான் ஆகவேண்டும்.

ஒரு சமூகத்தின் இருப்பு உத்தரவாதப் படுத்தப்படுவதும், அவர்களது உரிமைகள் இறைமைகள் பாதுகாக்கப் படுவதும் எவ்வளவு முக்கியமோ அந்தளவிற்கு அந்த சமூகத்தின் - மனிதர்களின் உள ஆரோக்கியம் பேணப்படுவதும் முக்கியம் ஆகும்.

இன்றைய யுத்த நெருக்குதல்களின் தாக்கத்தால் சூழல்காரணிகளும் மனித குணாதிசயங்களும், ஆளுமை இயல்புகளும் ஒன்றுடனொன்று உள்ளாட்டம் புரியும் போதும் உண்டாகும் உடன் விளைவுகள் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

இவ்வகையான விளைவுகள் சாதாரண எதிர்த் தாக்கங்களாகப் பிரதிபலித்து பின்னர் எவ்வாறு நோயியல் வலுவூட்டம் பெறுவதன் மூலமாக ஒருவரை மனநோய் நிலைக்கு இட்டுச் செல்லமுடியும் என்பதற்கான சான்றுகளை நிறையவே தமிழ் மக்கள் மத்தியில் நாம் காணலாம்.

நாம் எதிர்காலச் சந்ததியினரின் தோள்களில் நிறைய சுமைகளை சுமத்தி விட்டோம். அவர்கள் தம் உள ஆரோக்கியம் சம்பந்தமாக சந்திக்கவிருக்கும் இன்னல்களுக்காக இடர்பாடுகளுக்காக நம்மைத் திட்டித் தீர்த்துக் கொள்ளப் போகிறார்கள். அவர்களை பல்வேறு ரீதியிலான நெருக்கீட்டுச் சவால்களை எதிர்கொண்டு சமாளிக்கக் கூடிய திறன்கள் வாய்க்கப்பெற்றவர்களாக இப்பொழுதிலிருந்தே தயாரிக்க வேண்டிய தேவை ஒன்றும் எம்முன் உள்ளது.

யுத்தம் முடிந்தவுடன் இவற்றையெல்லாம் பார்க்கலாம், தீர்க்கலாம் என்ற மனப்பான்மையில் இருந்து முதலில் நாம் விடுபட்டாக வேண்டும். இல்லாவிட்டால் யுத்தத்தின் பின்னர் வரும் தமிழ்ச் சமூகம் முழுவதும் எதற்குமே தயாரில்லாத பொறுப்பாக இயங்க முடியாத ஓர் அங்கவீனச் சமூகமாற்றம் உளச்சமநிலை குழம்பிய மனநோய்ச் சமூகமாகவும் தோன்றுவதை தடுக்க முடியாது போய்விடும்.

ஆகவே நீண்டகால நோக்கிலான தமிழ்ச் சமூகம் பற்றிய அக்கறையின் நிமித்தம் நமது கவனங்களைக் குவித்துச் செயற்படுவதும், இவை பற்றிய விழிப்புணர்வுகள் அனைத்து சமூக மட்டத்திலும் இயக்க ரீதியில் முன்னெடுக்கப்படுவதும் அவசியமாகும். ○

# ஒளி படைத்த....

எனக்கு என்னிலேயே வெறுப்பாக இருந்தது.

அவனை இவ்வளவு நேரமும் விருப்பா வெறுப்பா என்று அறியமுடியாமலேயே தவிக்க வைத்து முகம்வாடி சலித்துப் போக வைத்ததில் உனக்குத் திருப்தி தானே என்று மனம் கேட்டது.

தலை சுற்றிக் கொண்டு வருவது போல் இருந்தது. பஸ்ஸில் வந்த எல்லாருமே போய்விட்டார்கள். நான் மட்டும் நிண்டு கொண்டிருக்கிறேன். பேசாமல் நடந்தேன். எங்கே நடக்கிறேன் எண்டில்லாமல். திரும்பிப் பார்த்தேன். அவன் தன்னுடைய நண்பனுடன் ஏதோ கதைத்துக் கொண்டு என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான். நான் அழக்கூடாது என்று மனதைக் கட்டுப்படுத்துகிறேன். பாக் பாரமாக இருக்கிறதா என்று யாரோ ஒருவன் கேட்கிறான். இன்னும் யாரோ எல்லாம் ஏதேதோ எல்லாம் சொல்கிறார்கள். எனக்கு எதுவுமே முழுமையாக விளங்கவில்லை. அவற்றைக் கேட்கும் நிலையிலும் நான் இல்லை. என்னைக் கடந்து எனக்குப் பிடித்தமான அழகர்கள் எல்லாம் போகிறார்கள். எனக்கு இந்த உலகம், என்னுடைய ரசனை என்னுடைய ... எல்லாமே வெறுப்பாய் இருந்தது. வந்து பஸ் ஸ்ராண்டில் நின்றேன். பஸ்ஸில் ஏற மனம் இல்லை. திரும்பிப் போய் அவனை பார்ப்பமா என்று மனம் கேட்கிறது. சீ, வேண்டாம். பஸ்ஸிலை அவ்வளவு தூரம் என்னைப் பார்த்தவன். என்னிடம் எதையோ சொல்வதற்காக எவ்வளவு தரம் வாயெடுத்தவன். அவன் எதையோ சொல்ல வாயெடுக்கும் போது நான் முகத்தை திருப்பியதும் சலித்துப் போனவனைப் போல் இருந்தவன். அவனை எனக்குத் தெரியாது என்று சொன்னவுடன் ஒரேயடியாய் முகம் வாடிப்போனவன். எல்லாமே வேண்டாம் என்பதைப் போல அவ எல்லாத்தையும் மறந்திருப்பா என்று எதற்காகச் சொன்னான். என்னிலை ஏதாவது கோபம் வந்திருக்குமா? அவன் ஏன் எதையுமே சொல்லாமல் போனான். எனக்கு உண்மையிலேயே அவனைப் பார்க்கிறதுக்கு தைரியம் இல்லை. முதன் முதலா நான் அடிமைப்பட்டுப் போனதா உணர்ந்தேன். அந்தக் கண்கள் என்னை அடிமை செய்தன.

நான் போவதற்கான பஸ் வந்தது. சீறும் இருந்தது ஏறிக்கொண்டேன். சீறில் இருந்தேன். எனக்கு முன்னால் சீறில் இருந்தவன் என்னைத் திரும்பிப் பார்த்தான். எனக்கு அவன் பார்ப்பதே பிடிக்கவில்லை. இங்கை என்ன இருக்கு எண்டு மனதிற்குள் திட்டினேன். பார்க்கிற இடமெல்லாம் அந்தக் கண்கள் மட்டும்தான் தெரிந்தது. மனம் தனக்குள்ளையே ஏதோ அழுவது போல் இருந்தது.

நான் எனக்குள் யோசித்தேன். அவன் பஸ்ஸிற்குள் வரும் போது என்னைப் பார்த்து என்ன சொல்ல வாயெடுத்திருப்பான்.

நான் வேறு திசையில் பார்த்ததும் உதட்டைக் கடித்துக் கொண்டது எதற்காக? ஏன் என்னை நடுவழியில் விட்டிட்டுப் போனான். அவனுடைய வெற்றிக்கு நான் இடம் கொடுக்கவில்லை என்பதாலா?

ஒருவேளை அவன் சொல்ல வாயெடுக்கும் போது நான் அவனைப் பார்த்திருந்தால், அவன் ஐ லவ் யூ என்று சொல்லியிருப்பான். அப்படி அவன் சொல்லியிருந்தால் நான் சந்தோசப்பட்டிருப்பேனா!? எல்லாமே குழப்பமாய் உள்ளது போல் இருந்தது.

பஸ்ஸை விட்டு இறங்கி வீட்டைநோக்கி நடந்தேன். எப்படி வந்தேனோ தெரியாது. அவ்வளவு விரைவாக வந்தேன். வந்து பாக்கை எறிந்து விட்டு அறைக் கதவைத் தாளிட்ட பின்பு தான் அந்த கண்களின் முழுமையான தாக்கத்தை உணர்ந்தேன். அழுதேன், விம்மி விம்மி அழுதேன். எதற்கான என்னைப் பார்த்தாய்? எதைச் சொல்ல நினைத்தாய்? எதனால் என்னில் வெறுப்படைந்து போனாய்? எனக்கு எதற்குமே பதில் தெரியாது. மனதில் இருந்த வெம்மல் எல்லாம் இறங்கும் வரை அழுது தீர்த்தேன். களைப்படைந்து சோர்ந்து போனேன்.

கண்ணாடியில் முகத்தைப் பார்த்தேன். அவனுடைய கண்கள் தான் தெரிந்தது.

அவன் உதட்டைக் கடித்துக் கொண்ட விதம் மனதை என்னவோ செய்தது. நான் என்னையறியாமலேயே சிரித்தேன். ரொம்பஅழகானவன்நீ எண்டும் சொல்லிக் கொண்டேன்.

நீ என்னை எங்கே சந்தித்திருப்பாய்? எப்படி என்னைத் தெரியும் எண்டு சொன்னாய்? அதையாவது நீ சொல்லி விட்டுப் போயிருக்கலாம். உன்னை நான் அறிந்து கொள்ள முடிந்திருக்கும். இதற்கு முதல் உன்னை எங்குமே கண்டு கொண்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. எவ்வளவு தான் யோசித்தும் என்னால் அதைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. இந்நகரத்துக்குள் காணாமல் போன உன்னை இனி எங்கு தான் தேடிக் கண்டுபிடிக்க முடியும். அது சாத்தியமற்றது.


நீ என்னை வெற்றி கொள்ளவில்லைத். தான். ஆனால் நான் உன்னிடம் தோற்றுத் தான் போனேன். என் தோல்வியை ஒப்புக் கொண்டு சொல்கிறேன்.

எனது ரசனைகள், ஆசைகள் எல்லாவற்றுக்கும் அப்பால் நீ அழகானவன். என்னை ஆகர்சித்த கண்களைக் கொண்ட உன்னை நான் காதலிக்கிறேன். இந்த வார்த்தை கூட என்மனதில் உள்ளவற்றை வெளிப்படுத்த துளியளவும் போதுமானதல்ல என்பதை நீ என்னை சந்தித்தால் உணர்வாய்.

அதுக்குப் பிறகு வந்த நாட்களில் எல்லாம் என்னையறியாமலேயே அவனை நினைத்துச் சிரித்துக் கொண்டேன். சிரிப்பின் உச்சக்கட்ட இயலாமையில் வெம்மலாய் இதயம் வெடித்து அழுவதைப் போல் அழுதேன். அவன் என்னை விட்டுப் போன காட்சி மட்டும் மனதை நெருடிக்கொண்டே இருக்கிறது. ○

இலக்கியப் படைப்பு:

# தனக்கான பாதையையும் தானே போடும் கவசவண்டி!!



சரிநிகர் இதழில் ரஞ்சகுமார் அவர்கள் விஷ்ணுபுரம் பற்றி எழுதியிருந்த விமர்சனம் படித்தேன். இவ் விவாதங்களில் ஈடுபட நான் விரும்பவில்லை. இலக் கியப்

படைப்பை படைப்பாளியின் தனிப்பட்ட ஆளு மையுடன் இணைத் துக் கொள்வது ஒரு வழக்கமாக உள்ள, தமிழ்ச் சூழலில் படைப் பாளி படைப்பு பற்றிக் கூறும் எந் தக் கருத்தும் படைப்பைப் பாதிப்பதாகவே அமையும். எனினும், இந்தச் சூழலை முன் வைத்து படைப்பு வாசிப்பு பற்றி சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். வேறு எவரேனும் இவற்றை எழுதுவார்கள் என்று காத்திருந்த பிறகு தான் நான் இதை எழுதவேண்டுமென உணர்ந்தேன்.

இலக்கியப் படைப்பை ஒரு குறிப்பிட்ட வகையில் பார்க்க நாம் பயிற்றுவிக்கப் பட்டுள்ளோம். இலங்கைச் சூழலில் கைலாசபதியை முதல்வராகக் கொண்ட ஒரு விமர்சன மரபு இப் பயிற்சியை விரிவான அளவில் இளைய தலைமுறையில் நிறுவியுள்ளது. இவ் அணுகுமுறையின் பிரதான கூறுகளை கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்.

1. இலக்கியப் படைப்பு என்பது அப்படைப்பாளியின் ஆளுமையின் ஒரு வெளிப்பாடு ஆகும்.
2. இலக்கியப் படைப்புக்கு ஓர் அரசியல் நிலைப்பாடு உண்டு. அந்த நிலைப்பாடு அந்த ஆசிரியரின் நிலைப்பாடே.
3. இலக்கியப் படைப்பை தர்க்க பூர்வமாக பகுத்து ஆய்வதே சிறந்த வாசிப்பு. அம்மாதிரியான பகுப்பாய்வினூடாக படைப்பின் அரசியல் நிலைப்பாட்டை அறிந்து அந்நிலைப்பாடு வாசகனுக்கு உகந்ததா என்று பார்க்க வேண்டும்.
4. சரியான நிலைப்பாட்டை விரிவாகவும், முழுமையாகவும் முன்வைப்பது சிறந்த இலக்கியப் படைப்பு ஆகும்.

துரதிஷ்டவசமாக இந்த அணுகுமுறை இலக்கியப் படைப்புக்கும் பிற எழுத்து முறைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் பொருட்படுத்தவில்லை. இலக்கியத்தின் 'அழகு'களும், 'நயங்'களும் முழுக்க அது முன்வைக்கும் ஓர் அரசியல் நிலைப்பாட்டை வாசகனிடம் கொண்டு சென்று சேர்க்கும் உத்திகள் மட்டுமே என்று அது கருதுகிறது. இதையே யாந்திரீகவாத அணுகுமுறை என்கிறோம். இவ்வணுகுமுறையின் மூலவரான கைலாசபதி தன் வாழ்நாள் முழுக்க தூக்கிப்பிடித்த ஒரு படைப்புக் கூட இலக்கிய ரீதியான முக்கியத்துவத்தைப் பெறவில்லை. இன்று தமிழகத்தில் கடந்த முப்பது வருடங்களாக யாந்திரீகவாத அணுகுமுறையை முன்வைத்தவர்கள் தங்கள் அணுகுமுறைகளை மறுபரிசீலனை செய்யும் நிலை உள்ளது. ஆனால், ரஞ்சகுமாரின் கட்டுரையில் அதே யாந்திரீகவாத அணுகுமுறை தான் உள்ளது. அவர் தன் கட்டுரையின் துவக்கத்தில் அதற்கு எதிராகப் பேசிய போதிலும் கூட.

இலக்கியப் படைப்பின் தனித்தன்மையை முதலில் நாம் அங்கீகரிக்க வேண்டும். இலக்கியப் படைப்பு நமது போதமனதுடன் (Conscious) உரையாடுவதல்ல. நமது அபோத மனதிடம் (Subconscions) உரையாடுவது. அதற்கு அது படிமங்களைப் பயன்படுத்துகிறது. மொழியைப் படிமங்களின் அடுக்காக அது மாற்றி விடுகிறது. பிறவகை வெளிப்பாடுகளில் உள்ள மொழி ஒரு குறிப்பிட்ட சூழலில் திடமாக அர்த்த நிர்ணயம் செய்யப்பட்டது. இலக்கியப் படைப்பின் மொழிக்கு ஒரு நிலையிலும் திடமான அர்த்த நிர்ணயம் இல்லை. அதன் சொற்கள் ஒவ்வொன்றும் படிமங்கள். அவை வாசகனின் ஆழ்மனதில் ஏற்படுத்தும் விளைவுகளினூடாகவே இலக்கியப் படைப்பு செயல்படுகிறது. ஆகவே இலக்கியப் படைப்பை தர்க்க பூர்வமாகவும் போதமனதாலும் அணுகுவது என்பது அதை மிகத் தவறாகப் புரிந்து கொள்வதில் கொண்டு சென்று விடும். ஓர் ஓவியத்தை கண்ணை மூடிக் கொண்டு தடவிப் பார்த்து கருத்துக் கூறுவது போன்றதாகும் அது.

இலக்கியப் படைப்பை ஆழ்மனதிற்கு ஊடுருவும் பயணமாகப் பார்க்கும் நவீன விமர்சகர்கள் வாசிப்புப் பற்றிய சில அடிப்படையான கொள்கைகளை முன் வைக்கிறார்கள்.

1. படைப்பு அப்படைப்பாளியின் ஆளுமையின் வெளிப்பாடு அல்ல. அவன் ஒரு ஊடகமே. ஒரு சமூகத்தின், அதற்குமப்பால் மானுடகுலத்தின், ஒட்டுமொத்தமான ஆழ்மனதின் (Collective unconscious) ஒரு வெளிப்பாடு தான் அவனுடைய படைப்பு. C.G. யுங், டி.எஸ்.எலியட் ஆகியோர் சென்ற நூற்றாண்டில் முன்வைத்த இக்கருத்து இன்று நவீன மொழியியலில் பல்வேறு விதமாக வளர்ந்து 'படைப்பாளி இல்லை' (Author is dead) என்று கூறுமளவுக்கு வந்துள்ளது. ஒரு படைப்பாளி குறித்து முன்வைக்கப்படும் எந்தக் கருத்தும், அவனுடைய் வாழ்க்கையும், அவனே தன் படைப்புப் பற்றி கூறும் கருத்துக்களும் எதுவும் வாசகனுக்குப் பொருட்டல்ல. ஓர் இலக்கியப் படைப்பு என்பது ஓர் சொற்களம், (discourse) அதற்குள் உருவாகும் அர்த்தங்கள் மட்டுமே அதற்கு உண்டு. நமது இலக்கியச் சூழலில் இது பலகாலமாக பேசப்பட்டும் கூட நம்மால் இத்தகைய வாசிப்புக்கு நம்மைத் தயாரித்துக் கொள்ள முடியவில்லை. படைப்பாளியின் முகம் படைப்பிற்கும் நமக்கும் நடுவே வந்து நிற்கிறது.

2. தர்க்க மனதிற்குத் தட்டுப்படும் படைப்பின் பகுதிகள் தவிர்க்க முடியாத உப அம்சங்களே. படைப்பின் பாதிப்பு நம் ஆழ்மனதில் நிகழ்கிறது. விமர்சனம் என்பது அந்த ஆழ்மன பாதிப்பை தர்க்கபூர்வமாக வகுக்கும் முயற்சி தான்.

3. ஆழ்மனதைப் பாதிக்கும் இலக்கியப் படைப்பு ஒரு போதும் ஒற்றைக் குரல் ஒலியாக இருக்காது. ஒன்றையொன்று ஊடுருவும் பல்வேறு குரல்களின் பெரும்வலையாக அது இருக்கும். ஏனெனில், ஆழ்மனம் அப்படிப்பட்டதாகும். இதை பலகுரல் தன்மை (Pohiphony) என்று நவீன விமர்சனம் கூறுகிறது. ஒரு படைப்புஅதன் தர்க்க தளத்தில் வெளிப்படையாகவே ஒரு கருத்தை வலியுறுத்தலாம். அதன் ஆசிரியர் அந்நோக்கத்திற்காகவே அதை எழுதியிருக்கலாம். ஆனால், அது படைப்புத்தன்மை பெறும் போது அக்கருத்தையே மறுத்துக்கூட நகரக்கூடும்.

4. பல்வேறு விதமான, முடிவற்ற, வாசிப்புக்கு இடமளிப்பதே சிறந்த இலக்கியப் படைப்பாகும்.

விஷ்ணுபுரம் என்ற சொற்களனுக்குள் பல்வேறு வகையான படிமங்கள் உள்ளன. வழமையான படிமங்கள், மாற்றியமைக்கப்பட்ட பழம் படிமங்கள், புதுப் படிமங்கள். இவை ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று ஊடுருவித் தொடர்ந்து மாறுகின்றன. விஷ்ணு எனும் படிமம் மட்டும் இந்நாவலில் எத்தனை விதமாக ஊடுருவப்படுகிறது என்பதை ஒரு வாசகன் சற்றுக் கூர்ந்து படித்தால் அறியலாம். (நாவலின் ஒவ்வொரு படிமமும் விஷ்ணுவை மறுநிர்ணயம் செய்யக்கூடும்.) இவற்றை கவித்துவப் படிமங்களாகக் காணாமல், திட்டவட்டமான அர்த்தம் உள்ள உருவங்களாக அணுகும் ஒருவர் விஷ்ணுபுரத்தின் பல தளங் களைத் தவறவிடக் கூடும். காரணம் விஷ்ணுபுரம் பெரும்பாலும் கவித்துவ குறிப்புணர்த்தல் (Poetic Suggessions) மூலம் செயற்படக் கூடிய ஒரு நாவல்.

விஷ்ணுபுரம் பல்வேறு கோணங்களில் வாசிக்கப்படலாம். வரலாற்று ரீதியாக, சமூகவியல் ரீதியாக, தத்துவ ரீதியாக, அரசியல் ரீதியாக. அதை யாரும் மறுக்க முடியாது. அவ்வாசிப்புகளுக்கு அது ஈடுகொடுக்கும் என்று தான் படுகிறது. அரசியல் ரீதியான வாசிப்பிற்கும், அரசியல் நிலைப்பாடுகளுக்கு ஏற்ப நாவலை தன்னை நோக்கிச் சுருக்கிக் கொள்வதற்கும் வித்தியாசம் உண்டு. முன்னதில் உள்ள தேடல் பின்னதில் இல்லை. முன்முடிவுக்ள் எதுவும் படைப்பைத் தடுக்கும். முன்னுரையில் கூறப்பட்டது இதுவே.

உகந்த வாசிப்பு இதுவே என தன் படைப்புப் பற்றி ஒரு படைப்பாளி கூற முடியாது, ஆனால், விஷ்ணுபுரத்தின் ஒரு வாசகன், விமர் சகன் என்ற முறையில் நான் சில விஷயங்க ளைக் கூறலாம். தகவல்களைத் தவறவி டாது கூர்ந்து வாசிப்ப தையும், படிமங்களை முழுமையான கற் பனை வீச்சுடன் விரிவு படுத்துவதையும் நவீன விமர்சனம் பெரிதும் வலியுறுத்துகிறது. தமிழில் கணிசமான வாசகர்கள் இவ்விரு தளங்களிலும் பிழைகள் செய்கிறார்கள்; ரஞ்சகுமாரும். நாவலின் இறுதியில் வேததத்தனின் மறைவு பற்றிய கவித்துவக் குறிப்புணர்த்தலை அவர் நேர்ப்பொருளில் எடுத்துக் கொண்டிருப்பதும் அதன் அடிப்படையில் நூலையே மதிப்பிடுவதையும் காணலாம்.

ஒவ்வொரு இலக்கியப் படைப்பும் அதுவரை இருந்ததிலிருந்து சற்று மாறுபட்ட வாசிப்பு முறையைக் கோருகிறது. விஷ்ணுபுரம் மிக விரிவான அளவில் அதை அவசியமாக்குகிறது. ஆனால், விமர்சகர்கள் பழகிப்போன அளவுகோல்களையே இதன்மீது போடுகிறார்கள்.

ரஞ்சகுமாரின் அணுகுமுறையின் இன்னொரு பிரச்சினை அவர் பார்வையில் உள்ள உடனடித்தன்மை. சமகால அரசியல் செய்தி ஒன்றை அணுகும் அதே பாணியில் அவர் விஷ்ணுபுரத்தையும் அணுகுகிறார். உயிரினும் மேலாக நம்பி வந்த அரசியல் நிலைப்பாடுகளை பத்தாண் டுகளுக்குள் நேர்மாறாக மாற்றிக் கொள்வது இலங்கை போன்ற சூழலில் இருப்பவர்கள் பலருக்கு அனுபவமா க இருக்கலாம். இலக்கியப் படைப்பு சகஜமாக சில நூறு வருடங்ளைத் தாண்டும் என்பது கண்கூடு. அரசியல், சமூகவியல், கலாசார சூழல்கள் அனைத்தும் அபத்தமாகத் தோன்றுமளவு பழைமை கொண்ட பிறகும் இலக்கியப் படைப்பு வாழும். ஏன் சில சமயம் புதிதாகப் பிறந்த படியே இருக்கவும் கூடும். இந்நிலையில் ஓர் இலக்கியப் படைப்பை அன்றாட அரசியல் பின்னணியில் 'முழுமையாக' ம்திப்பிடுவது அதுவும் நான் மதிக்கும் படைப்பாளியான ரஞ்சகுமார் போன்ற ஒருவர் செய்வது, வியப்புத் தருகிறது.

எத்தனை தான் புதிய விமர்சனக் கருத்துக்கள் வந்தாலும் வாசகனின் விமர்சன அணுகுமுறை மாறப்போவதில்லை என்பது இப்போது தெரிகிறது. படைப்புகளே அதை மாற்ற முடியும். புதிய புதிய விமர்சன முறைகளை முன்வைத்துப் பேசியவர்களே தமிழகத்தில் மிக சம்பிரதாயமான தனிநபர் சார்ந்த அணுகுமுறையுடன் இந்நூலை விமர்சிப்பது காணக் கிடைக்கிறது. இலக்கியப் படைப்பு கவசவண்டி (டாங்க்) போன்றது போலும். தனக்குரிய சாலையையும் தானே போட்டபடி அது முன்னேற வேண்டியுள்ளது; பலவற்றை இடித்துத் தள்ளி பல பள்ளங்களை நிரப்பி. ஏற்கெனவே தயாராக உள்ள ரசனை முறையில் கச்சிதமாக பொருந்தும் ஒரு படைப்பு உண்மையில் முக்கியமானதல்ல.

***ஜெயமோகன்,***
***தமிழ்நாடு, இந்தியா.***




மூன்றாவது மனிதன்
எம்.பௌசர்,
27, ஏ.வீ.வீ வீதி,
அக்கரைப்பற்று-02
(32400)
இலங்கை.

தொலைபேசி 01-424187
விலை 50.00ரூபா

1996 (மே - ஜூன்)ல் தனது முதலாவது இதழ் மூலம் சிறு சஞ்சிகை உலகில் காலடி வைத்த மூன்றாவது மனிதனின் ஐந்தாவது இதழ் (செப்.-ஒக்.) வெளிவந் துள்ளது.

*உமாவரதராஜன்* (குட்டிக்கு), *தியாகசேகரன்* (வன்மப்படுதல்), *ஓட்டமாவடி அறபாத், ஆகர்ஷியா, சோலைக்கிளி* (உன் உள்ளம் என்ற துணியை), *றஷ்மி* (மலர்களின் பெயரால்) ஆகியோரின் கவிதைகளும், *சி.ஜெய்சங்கரால்* மொழி பெயர்க்கப்பட்ட கன்னடக் கவிஞர் *கே.எஸ். நரசிம்ம சுவாமியின்* 'ஏழு நிற வண்ணாத்துப் பூச்சி' என்கிற கவிதை யும் இடம் பெற்றுள்ளன.

*ஆழியாள், அம்ரிதா ப்ரீதத்தின்* கதையொன்றை 'நாற்றம்' என்ற தலைப்பில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார்.

இதழில் இடம் பெற்றுள்ள *மு.பொன்னம்பலத்தின்* நேர்காணலில், வாழ்வின் பல தளங்களைப் பற்றிய தனது பார்வையை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார் மு.பொ.

"இந்தப் பூமியில் இவர்களுக்கு இடையில் எதுவும் வரமுடியாது" என்று 'டைட்டானிக்' திரைப்படம் பற்றி

*எம்.பௌஸரும்*, 'ரியலிசம், சோசலிஸ்ட் ரியலிசம், மார்க்சிசம் ஒரு விமர்சனத் தலையீடு என்ற *கா.சிவத்தம்பி*யின் கட்டுரையும், 'அழகு, அழகுராணிப் போட்டிகள் பற்றிய கட்டுக் கதைகள்' என்ற *சந்தியா*வின் கட்டுரையும்,

'சினிமா பெண் உளவியல்' என்ற *கொ.றொ. கொன்ஸ்ரன்ரைனின்* மொழி பெயர்ப்புக் கட்டுரையும், இன்னும்,

'மறுமலர்ச்சிக்காலம்: தோற்றப் பின் புலமும், சிறுகதைகளும், என்ற *தெ.மதுசூதனனின்* கட்டுரையும் இடம் பெற்றுள்ளன. மதுசூதனின் கட்டுரை மறுமலர்ச்சிக் காலம் பற்றிய கேள்விகளை எழுப்பி, பல தெளிவுகளையும் முன் வைக்கிறது.

புத்தகப் பக்கத்தில் *கே. எஸ். சிவகுமாரனின்* 'அண்மைக்கால ஈழத்து சிறுகதைத் தொகுப்புகள்' என்ற நூல் பற்றியும், *விபவி* வெளியிட்டுள்ள இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பாகிய 'ஈழத்து சமகால தமிழிலக்கியம்' என்ற நூலைப் பற்றிய குறிப்பும் பதிவாகியுள்ளது.

கருத்துக்கள் கடிதங்கள் பகுதிக்கு *சி. விதுல்யன்* (கிளிநொச்சி), *நட்சத்திரன் செவ்விந்தியன்* (அவுஸ்திரேலியா) ஆகியோர் எழுதியுள்ளனர்.

-ராசாத்தி

# ஒரே ஒரு கேள்விக்கான சுரேஸின் பதில் !

சரிநிகர் 151வது இதழில் எழுவான் என்பவரால் எழுதப்பட்ட 'ஒரே ஒரு கேள்வி'' கடிதம் கண்டேன். எனது கருத்துக்கள் யாராவது ஒரு சிலரை சிந்திக்கத் தூண்டுகிறது என்பதில் மகிழ்ச்சியே.

''5.7.98 அன்று காலை இலங்கை வானொலியின் வாரம் ஒரு வலம் என்ற நிகழ்ச்சியில், யாழ் நகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன் அவர்கள் கொலை செய்யப்பட்டதை மக்கள் கண்டிக்க முன்வரவில்லை'' என்று நான் கூறிய கருத்தே எழுவான் அவர்களை எழுதத் தூண்டியுள்ளது. என்னுடைய கேள்வியில் உள்ள நியாயத்தை ஏற்றுக் கொள்ளும் அவர், அது தொடர்பாகப் பின்னர் ஒரு வரிதானும் குறிப்பிடாமையானது, இப்படியான கொலைகளை அவர் உண்மையாகவே வெறுக்கின்றாரா? என்ற சந்தேகங்களையே எனக்குள் தோற்றுவித்தது.

பரவாயில்லை. இப்படியான கொலைகளை அவர் ஏற்றுக் கொள்ளவில்லையென்றே என்றே எடுத்துக் கொள்வோம். அவரது தொடரும் கடிதத்தில் 10 வருடத்துக்கு முன்னைய ஈ.பி.ஆர்.எல்.எப்பின் செயற்பாட்டையே அவர் விமர்சித்திருந்தார். அதிலும் கூட தனக்கேற்பட்ட இரண்டு சம்பவங்களை வெகு சிறப்பாகவும், சுவாரஸ்யமாகவும் அழகான கதையாகவும் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். ஒன்று இந்தியப்படை அவர்களைக் கட்டி வைத்து அடித்த பொழுது, புலிகள் இந்தியப் படையுடன் யுத்தம் செய்யக் கூடாது என்று நீங்கள் ஏன் கூறவில்லை என்று எமது தோழர்கள் தன்னிடம் கேட்டதாகவும், மற்றையது மானிப்பாயில் ஆஸ்துமா நோயாளியான அவரது தந்தை இறக்கப்பட்டுச் சோதிக்கப்பட்டதும், ஈ.பி.ஆர்.எல்.எப். விட்ட இரு தவறுகள் எனக் குற்றம் சாட்டியுள்ளதுடன், இப்படியான உங்களுக்கு கொலைகளைக் கண்டிக்க என்ன யோக்கியதை உண்டு என்ற கேள்வியையும் மறைமுகமாக எழுப்புகின்றார்?

ஏறத்தாழ இவ்வாறான ஓர் கேள்வியை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் சஞ்சீவி என்ற பத்திரிகையும் கேட்டு அதற்கான பதிலையும் நான் எழுதியிருந்தேன். ''எழுவான்'' அதை வாசித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளதால் ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் எழுத வேண்டுமென்ற அவசியமில்லை. இருப்பினும் என்னை நோக்கிய அவரது கேள்விக்கு நான் சுருக்கமாகவேனும் பதில் கூற விரும்புகின்றேன்.

முதலாவதாக, இந்திய இராணுவத்துடன் புலிகள் யுத்தத்துக்குப் போனதானது, முழுத்தமிழ் மக்களுக்கும் பாதகமான செயல் என்றே அன்றும் நம்பினோம். இன்றும் நம்புகின்றோம். புலிகள் கூட இந்தியத் தலையீட்டினால் உருவாக்கப்பட்ட மாகாண சபையை ஏற்றுக் கொண்டு முழுமையான அதிகாரத்துக்காகத் தொடர்ச்சியான ஜனநாயகப் போராட்டத்தை நடாத்தி இருக்கலாம். அது உலக நாடுகளின் ஆதரவை எமக்குப் பெற்றுக் கொடுத்திருக்கும். ஆனால், புலிகள் மாறாக, எமக்கு உதவி செய்ய வந்த இந்தியப் படையுடனே அனாவசிய யுத்தத்தில் குதித்தார்கள். இந்நிலைமையில் இந்திய - இலங்கை ஒப்பந்தமானது ஓர் முழுமையான ஒப்பந்தமாக இல்லாதிருந்த பொழுதும் கூட அதனை ஓர் இடைக்காலத் தீர்வாக ஏற்றுக்கொண்டு, வட - கிழக்கில் மாகாண சபையை அமைக்கும் முயற்சியில் இறங்கினோம். புலிகள் இதனை முழுமையாக எதிர்த்தார்கள். இதனை ஏற்றுக் கொள்பவர்கள், அவர்களின் பாசையில் துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டார்கள்.

இவ்வகையில் ஈ.பி.ஆர்.எல்.எப். இன் 600க்கு மேற்பட்ட தோழர்கள் இவர்களால் அன்று கொலை செய்யப்பட்டார்கள். அச்சூழ்நிலையில் எம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் புலிகளுக்கெதிராக நாம் செயற்பட்டோம் என்பது உண்மையே. அந்த நேரத்தில் அது சரியான முடிவென்பதை இன்றும் நாம் நம்புகிறோம். ஆனால் இச்செயற்பாட்டில் பல தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை நாம் மீண்டும் மீண்டும் கூறியுள்ளோம். அப்படி நாம் ஏற்றுக் கொள்வது என்பது எம்மை நாம் திருத்திக் கொள்ளவும், எமது தோழர்கள் அப்படியான தவறுகள் விடக்கூடாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவும் உதவும் என்பதுடன், எமது நிலைப்பாட்டைப் பொது மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது எமது கடமை என்பதாலேயே இதனை நாம் வெளிப்படையாக மக்களுக்குக் கூறுகின்றோம்.

எம்மைப் பொறுத்தவரையில், இன்று நடக்கும் யுத்தமும் சரி, கொலைகளும் சரி தேவையற்றவை என்பதுடன், இவை நிறுத்தப்படவும் வேண்டுமென்றே விரும்புகிறோம். அது மாத்திரமல்ல, இன்னும் பல இழப்புகளுக்குப் பின்பும் நாம் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள்ளேயே தீர்வு காணப் போகின்றோமே அல்லாமல் நடக்கும் யுத்தமும் தனிநாட்டைப் பெற்றுத் தந்துவிடாது என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. இந்நிலையில் இப்படியான அநாவசியமான கொலைகள் தேவையா என்பது தான் எமது கேள்வி?

இது ஒரு புறமிருக்க யாழ்ப்பாணத்தில் இருக்கும் சிறீலங்கா இராணுவம், முதியோரை இறக்கிச் சோதிப்பதில்லையென்றும், பிரேமதாச பதவிக்கு வந்தபடியால் ஈழத் தமிழர் தப்பிப் பிழைத்தனர் என்றும், இன்னுமோர் கருத்தையும் கூறியுள்ளார். அத்துடன் வட - கிழக்கு மாகாண சபையால் எதைச் சாதிக்க முடிந்தது? 16,000 வெற்றிடங்கள் உள்ளன, நிரப்ப முடிந்ததா? அகதிகள் நிர்க்கதியாக உள்ளார்கள். இவர்கள் யாழ். செல்லக் கப்பலைத் தான் ஏற்பாடு செய்ய முடிந்ததா என்ற கேள்வியையும் எழுப்பியதன் மூலம், இப்படியான மாகாண சபையால் என்ன பிரயோசனம் என்பதையும் கேட்டுள்ளார்.

முதலாவதாக, வடக்கு - கிழக்கில் மாத்திரமல்ல, தெற்கிலும் கூட இராணுவம் என்ன செய்கின்றதென்பது முழு மக்களும் அறிந்த விடயம். அதேசமயம் யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவம் எழுவான் கூறுவது போன்று சிறப்பாகச் செயற்பட்டால் அது வரவேற்கக் கூடியதே. ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எப்பைக் கொச்சைப்படுத்த வேண்டும், கேவலப்படுத்த வேண்டும் என்பதற்காக சிறீலங்கா இராணுவத்தை அதீதமாகப் புகழ்ந்தும், பிரேமதாசா அரசைத் தமிழ் மக்களின் காப்பாளனாகக் காட்ட முயல்வதும், எழுவானின் அறியாமையை மாத்திரமல்ல, தமிழ் மக்களுக்கு உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை பரப்ப முனையும் அவரின் கபடத்தனத்தையும் தான் காட்டுகின்றது.

இவர்கள் எழுதும் எழுத்துக்கள், நிச்சயமாக மக்கள் மத்தியில் சரியான சிந்தனையை உருவாக்காது. பிரேமதாசா வந்ததால் தமிழ் மக்கள் தப்பிப் பிழைத்தனர் என எழுவான் கூறுகின்றார். அப்படியானால் பின்னர் ஏன் யுத்தம் நடந்தது? அதில் எத்தனை ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள்? இது எப்படி எழுவானுக்குத் தெரியாமல் போனது?

புலிகளும், பிரேமதாசாவும் சேர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எப்பை கொன்றொழித்ததன் மூலம் தமிழ் மக்கள் காப்பற்றப்பட்டார்கள் என்று எழுவான் நம்பினால், 90க்குப் பின்னால் இன்று வரை எத்தனை தமிழ் மக்கள் புலிகளால் கொல்லப்பட்டார்கள், எத்தனை தமிழ் மக்கள் பிரேமதாசா அரசால் கொல்லப்பட்டார்கள்? இன்று வரை இது தொடரவில்லையா? எனவே வாய்க்கு வந்தபடி விமர்சிக்க, வேண்டும் என்பதை விடுத்து நாங்கள் விட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டுங்கள். அதனைப் பூதாகரப்படுத்தாதீர்கள், அது மாத்திரமல்ல நல்ல கருத்துக்கள் என்று நம்பினால் ஏற்றுக் கொள்ளப் பழகுங்கள்.

நான்கு ஐந்து கட்சிகள் இருக்கின்றதெனில், அவர்களுக்கிடையில் உள்ள வித்தியாசங்களை ஆராய்ந்து பாருங்கள். ஒட்டு மொத்தத்தில் எல்லாம் ஒன்று தான் என பிழையான கருத்துக்களைப் தெரிவிப்பதன் மூலம், சரியானவற்றை இணங் காணத் தவறுவதுடன், சரியான கருத்துக்கள் மக்கள் மத்தியில் போகக் கூடாது என்பதில் நீங்கள் தீர்க்கமாக இருக்கின்றீர்கள் என்ற சந்தேகத்தையும் உருவாக்குகின்றது.

மாகாண சபையைப் பற்றியும் அதன் கையாலாகாத்தனத்தையும் எழுதியிருந்தீர்கள். ஏற்றுக் கொள்கின்றேன். அதேசமயம், ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆயிரம் ஓட்டைகள் இருந்தாலும், கடந்த11வருடமாக வடக்குக் கிழக்கு இணைந்த நிர்வாகம் ஒன்று இன்று வரை தொடர்ந்து இருந்து வருகின்றதென்றால் அதற்கு ஈ.பி.ஆர்.எல்.எப். தான் காரணம் என்பதை எழுவான் விரும்பாவிட்டாலும், வரலாறு பதித்துக் கொள்ளும், இரண்டாவது, கடந்த பத்து வருடமாக வடக்குக் கிழக்கு மாகாண நிர்வாகம் தான் இருக்கின்றதே தவிர, மக்களினால் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட மாகாண சபை அல்ல. அது செயற்பட்டிருந்தால் ஏன் வேலை கொடுக்கவில்லை, ஏன் அகதிகளை அனுப்பவில்லை என்று கேட்பதில் நியாயம் இருக்கும். எனவே மாகாண சபையையும், மாகாண நிர்வாகத்தையும் ஒன்றெனநினைத்து உங்களைக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

அதேசமயம் இன்றைய வட - கிழக்கு மாகாண நிர்வாகம் எவ்வாறு ஊழலில் புரண்டெழும்புகின்றது என்பதை நான் சொல்லித் தான் தெரிய வேண்டுமென்பதில்லை. இவ்வளவு சீரழிவுகளுக்குள்ளும் அண்மையில் கூட 1000 பட்டதாரிகளுக்கு மாகாண நிர்வாகத்தினூடாக வேலை கிடைத்தது, (உண்ணாவிரதத்தின் பின்) என்பதைப் பத்திரிகை வாயிலாக அறிந்திருப்பீர்கள்.

இறுதியாக எழுவானிடம் ஒரு கேள்வி. 1983 தொடக்கம் 1987வரை எவ்வளவு பேர் கொல்லப்பட்டார்கள். எவ்வளவு அழிவுகள் ஏற்பட்டன. விஜிதரன் போன்றோர் கொலை செய்யப்பட்ட போது அதற்காகக் குரல் கொடுத்தவர்கள், அதற்கான போராட்டங்களை நடத்தியவர்கள் யார்? பின்னர் 1987இல் இருந்து 1990 மார்ச் வரை மாகாண சபை ஒன்றை அமைக்கும் பணியில் எவ்வளவு பேர் கொலை செய்யப்பட்டார்கள்? எவ்வளவு அழிவுகள் நடந்தன. (தயவு செய்து 1987-88 காலகட்டத்தில் புலிகளுக்கும், இந்திய இராணுவத்துக்கும் நடந்த யுத்தத்தை இதில் சேர்க்காதீர்கள். அதற்கும் ஈ.பி.ஆர்.எல்.எப்பிற்கும் சம்பந்தமில்லை.) இப்பணியில் எமது தோழர்கள் மாத்திரம் 600க்கு மேற்பட்டோர் புலிகளால் கொல்லப்பட்டார்கள். அதன் பின்னர் 1990 இலிருந்து இன்றுவரை எத்தனை ஆயிரம் கொலைகள், அழிவுகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே எந்தக் காலகட்டத்தில் அழிவுகள் துன்புறுத்தல்கள் அதிகமாக நடைபெற்றன என்பதை நீங்கள் உணரலாம். எம்மாலாவது மாகாண சபையை உருவாக்க முடிந்தது. இன்று யுத்தம் புரிவோர் என்னத்தைத் தான் சாதித்துள்ளார்கள்.

ஏற்படப்போகும் தீர்வு எதுவாக இருந்தாலும் ஓர் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள்ளேயே பிரச்சினை தீர்க்கப்படும். எவ்வளவு தான் யுத்தம் புரிந்தாலும், இதனை மீறிப்போக முடியாது என்பதை பூகோளப் பிராந்திய அரசியலைப் புரிந்து கொள்பவர்கள் நன்குணர்வார்கள்.

ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தான் தீர்வென்றால், புலிகள் நடாத்தும், யுத்தமும் அதனால் ஏற்படும் மரணங்களும், அழிவுகளும், ஏனைய இயக்க உறுப்பினர்களைக் கொலை செய்வதும், அர்த்தமற்றது இல்லையா? அது மாத்திரமல்ல, உண்மையான நேர்மையான பேச்சுவார்த்தைக்குப் புலிகள் முன்வரும் இடத்து சிறீலங்கா அரசிடம் பேரம் பேசித் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வலு புலிகளுக்கு இன்னும் இருப்பதாகவே நான் கருதுகின்றேன். ஆனால் புலிகளின் நடவடிக்கைகள், தம்மையும் அழித்து, ஏனைய இயக்கங்களையும் அழித்து இறுதியில் தமிழ் மக்களைச் சிங்கள அரசின் அடிமைகளாக்கும் போக்கையே கொண்டுள்ளது. எவ்வளவு காலத்திற்கு யுத்தம் தொடர்கின்றதோ அவ்வளவு காலத்திற்குத் தமிழ் மக்களின் அழிவுகளும் அதிகரிக்கும். இன்னும் இலட்சக் கணக்கில் மக்கள் அகதிகளாகி வெளிநாடு செல்வர். மிகுதியாக இருப்போர் சிறீலங்கா அரசுக்கு அடிமைகளாகி இருப்பர். இதனைத் தான் சிங்களப் பெருந்தேசியவாதிகள் எதிர்பார்க்கின்றார்கள்.


இன்னொன்றையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் ஈழம் கிடைத்ததும், அல்லது தீர்வு ஏற்பட்டதும் திரும்பி வருவார்கள் என நினைத்தால், அது பிழையான கருதுகோள் என்றே கருதுகின்றேன். இன்று புலிகளுக்கு அவர்கள் பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று இங்கு யுத்தம் நடந்தாலே அவர்கள் அங்கு தொடர்ந்து இருக்க முடியும் என்பதாலேயே. ஆனால், இவற்றைப் புரிந்து கொள்ளாதவர்கள், அல்லது புரிந்து கொள்ள விரும்பாதவர்கள் தான் ஈ.பி.ஆர்.எல்.எப்பின் கருத்தைக் கண்டிப்பார்கள். முக்கியமாக சிறீலங்கா அரசின் யுத்தத்திற்கெதிரான தமிழ் மக்களின் அபிப்பிராயம், சரியான திக்கை நோக்கி முன்னெடுக்கப்பட வேண்டுமே தவிர, அதுவே பிழையான கருத்துக்களையும், பிழையான கொள்கைகளையும் கொண்டவர்களை நியாயப்படுத்துவதாக அமையக் கூடாது.

10 வருடத்துக்கு முன்னர் ஈ.பி.ஆர்.எல்எப்பின் செயற்பாட்டை விமர்சிக்கும் எழுவான், அந்தக் காலத்தில் சுரேஷ் என்ன வெளிநாட்டுக்கா போயிருந்தார்' என்றும் கேள்வி எழுப்புகின்றார். கடந்த 10 வருடமாக என்ன நடைபெற்றது, நடைபெறுகின்றது என்பதைச் சுலபமாக மறந்து விட்ட எழுவான் கடந்த 10 வருடமாகக் கோமாவில் (மயக்கம்) இருந்தாரோ என்னவோ?



க.சுரேஷ் பிரேமச்சந்திரன்,
செயலாளர் நாயகம், ஈ.பி.ஆர்.எல்.எப்




# அபூநிதாலின் கட்டுரைகள் நூலாதல் வேண்டும்

சரிநிகர் 150வது இதழில் அபூநிதால் எழுதிய விளங்கிக் கொள்ளப்பட்டவையும் புரிந்து கொள்ளப்படாதவைகளும் என்ற அரசியல் பத்தி தொடர்பான எதிர்வினை ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. அபூநிதாலின் அப்பத்தி தொடர்பான அரசியல் விமர்சனப் பத்தியாக அவ் எதிர்வினை எழுதப் படாமல் வெறுமனே முஸ்லிம் காங்கிரஸ் எதிர்நிலைப்பாட்டில் நின்று எழுதி அபூநிதாலின் எழுத்துத் தொடர்பான கேள்விகள் புனையப் பட்டுள்ளன.

உண்மையில் சரிநிகர் பத்திரிகையின் வாசகனான நான் முஸ்லிம்கள் தொடர்பாகவும், தமிழ் மக்களின் தேசிய விடுதலை போராட்டம் தொடர்பாகவும், அபூநிதாலின் எழுத்துக்களில் உள்ள நேர்மையையும் உண்மையையும் எப்போதும் ஆழமாய் ஊன்றி படித்து வருபவர் என்ற ரீதியில் இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

அபூநிதால் என்ற அரசியல்பத்தி எழுத்தாளர் உண்மையில் சரிநிகரின் கண்டுபிடிப்புகளில் மிகவும் தீர்க்கமான பத்தி எழுத்தாளர் ஆவார். அதிகமாக முஸ்லிம்களின் அரசியல் தொடர்பாக ஆழமான கருத்துக்களை முன்வைக்கும் அபூநிதாலின் அடிப்படை அரசியல் முஸ்லிம்களின் தேசத்தின் மையமும் நியாயமான தமிழ்த் தேசத்தின் வெற்றியுமாகும் என்பது நான் கண்ட உண்மை.

90களின் பின் உருவான முஸ்லிம் தேச அரசியலின் கருத்தியல் கொண்ட சிந்தனை சக்தி தான் அபூநிதால். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப் கூட இவ் ஸ்தானத்திற்கு உரிமை கொண்டாட முடியாது. அடிப்படையில் எழுத்துக்களை விளங்கிக் கொள்வதற்கு சராசரி அறிவு ஒருவனுக்கு முக்கியமே. அதுவும் அரசியல் பத்தி எழுத்துக்களை விளங்கிக் கொள்வதற்கு ஆழமான அரசியல் விவகார அறிவு இன்றியமையாதது தான். அவ் எதிர்வினையை எழுதிய அறபாத் உண்மையில் அபூநிதாலின் எழுத்துக்களைப் புரிந்து கொள்ள முடியாதது அறபாத்தின் போதாமை தான்.

அவ் எதிர்வினையில் முஸ்லிம் காங்கிரசினதும் அதன் தலைவரினதும் தில்லு முல்லுகளை துரோகங்களை விமர்சித்து வந்த அபூநிதால் அவர்கள், தென்கிழக்கு அலகையையும் அதன் சிருஷ்டிகர்த்தா அஷ்ரஃப்பையும் கரிசனையுடன் ஆதரித்து எழுதுவது வியப்பாக உள்ளது என எழுதியுள்ளார். உண்மையில் அபூநிதாலின் கட்டுரையில் தென்கிழக்கு அலகின் சிருஷ்டிகர்த்தா அஷ்ரஃப் என்று எங்குமே சொல்லப்படவில்லை. அபூநிதாலின் அக்கட்டுரை எழுத்து முஸ்லிம்களுக்கு இன்று சாத்தியப்படக்கூடிய ஆகக்குறைந்த தீர்வு தென்கிழக்கு அலகே என்பதை வலியுறுத்துவதாகவே இருந்தது.

அஷ்ரஃப் என்பவர் முஸ்லிம்களின் அரசியலில் இருந்து ஒரேயடியாக ஒதுக்கி வைக்கப்படக் கூடியவரா? முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் இனத்திற்கு இன்று அவசியமில்லையா? அபூநிதால் தொடர்ந்தும் அஷ்ரஃப்பை விமர்சித்து வந்தால் அறபாத் போன்ற சிறுகுழந்தைகளுக்கு இனிப்பு மிட்டாய் கடையா அபூநிதால் எழுதிவரும் அரசியல் பத்தி? தென்கிழக்கு அலகை பௌசி எதிர்ப்பது ஏனென்று அபூநிதாலிடம் கேட்க வேண்டிய அவசியமில்லை. முஸ்லிம் தேசிய அரசியலில் பௌசியின் பாத்திரத்தை விளங்கிக் கொள்ள முடியாத ஒருவரிடம் முஸ்லிம் தேசிய அரசியல் தொடர்பாக எப்படி பேச முடியும். திருக்குர்ஆனையும், நபிவழியையும் அரசியல் யாப்பாக வைத்துக் கொண்டிருப்பதாக அஷ்ரஃப்பும் முஸ்லிம் காங்கிரசும் சொன்னதை இறைவாக்காக நம்பியவர்களுக்கு அபூநிதாலோ என்னைப் போன்றவர்களோ எப்படிப் பதில் சொல்ல முடியும்?

மு.காங்கிரஸ் குர்ஆனையும், நபிவழியையும் யாப்பாக கொண்டிருப்பது இங்கு முக்கியமில்லை. அது உண்மையுமல்ல. இன்று மு.கா. முஸ்லிம்களின் தேசிய அரசியல் சக்தி என்ற வகையில் அக்கட்சியை ஸ்ரீ.ல.சு.க., ஐ.தே.கவில் இருந்து வேறுபடுத்தியே பார்க்க வேண்டும். முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வுக்கு உழைக்கும் அரசியல் கட்சியை ஆதரிப்பது ஒன்றும் இங்கு குடியை மூழ்க வைக்காது.

தென்கிழக்கு அலகை மட்டக்களப்பில் வாழும் நான் கூட மேலோட்டமாகப் பார்க்கும் போது எதிர்த்துத் தான் ஆகவேண்டும் என்ற வாதம் இருக்கின்றது. ஆனால், அரசியல் தீர்வு ஒன்று வரும் போது தனிமுஸ்லிம் மாகாணம் பெறப்பட முடியாது போனால், தென்கிழக்கை நான் ஆதரிக்கின்றேன். தென்கிழக்குத் தான் முதலில் பெறப்பட சாத்தியமிருந்தால் அதனை முஸ்லிம்கள் பெற்றுக் கொள்ளவேண்டும். இதைத் தான் அபூநிதாலும் வலியுறுத்துகிறார்.

இங்கு அஷ்ரஃப்போ பௌசியோ முக்கியமல்ல. மிகவும் முக்கியமானது முஸ்லிம்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்பதே. இதற்காக உழைப்பவர்கள் ஆகக்குறைந்த முயற்சி செய்பவர்கள் முஸ்லிம் தேசத்தின் குரல்களே. அஷ்ரஃப்பும் மு.காவும் இன்று புறக்கணிக்க முடியாதது என்று அபூநிதால் கருதுவதாக நான் அவரது எழுத்தைப்படிக்கும் போது உணர்கிறேன். இதுவே சரியான நிலைப்பாடுமாகும்.

சரிநிகரில் தொடராக எழுதிவரும் அபூநிதாலின் கட்டுரைகளை முஸ்லிம் சமூகம் ஒரு நூலாகக் கொண்டு வர வேண்டுமென்பதை நான் விரும்புகிறேன். அதற்கான முயற்சியின் ஆரம்பமாக உங்களுடன் வெகு விரைவில் பேசுவதற்கு வரவுள்ளேன். அபூநிதாலை சந்திப்பதற்கு உங்கள் உதவி தேவை.

***முசாதிக் குத்தூஸ்,***
*புதிய காத்தான்குடி*

# தமிழ் இலக்கியக் குழுவில் எனது அங்கத்துவம் பற்றி..

ஏ.எல்.ஹசீன் என்பவர் எழுதிய ஈழத்து தமிழ் இலக்கிய சூழலின் அவலமும் தேக்கமும் யார் பொறுப்பு என்ற கட்டுரையில் (சரிநிகர் 153) எனது பெயர் சில இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டுரையாசிரியரின் வாதத்தில் உள்ள தார்மீக நியாயத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். எனினும், இலங்கைக் கலைக் கழகத்தின் தமிழ் இலக்கியக் குழுவில் எனது அங்கத்துவம் பற்றிய விடயத்தை நான் தெளிவு படுத்த வேண்டியுள்ளது.

புதிய அரசு நியமித்த முதலாவது தமிழ் இலக்கியக் குழுவில் நானும் ஒரு உறுப்பினனாக இருந்து சுமார் மூன்று வருடங்கள் - 1997வரை செயற்பட்டிருக்கிறேன். அக்குழுவின் தலைவராக பேராசிரியர் தில்லைநாதன் இருந்தார். கு.சோமசுந்தரம், வித்துவான் வேலன், எம்.எம்.சமீம், சு.முரளீதரன், ரவீந்திரன் ஆகியோர் ஏனைய உறுப்பினர்கள். ஒரு குழுவின் ஆயுட்காலம் மூன்று வருடங்கள் என்ற வகையில் 1997 பிற்பகுதியில் (சரியான திகதி ஞாபகம் இல்லை) எமது குழு கலைக்கப்பட்டதாகவும், புதிய குழுவொன்று நியமிக்கப் பட்டதாகவும் கேள்விப்பட்டேன்.

புதிய குழுவுக்கு முன்னாள் தினகரன் ஆசிரியர் இ.சிவகுருநாதன் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டதாகவும் அறிந்தேன். புதிய குழுவில் பழைய குழு உறுப்பினர்கள் சிலரும் இடம் பெற்றிருப்பதாகவும் பின்னர் அறிய முடிந்தது. கொழும்பில் நண்பர் நீர்வை பொன்னையன் சொல்லித்தான் எனது பெயரும் புதிய குழுவில் இருப்பது தெரியவந்தது. சில வாரங்களின் பின் உரிய நியமனக் கடிதமும் வந்து சேர்ந்தது. முதலாவது கூட்டத்துக்கான அழைப்புக் கடிதமும் கிடைத்தது. ஆயினும் புதிய குழுவில் இணைந்து செயற்படும் அக்கறையும் ஆர்வமும் எனக்கு இருக்கவில்லை. நான் நியமனத்தை முறைப்படி ஏற்றுக் கொள்ளவோ, இலக்கியக் குழுவின் கூட்டங்கள் எதிலும் கலந்து கொள்ளவோ இல்லை. ஒருவர் மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ச்சியாகச் சமூகம் அளிக்காவிட்டால் அவர் உறுப்புரிமையைத் தானாவே இழந்து விடுவார். அவ்வகையில் நான் தமிழ் இலக்கியக் குழுவில் உறுப்பினன் அல்ல. இப்போது எனக்குக் கூட்டத்துக்கான அழைப்புக் கடிதங்களும் வருவதில்லை. புதிய இலக்கியக் குழுவோடு எனக்கு எவ்வித தொடர்பும் இதுவரை இருக்கவில்லை என்பதைப் பகிரங்கமாகத் தெரிவிக்க விரும்புகின்றேன். அவர்களுடைய பெயர்ப் பட்டியலில் இன்னும் எனது பெயர் இருந்தால் அதற்கு நான் பொறுப்பு அல்ல.

இலங்கையின் சுதந்திரப் பொன் விழாவை ஒட்டி மும்மொழிகளிலும் நூல் வெளியிடும் கலைக் கழகத்தின் திட்டத்தின் அடிப்படையில் தமிழில் ஈழத்துச் சிறுகதைத் தொகுப்பு ஒன்றை வெளியிடும் பொறுப்பு முதலில் எமது குழுவிடமே ஒப்படைக்கப்பட்டது. பேராசிரியர் சி.தில்லைநாதனும், நானும் நண்பர் க. அருணாசலமும் சேர்ந்து பல்வேறு பிரதேசங்களையும், சமூகங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் முக்கியமான எழுத்தாளர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்திருந்தோம். பலருடைய சிறுகதைகளையும் தேர்வு செய்திருந்தோம். இடையில் திடீரென குழு கலைக்கப்பட்டதால் அப்பணி தொடரவில்லை. புதிய குழு அவசரமாக ஏதோ செய்து தொகுப்பொன்றை வெளியிட்டுள்ளதாகத் தெரிகிறது. அதை நான் இன்னும் பார்க்கவில்லை. ஆயினும், விடுபட்டுள்ளோரின் பட்டியலைப் பார்க்கும்போது தொகுப்பின் தன்மையைப் புரிந்து கொள்ள முடிகிறது. தொகுப்பாளர்கள் இன்னும் பொறுப்புடனும் கவனத்துடனும் செயற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகின்றது. எனினும் இத்தகைய தொகுப்பு முயற்சிகள் எப்போதும் சர்ச்சைக்குரியவைகள் என்பதையும் இவற்றை விமர்சிப்பவர்கள் மனம் கொள்ள வேண்டும். தொகுப்பாளரின் ரசனை, சார்புநிலை, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், நிறுவனத்தின் நிபந்தனைகள் காலவரையறை போன்ற பல காரணிகள் தொகுப்பின் தன்மையைத் தீர்மானிக்கின்றன.

குறிப்பிட்ட சிறுகதைத் தொகுப்பின் தொகுப்பாளர்களான டொமினிக் ஜீவா, திக்வல்லை கமால், தெளிவத்தை ஜோசப் ஆகியோரின் தகைமை கேள்விக்குரியதல்ல. இவர்கள் ஈழத்துச் சிறுகதை உலகில் நன்கு கால் ஊன்றியவர்கள் முக்கியமான சிறுகதை ஆசிரியர்கள். ஆயினும், சட்டநாதன், ரஞ்குமார், உமாவரதராஜன், எம்.எல்.எம் மன்சூர் ஆகியோரின் கதைகள் இடம் பெறாத சமகால ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பு ஒன்றை வெளியிட முடியும் என்று இவர்கள் கருதிச் செயற்பட்டிருந்தால், அது மிகுந்த விசனத்துக்குரியதும், ஏமாற்றம் தருவதுமாகும்.

***எம்.ஏ.நுஃமான்***

# தமிழ் பேசும் இராணுவத்தினர்

வவுனியாவில் புளொட் இயக்கத்தினர் மேற்கொள்ளும் அட்டூழியம், அடாவடித்தனங்களை 'சரிநிகர்' துணிச்சலுடன் கட்டுரைகளாக வெளியிட்டுக் கொண்டிருப்பதைப் பாராட்டுகிறோம். வவுனியாவில் இயங்கும் மனித உரிமை அமைப்புகள், தொண்டர் தாபனங்கள், கழக கண்மணிகள் மேற்கொள்ளும் அட்டகாசங்களைக் கண்டும் காணாதது போல் இருந்து வருகின்றன. இவர்கள் தங்களை ''ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி'' என்று கூறிக் கொண்டு, கைது செய்யும் அப்பாவி இளைஞர்களுக்கு 'விடுதலை' வழங்குவதில் முன்னணியில் திகழ்கின்றனர். வவுனியாவில் இவர்களால் பல இளைஞர்கள் காணாமல் போய்க் கொண்டிருக்கும் வேளையில் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்களுக்காக உண்ணாவிரதங்களையும், அறிக்கைகளையும், விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அண்மையில், 1990ம் ஆண்டுக்குப் பின்பு வந்த மக்களை தங்கள் முகாம்களுக்கு அருகில் இருக்காமல் வேறிடம் சென்று இருக்கும்படி கூறி ஒரு மாத அவகாசமும் தந்துள்ளனர். இதனால் இடம்பெயர்ந்து வந்த 600க்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. கழக கண்மணிகளுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்றால் மட்டக்களப்பில் இருப்பது போன்று இராணுவ முகாம்களுக்கு அருகில் போய் இருக்கலாமே. அதை விடுத்து மக்களை வேறிடம் போய் இருக்க கூறுவது எவ்வகையிலும் நியாயமாகாது. இராணுவத்தினரைப் போன்றே இவர்களும் தமிழ் மக்களுக்கு இன்னல்களை விளைவிப்பதால் இவர்களை தமிழ் பேசும் இராணுவத்தினர் என்று கூறுவதில் தவறில்லை என்றே நினைக்கின்றேன்.

***ப.நந்தகுமார்,*** *வவுனியா*

# தமிழ்...

1987க்குப் பின்பு ஆயுதமேந்திய ஈழப்பிரிவினைக்காகப் போராடியவர்கள் ஆயுதமேந்தி ஈழப்பிரிவினைக் காகப் போராடுகிறவர்கட்கு எதிராக அரசுடன் சேர்ந்து போராடுகிற ஒரு நிலையின் பல்வேறு தோற்றப் பாடுகளை நாம் கண்டுள்ளோம்.

விடுதலை இயக்கங்கள் என்பன பல கூலிப்படை ஒன்றின் தரத்திற்கு இறங்கியுள்ளதையும் காண்கிறோம். இந்த நாட்டினதோ இன்னொரு நாட்டினதோ, ஆட்சியாளர்கள் வழங்கும் சன்மானத்தை நம்பி அரசியல் நடத்துகிற எந்த இயக்கமும் தனது மக்களுக்கு விசுவாசமாக இருக்க முடியுமா என்பது ஒரு பெருங்கேள்வி. இங்கும் கூட்டணி இவர்கட்கு ஒரு முன்மாதிரியாகவே நடந்துள்ளது.

இன்று தமிழ் மக்கள் வேண்டுவன அமைதி, பாதுகாப்பு, அடிப்படை உரிமைகள், தமது அடையாளம் பேணும் உரிமை, பொருளாதார அபிவிருத்திக்கான நியாயமான வாய்ப்பும் வசதியும் என்பன. சுருங்கச் சொன்னால் ஒரு தேசிய இனமாகத் தமது இருப்பைப் பேணும் அதிகாரம், அதாவது சுயநிர்ணய உரிமை மட்டுமே ஈழத்தமிழ் மக்களது இன்றைய தேவைகளை நிறைவு செய்ய முடியும். சலுகைகட்காகப் பேரம்பேசும் அரசியல் மூலம் சுயநிர்ணயம் கிட்டாது. கடந்த ஐம்பது வருடங்களும் இதைக்கற்பித்திராதவர்கட்கு இன்னும் ஐநூறு வருடங்களும் எதையும் கற்பிக்க மாட்டா.

மறுபுறம், மக்களின் விடுதலையை ஆயுதங்கள் மட்டுமே வென்று தருவதில்லை. மக்களே வரலாற்றை உருவாக்குவோர்; மகான்களோ மேதைகளோ அல்ல. எந்த உன்னதமான தலைமையும் மக்கள் என்ற வரலாற்றின் உந்து சக்தியை மதிக்காமல் எதையுமே வென்றெடுக்க உதவ முடியாது. மக்கள் யுத்தம் என்ற கருத்தாக்கம் உரிய ஓர் போர்முறை மட்டுமல்ல, அதி உன்னதமான அரசியல் மார்க்கமுங் கூட.

பழைய, குறுகிய தேசியவாத வாய்ப்பாடுகட்கும் அப்பால் தமிழ் மக்களது இனவிடுதலைப் போராட்டதிற்கான தீர்வை நாங்கள் தேட வேண்டியுள்ளது. ஒரு நியாயமான போராட்டம் ஐக்கியப்படுத்த வேண்டி சக்திகளின் எல்லை மிகவும் விரிவானது.

○

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல.04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.
தொலைபேசி : 593615, 584380
தொலைமடல் : 594229


## ஒரு கோரிக்கை!

"நாம் பத்திரிகையாளர்களை கொலை செய்து விட்டு அவர்களது உடல்களை விமானமூலம் கடற்கரையில் போட மாட்டோம்."

இந்தப் புகழ் பெற்ற வாசகம் நமது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அவர்களால் 1995 மே மாதத்தில் திருவாய் மலர்ந்தருளப்பட்டது. அவரது இத் திருவாசகம் மொழியப்பட்டு இரண்டே மாதங்களுக்குள் குருநாகல் மாவட்டத்தில் சிதைந்த நிலையில் ஐந்து உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து பொல்கொட வாவியில் பதினொரு சடலங்கள் மிதந்து வரக் காணப்பட்டன. இந்த உடல்கள் அனைத்தும் அதுவரை காணாமல் போன தமிழ் இளைஞர்களது சடலங்கள் என்று சந்தேகிக்கப்பட்டன.

கொழும்பு புல்லர்ஸ் வீதியிலுள்ள விசேட அதிரடிப்படை முகாம் தான் இக் கொலைகளுக்குக் காரணம் என்றெல்லாம் தகவல்கள் பத்திரிகைகளில் வெளியாகின. அக் கொலைகளின் பின்னணி பற்றி அம்பலப்படுத்தும் கட்டுரைகளையும், செய்திகளையும் சரிநிகரும் வெளியிட்டிருந்தது. இந்தக் கொலைகளுடன் சம்பந்தப்பட்ட முக்கிய புள்ளிகளுக்கும் அரசாங்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக நம்பப்பட்டதால் இவை தொடர்பான விசாரணைகள் தொடர வாய்ப்பில்லை என்றும் சரிநிகர் அச்சம் தெரிவித்திருந்தது.

ஆனால் ஜனாதிபதி சொன்னது போல விமானமூலம் சடலங்கள் வீசப்படவில்லையே தவிர படுகொலைகள் தொடர்ந்தன. சரிநிகர் அச்சம் தெரிவித்தது போலவே அநேகமாக எல்லா விசாரணைகளும் கூட பொல்கொட வாவியில் வீசப்பட்டன.

காரணம் எதுவுமின்றிக் கைது செய்தல், கைது செய்ததை நியாயப்படுத்த பின்னர் காரணங்களைச் சோடித்தல், சோடித்த காரணங்களை வாக்குமூலங்களாக மிரட்டி கையொப்பமிடுவித்து அறிவித்தல். இந்த் பணியின் போது அடி, உதை, சித்திரவதைகளுக்குள்ளாகி மரணமானவர்களை வாவியில் வீசிவிடல் அல்லது தப்பிபோடிய போது சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அறிவித்தல் என இவ்வரசாங்க கால ஜனநாயகப் பணிகள் வழமைபோல் தொடர்கின்றன.

கடந்த வாரம் கொழும்பில் வைத்து காரணம் எதுவுமின்றி செய்தியாளரும், இலக்கியப் பத்தியாளரும் ஆன மதுசூதனன் கடத்திச் செல்லப்பட்டார். இதற்கு இரண்டே மாதங்களுக்கு முன்னர் வீரகேசரியைச் சேர்ந்த மூன்று பத்திரிகையாளர்கள் பிடித்துச் செல்லப்பட்டனர்.

இந்த இதழில் செஞ்சிலுவைச் சங்க சாரதியொருவர் புலிகள் பற்றிய தகவல்களை தெரிவிக்கவில்லை என்பதற்காக கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறையில் தள்ளிவிடப்பட்டுள்ளார் என்ற ஒரு தகவலும் வெளியிடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச படைகளின் அனுசரணையுடன் குண்டர் கோஷ்டிகளினால் தொடர்ச்சியான கொலைகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இவையெல்லாம் ஜனநாயகத்தை மீட்டெடுத்து விட்டதாக மார் தட்டும் இலங்கை அரசாங்கத்தின் சாதனைகள். கொலைகள், மனித உரிமை மீறல்கள், இளைஞர்கள் மீதான தாக்குதல்களும், கைதுகளும் என்று நீளும் அரசாங்க சாதனைகள் தெட்டத் தெளிவான இன ஒதுக்கற் சாதனைகளாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. 1983ல் இன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன நடந்து கொண்டதற்கு சற்றும் நேர்மாறற்ற விதத்தில் நடந்து கொள்கிறார் இன்றைய ஜனாதிபதி சந்திரிகா. இந்த இலட்சணத்தில் தென்னாபிரிக்காவில் கருப்பு இன மக்களின் விடுதலைக்காக போராடிய நெல்சன் மண்டேலாவுடன் கைகுலுக்க அவர் டேர்பனுக்குப் போயிருக்கிறார். யுத்தம் அவரதும், அவரது அரசாங்கத்தினதும், அதன் ஆயுதப் படைகளதும் எல்லா நடவடிக்கைகளையும் நியாயப்படுத்த போதுமான ஒரு காரணியாகி விட்டது. அல்லது இந் நடவடிக்கைகளை நடாத்த யுத்தம் ஒரு வாய்ப்பாகப் போய்விட்டது.

இதுதான் இன்றைய அரசு இலங்கை வாழ் மக்களுக்கு வழங்கியுள்ள சமாதானப் பரிசு.

இந்தப் பரிசை அவர்களுக்கு வாங்கித் தருவதற்காக மூச்சு விடாமல் அதனோடு நின்று ஒத்துழைத்துப் போராடுகிற தமிழ் "விடுதலை" இயக்கங்களைச் சேர்ந்தவர்கள். கூடவே ஜனநாயக வழி நிற்பதாக கூறும் கூட்டணியினரும்.

தமிழ் மக்களது வாழ்விடம் பறிக்கப்பட்டது, வதிவிடம் தகர்க்கப்பட்டது, வழியின்றி அவர்கள் போய் சேரிடங்களும் தடுக்கப்பட்டன. அகதி முகாம்களுள் சிறை வைக்கப்பட்டனர் அவர்கள். வழங்கப்பட்ட நிவாரணமும் குறைக்கப்பட்டு அவர்கள் பட்டினி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அருண்டவனின் கண்ணாக மாறிவிட்ட அரசாங்கத்தின் விழிகள். அதன் கண்களில் படும் தமிழர் எல்லோரும் புலிகள். ஆனால் தமிழ்க் கட்சிகளும் தமிழ் ஜனநாயகம் பேசும் சமாதானவாதிகளும் அரசாங்கத்திற்கு இன்னமும் முண்டு கொடுத்தபடி. மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்க வேண்டிய அவர்களது குரல்கள் அவர்களுக்கு வாழ்த்து பாடவும், நியாயம் கற்பிக்கவும் செய்கின்றன.

ஜனநாயக மறுப்புக்கும் இன ஒதுக்கலுக்கும் எதிராக உயர வேண்டிய அவர்களது முஷ்டிகள் குட்டிக் கும்பிட்டு தெண்டனிட்டு ஏதாவது எச்சிற் பருக்கைகளை பெற்றுவிடத் துடிக்கின்றன.

மக்கள் மட்டும் நடுத்தெருவில்!

மக்களே நடுத்தெருவில் நிற்கும் போது பத்திரிகையாளர்களுக்கு மட்டுமென்ன விதிவிலக்கு? அவர்களுக்கு நடுத்தெருவே கொலைக்களத்துக்கான திறவுவாயாக ஆகிவிட்டுள்ளது. நியாயம் கோரி மக்களின் குரலாக ஒலிக்கும் அவர்கள் பணிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாக இது வெளிப்படுகிறது. அதுவும் குறிப்பாக தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு எதிராக.

மதுவின் கடத்தல் இதற்கு இன்னொரு அடையாளம் மட்டுமே!

இன்று எம்முன்னுள்ள முக்கியமான கேள்வி இது தான்.

இந்த நடுத்தெரு மக்கள் எழுந்து நியாயம் கேட்டு தமது முஷ்டியை உயர்த்தப் போவது எப்போ? அதற்கான சக்தியை அவர்களுக்கு ஊட்டும் அக்கினித் தீயை எழுத்தில் தர இங்குள்ள எழுத்தாளர்கள் தம் பேனைகளைப் பயன்படுத்தப் போவது எப்போ? கொன்றுவிட்டு விமானத்திலிருந்து வீசினால் என்ன? விமானத்திலிருந்து வீசிக்கொன்றால் என்ன? என்று தமது உரிமைக்காக பத்திரிகையாளர்கள் குரல் கொடுக்க முன் வரவேண்டும்.

அந்தக் குரலின் முழக்கம் ஒடுக்குமுறையாளர்கள் நடுங்க வேண்டும்.

சரிநிகரின் கோரிக்கை இது.

எல்லா எழுத்தாளர்களையும் மக்களையும் நோக்கிய கோரிக்கை!

## எழுத்தாளர் கடத்தல்: சோடிக்கப்படும் குற்றங்கள்!

எங்களோடு வர இருந்தவரும் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதில் மும்முரமாக இருந்தவருமான நண்பர் மது கைது செய்யப்பட்டுள்ள அவலகரமான நிலையிலேயே நாங்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் எங்களுக்கெல்லாம் கௌரவிப்பு எதற்கு? இப்படிப்பட்ட நிகழ்ச்சி தான் எதற்கு? நாங்கள் இந்த நிகழ்ச்சியையே நடத்தாமல் எமது எதிர்ப்பைக் காட்டியிருக்க வேண்டும்..."

இவ்வாறு சிறந்த சிறுகதைத் தொகுதிக்காகக் திருமலையில் நடந்த தமிழ் இலக்கிய விழாவின் போது கௌரவிக்கப்பட்ட மு.பொன்னம்பலம் அவர்கள் அங்கு பேசும் போது தெரிவித்தார். மு.பொவின் இந்தப் பேச்சு இன்றைய எமது அவலத்தைத் துலாம்பரமாக எடுத்துக் காட்டியது. மு.பொவின் இந்தப் பேச்சு அந்த மேடையிலிருந்த சிலருக்கு நாரசமாய் இருந்திருப்பினும், பெரும்பாலானோர் அதனைத் தமது இதயத்தின் குரலாகவே கண்டனர். மு.பொ. பேசி முடிந்ததும் அவரிடம் முனைவர் அரசு நீங்கள் இதனை இந்த இடத்தில் தெரிவிக்காமல் இருந்திருந்தால் நான் தெரிவித்திருப்பேன் என்றார்.

விபவி மாற்று கலாசார நிலையத்தினரால் வெளியிடப்படும் செய்தி இதழின் ஆசிரியரும், சரிநிகரில் இலக்கியப் பத்திகளை எழுதி வருபவரும், இலக்கிய எழுத்தாளருமான தெ.மதுசூதனன் கைது செய்யப்பட்டு ஒரு வாரமும் தாண்டி விட்டது.

இதுவரை பொலிஸ் தரப்பில் கைதுக்கான காரணம் எதுவும் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை.

கடந்த ஓகஸ்ட் 26ஆம் திகதி மாலை 5.50 மணியளவில் தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த முனைவர் வி.அரசு, மற்றும் ராஜேந்திரம் ஆகியோருடன் காலி வீதியில் "ஹோலி பெமிலி கொன்வண்ட்" பாடசாலைக்கு அருகில் வைத்து இனந்தெரியாத சிவில் உடை தரித்த நபர்களால் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார் மதுசூதனன்.

இந்தக் கைது எப்படி நடந்தது? பேராசிரியர் அரசு இப்படி விளக்குகிறார்: நானும் என்னுடன் தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த பேராசிரியர் இராஜேந்திரனும் நண்பர் மதுவுடன் பம்பலப்பிட்டி கிறீன்ஸ்லண்ட் ஹோட்டலிலிருந்து புறப்பட்டு காலி வீதியில் உரையாடியபடி நடந்து வந்து கொண்டிருந்தோம். கொன்வெண்ட்க்கு அருகில் வந்து கொண்டிருக்கும் போது யாரோ ஒருவர் திடீரென்று மதுவின் தோளில் கையைப் போட்டுப் பிடித்துக் கொண்டார். முதலில் மதுவின் கையைப் பிடித்தவர் அவருக்கு மிக நெருக்கமான நண்பர் யாரோ என நினைத்த போதும் மறுகணமே அந்தப்பிடி ஒரு பொலிசாருடைய பிடி என்பதை உணர்த்திற்று. நாம் சுதாகரித்துக் கொள்ள முன்னரே அவர் ஜீப்பினுள் ஏற்றப்பட்டார். மதுவைப் பிடித்து ஏற்றியவர் வெள்ளை நிற ரீ சேர்ட்டும் நீல நிற முழுக்காற்சட்டையும் அணிந்திருந்தார். ஜீப்பினுள் இருந்த ஏனையோர் சீருடையில் இருந்திருக்கிறார்கள். கணநேரத்துள் எல்லாம் நடந்து முடிந்து விட்டது. நாங்கள் அதிர்ந்து போனோம்.

பிறகு என்ன நடந்தது?

பொலிஸ் நிலையங்களுடனும், மனித உரிமைகள் அமைப்புகள் பலவற்றுடனும், தமிழ்-சிங்கள அரசியற் தலைவர்களுடனும், பத்திரிகையாளர் அமைப்புகள், வழக்கறிஞர்கள், மனித உரிமையாளர்கள் என்போரால் கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் கூட ஏறத்தாழ 17 மணித்தியாளங்கள் வரை "மது" யாரால் கொண்டு செல்லப்பட்டார்? எதற்காகக் கொண்டு செல்லப்பட்டார்? எங்கு வைக்கப்பட்டிருக்கிறார் என்பதை அறிய முடியாதிருந்தது.

பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி, கிருலப்பனை, நாரஹேன்பிட்டி என்று ஒவ்வொரு பொலிஸ் நிலையமாக விசாரித்த போதும் தாம் கைது செய்யவில்லை என்றும், தமக்கு இதுபற்றி எதுவும் தெரியாது என்றுமே பதில் கிடைத்தது. இடையில் ஒரு தடவை பம்பலப்பட்டி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கிறார் என்கின்ற ஆறுதல் செய்தியும் கூட பின்னர் விசாரித்ததில் பொய்யானது.

இறுதியில் மறு நாள் ஒரு பத்திரிகையாளர் மூலமாக பேலியகொட பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது. தகவலறிந்து மதுவைப் பார்க்கச் சென்ற தகப்பனாரை சந்திக்க பொலிஸார் விடவும் இல்லை. கைதுக்கான காரணம் எதனையும் தெரிவிக்கவுமில்லை.

கைது செய்யப்பட்ட அன்று புதிதாக ஜனாதிபதியால் தலைமை தாங்கும் வகையில் அமைக்கப்பட்ட தொல்லைத் தவிர்ப்பு குழுவுக்கு, மனித உரிமைகள் நடவடிக்கைக் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயன்ற போதும் தொலைபேசியை எடுக்க அங்கு எவரும் இருக்கவில்லை. ஆயினும் அக்குழுவின் உறுப்பினர் ஒருவருடாக அவர்களுக்குத் தகவல் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் மது மீது தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

28ஆம் திகதியன்று தொடக்கம் மது 6ஆம் மாடிக்கு சீ.ஐ.டி.யின் தலைமையகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு இன்று வரை அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதே வேளை திறந்த பல்கலைக்கழகத்தில் கற்கும் மதுவின் இரு சகோதரர்களும் வீட்டில் வைத்து மது ராகவன் (23), மது சொருபன் (22) கைது செய்யப்பட்டு அவர்களும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து மனித உரிமைகள் நடவடிக்கைக் குழு எனும் அமைப்பு சர்வதேச ரீதியில் பல மனித உரிமைகள் அமைப்புகளுக்கு தெரிவித்து ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபந்தி, தொல்லைத் தவிர்ப்பு குழுவின் செயலாளர் அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி போன்றோரின் விலாசம், பெக்ஸ் இலக்கம் என்பவற்றை வெளியிட்டு, இந்த மோசமான அடிப்படை உரிமை மீறலை எதிர்த்து பொறுப்புமிக்கவர்களை நடவடிக்கை எடுக்கக் கோரும்படி சகல மனித நேய அமைப்புகளையும் வேண்டி இன்டர்நெட், மற்றும் ஈ.மெயில் என்பவற்றுக்கூடாக சர்வதேச ரீதியில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதனைச் செய்து இரு நாட்களுக்குள் அதாவது செப்டம்பர் 1ஆம் திகதியன்றிலிருந்து ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணைக்குழு "அக்கடிதம் தங்களுக்கு கிடைத்தமை குறித்தும் அதன்மீது முறைப்படி நடவடிக்கை எடுக்கத் தொடங்கியிருப்பதாகவும் மேற்படி இயக்கத்துக்கு பதிலளித்துள்ளது. கனடாவைச் சேர்ந்த இனவெறிக்கெதிரான கலைஞர்கள் (Artists Against Racism) என்ற அமைப்பு தம்முடன் தொடர்புடைய அமைப்புகளுக்கூடாக இதனை மேற்கொள்வதாகவும் மேலதிகமாக தெரிவிக்க வேண்டிய சர்வதேச அமைப்புகளின் முகவரிகளையும், இன்டர்நெட் வெப்தள மற்றும் ஈ.மெயில் விலாசங்களையும் கொடுத்துள்ளது.

இது போன்ற இன்னுமொரு அறிக்கையை தொல்லைத் தவிர்ப்புக் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள சுதந்திர பத்திரிகையாளர் இயக்கம் சகலரையும் விழிப்புடன் இதனை கண்டிக்கும்படி கோரியிருக்கிறது. இவ்வமைப்பும் மேற்படி கண்டனங்களை தொடர்புசாதன அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும், நீதி அமைச்சர் ஜீ.எல்.பீரிசுக்கும் அறிவிக்கும்படி கோரி அவ்வறிக்கையில் அமைச்சர்களின் விலாசங்களைக் குறிப்பிட்டுள்ளது.

வழமைபோல சிங்கள பத்திரிகைகளின் அழுத்தம் அக்கறை குறைவான போதிலும் இந்தளவு ஆதரவுச் சக்திகளும் இருப்பது தமிழ் பத்திரிகையாளர்களை ஓரளவு நம்பிக்கை கொள்ள வைத்திருக்கிறது என்றால் அது மிகையில்லை.

மதுவை விடுதலை செய்வதற்கு இவ்வளவு முயற்சிகள் செய்யப்பட்டு வரும் இதே வேளை பொலிஸார் தரப்பில் புதிய புதிய சோடனைக் கதைகள் மாறி மாறி வெளிவந்து கொண்டிருக்கின்றன. உத்தியோகபூர்வமாக இதுவரை எதனையும் தெரிவிக்காத பாதுகாப்புத் துறையினர் வெவ்வேறு தரப்பினருக்கு தெரிவித்துள்ள கருத்துக்கள் வேடிக்கையானவை. ஆரம்பத்தில் தமிழ் நாட்டிலிருந்து இலங்கை வந்த பேராசிரியர்களை புலிகளின் பிரதேசங்களுக்கு அழைத்துச் செல்வதாக தொலைபேசியின் மூலம் உரையாற்றியதை தாங்கள் பதிவு செய்து வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். ஆனால் முனைவர் அரசு அவர்களிடம் இது குறித்து வினவிய போது "நான் வந்தது தொடக்கம் அவரை தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியமே இருக்கவில்லை. மது எங்களுடன் தான் அதிக நேரம் இருந்தார். பின்னர் எப்படி தொலைபேசி உரையாடலை பதிவு செய்ததாக தெரிவிப்பர்? அது நிச்சயம் பொய்..!" என்றார்.

கைது செய்யப்பட்ட பாதாளலோக நபர் ஒருவருக்கும் மதுவுக்கும் தொடர்பு இருக்கிறது. அதனால் தான் மது கைது செய்யப்பட்டதாக இன்னொரு தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

புலிகளுடைய அரசியற் பிரிவுக்கும் மதுவுக்கும் தொடர்பிருப்பதாக இன்னொரு தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இறுதியாகக் கிடைத்த இன்னொரு தகவல் பொலிஸார் எவ்வாறு மொட்டந் தலைக்கும் முழங்காலுக்குமிடையே முடிச்சுப் போடுவார்கள் என்பதை விளக்குகிறது. தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கும் பேராசிரியர் இராஜேந்திரன் தி.மு.க கருணாநிதிக்கு நெருக்கமானவர். கருணாநிதி திராவிட கழக நெடுமாறனுக்கு நெருக்கமானவர். நெடுமாறன் புலிகளுக்கு நெருக்கமானவர். ஆக, மதுவுக்கும் புலிகளுக்கும் உறவு இருக்கிறதாம். எப்படி இருக்கிறது பொலிஸாருடைய கன்டுபிடிப்பு?

இவையெல்லாம் மதுவைக் காரணமின்றிக் கைது செய்த பொலிஸார் ஏதாவது காரணம் ஒன்றைச் சோடிக்க முயல்வதைக் காட்டுகிறது அல்லவா?

இது மதுவுக்கு மட்டும் நேரும் விடயமல்ல. இன்று கைது செய்யப்படுகிற பெரும்பாலான தமிழ் இளைஞர் யுவதிகளின் நிலையும் இது தான்.

கைது செய்யப்படும் போது கைதுக்கான காரணத்தைத் தெரிவிக்கும் பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும், கைது செய்யப்படுபவர் காரணமின்றி தடுத்து வைக்கப்படுதல் தவிர்க்கப்பட வேண்டும். கைது செய்யப்பட்டவரை அவருடைய நெருங்கிய உறவினரோ, சட்டத்தரணியோ பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுக் கொண்டே போகும் அப்பாவிகள் தண்டிக்கப்படலாகாது எனும் நோக்கிலான விடயங்கள் எவையும் இன்னமும் கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரியவில்லை. இலங்கையில் பணியாற்றும் மனித உரிமை நிறுவனங்களும் இது தொடர்பாக அவை விடுத்த அறிக்கைகளையும், மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அரசு கண்டு கொண்டதாகவே தெரியவில்லை.

இலங்கையின் சிங்கள பௌத்த பேரினவாத அரசிடம் - அது எவ்வளவு தான் மனிதாபிமான முகமூடியை அணிந்து கொண்ட போதும் - நீதியை எதிர்பார்ப்பது மடமை அல்லவா என்று நீங்கள் சொல்வது புரிகிறது.

இதைப் புரிந்து கொள்ள வேண்டியவர்கள் புரிந்து கொண்டால் சரி!

— சசி

## இன்னும் விடுவிக்கப்படவில்லை !

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் கிளிநொச்சி, தர்மபுரத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு, எவருக்கும் தெரியாத இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும், சோசலிச சமத்துவக் கட்சியின் வன்னிப் பிராந்திய உறுப்பினர்களான பரமு திருஞானசம்பந்தன், இராஜேந்திரன் சுதர்சன், காசிநாதன் நகுலேஸ்வரன் ஆகிய மூவரும் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை விடுவிக்கப்படவில்லை எனவும், அவர்களுக்கு உயிர் ஆபத்து ஏற்படலாம் எனத் தாம் அஞ்சுவதாகவும் அக் கட்சி *சரிநிகர்*இற்குத் தெரிவித்துள்ளது.

சோசலிச சமத்துவக் கட்சி அந்த மூவரையும் விடுவிக்கக் கோரிக் கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றையும், கொழும்பு அரசாங்க இலிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் பகிரங்கப் பொதுக் கூட்டம் ஒன்றையும் 18. 08. 1998 அன்று நடாத்தியுள்ளது.

மேலும் *சரிநிகர்* இதழ் 153 இன் இதே விடயம் தொடர்பான செய்தியின் 04 ஆம் பந்தியில் உள்ள "செல்லையா இராஜேந்திரன்" என்ற பெயரைச் "செல்லையா இராஜ்குமார்" என்று திருத்தி வாசிக்கவும்.

- எஸ். ஆர்.


வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன். இல. 18/02. அலோ சாலை. கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : பிறின்ற் இன். இல. 07. கெகடிய இடம். சிறிமல் உயன. இரத்மலானை. 01.09.1998